

# வாருங்கள் காஞ்சியை தரிசிப்போம்!

தமிழ்நாட்டின் கோவில் நகரம் என்றதும் எல்லாருக்கும் காஞ்சீபுரம்தான் நினைவுக்கு வரும்.

அங்கு தெருவுக்கு தெரு கோவில்கள் உள்ளன. பொதுவாக புகழ்பெற்ற பெரியகோவில் ஒன்று இருந்தால், அதை சுற்றி நகரம் உருவாகி இருக்கும். ஆனால் காஞ்சீபுரத்தில், நகரமே கோவில்கள் மயமாக உள்ளது.

ஒன்றல்ல, இரண்டல்ல நூற்றுக்கும் மேற்பட்ட கோவில்கள் அங்கு இருக்கின்றன. இந்த ஆலயங்கள் எல்லாம் சமீப நூற்றாண்டுகளில் தோன்றியவை அல்ல.

ஒவ்வொரு கோவிலும் ஆயிரம் ஆண்டுகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. சில கோவில்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொன்மை சிறப்புடன் உள்ளன.

அந்த காலக்கட்டத்தில் காஞ்சீபுரத்தில் 1008 சிவாலயங் களும் 108 திவ்ய தேசங்களும் இருந்தனவாம்.

ஒரே இடத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோவில்கள் இருந்ததை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள், பிரமிப்பாக இருக்கும்.

தற்போது ஒரு ஊர் கோவிலை நிர்வாகம் செய்யவே அந்த ஊர்க்காரர்கள் அல்லல்படும் நிலையில் காஞ்சீபுரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோவில்களில் நித்திய பூஜையுடன் ஆன்மீக மனம் வீசியதை நினைக்கும் போது ''இது எப்படி சாத்தியமாயிற்று?'' என்று ஆச்சரியம் ஏற்படுகிறது.

இந்த கோவில்களை நம் முன்னோர்கள் சும்மா கட்டவில்லை. ஒவ்வொரு கோவிலின் பின்னணியிலும் அதாவது தலம், தீர்த்தம், மூர்த்தி மூன்றுடனும் ஒரு புராண நிகழ்வைத் தொடர்புபடுத்தி கட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த புராண நிகழ்வுகளை தொகுத்து ''காஞ்சீபுரம் புராணம்'' என்று வெளியிட்டுள்ளனர். அதை படிக்கும் போது, சைவ, வைணவ கடவுள்களின் முக்கிய திருவிளையாடல்கள் எல்லாம் காஞ்சீபுரத்தில் அரங்கேறி இருப்பது தெரிய வருகிறது.

இத்தகைய சிறப்புடைய காஞ் சீபுரத்தில் கால ஓட்டத்தில் பல கோவில்கள் பராமரிப்பின்றி மறைந்து விட்டன. தற்போது காஞ்சீபுரத்தில் 108 சிவாலயங்கள், 14 திவ்ய தேசங்கள் உள்பட சுமார் 150 கோவில்களே உள்ளன.

இவற்றில் சைவத்தின் மேன்மையை கூறும் ஏகாம்பர நாதர் ஆலயம், வைணவத்தின் சிறப்பை பறைசாற்றும் வரதராஜ பெருமாள் கோவில், சக்தி பீடங்களில் முதன்மையானதாகக் கருதப்படும் காமாட்சி அம்மன் கோவில் ஆகிய 3 தலங்கள் மட்டுமே இன்றளவும் அதிக பக்தர்கள் வந்து செல்லும் வகையில் புகழ் பெற்ற தலங்களாக உள்ளன.

மற்றபடி 90 சதவீத தலங்களுக்கு பக்தர்கள் செல்வது குறைவாகவே உள்ளது. இதனால் அந்த ஆலயங்கள் முறையான பராமரிப்பு இல்லாமல் சிதிலமடைந்தும், குப்பைகள் சேர்ந்த நிலையிலும் காணப்படுகின்றன.

இந்த ஆலயங்களில் குடமுழுக்கு நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை கேள்விப்பட்ட போது வேதனையாக இருந்தது.

தமிழர்களின் கலை சிறப்பை வெளிப்படுத்தும் அரிய சின்னங்களான இவைகளில் சில மட்டும் தொல்லியல் துறை பாதுகாப்பில் இருக்கின்றன. மற்ற தலங்களில் சில பரம்பரை அறங்காவலர்களின் பராமரிப்பில் இருக்கின்றன.


என்றாலும் 99 சதவீத கோவில்கள் உழவாரப் பணி செய்ய வேண்டிய நிலையில்தான் உள்ளன.

இந்த ஆலயங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகையில் புண்ணிய பலன்களை தரவல்லவை. இந்த ஆலயங்களில் காலடி எடுத்து வைத்தாலே நம்மிடம் ஒட்டிக் கொண்டிருக்கும் தோஷங்களை விரட்டி விடும் மகத்தான ஆற்றல் கொண்டவை.

காஞ்சீபுரத்தில் உள்ள தலங்களின் புராண வரலாற்றை புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ப வழிபாடு செய்தால் வாழ்வில் நீங்கள் வேறு எந்த பரிகாரங்களும் செய்ய வேண்டியதே இருக்காது.

இப்படிப்பட்ட பொக்கிஷமாக இருக்கும் புனித தலங்களை நம் அருகிலேயே வைத்துக் கொண்டு, நாம் தரிசனம் செய்யாமல் இருக்கலாமா?

ஒரு தடவை சென்று வந்தாலே, வாழ்வை ஓங்கச் செய்யும் இந்த தலங்கள் பற்றி தித்திக்கும் தீபாவளி திருநாளில் உங்களுக்காக மாலைமலர் தொகுத்து வழங்கியுள்ளது. படித்து பலன் பெற வாழ்த்துக்கள்.




முக்கிய கோவில்களை காட்டும் வரைபடம்

# சங்கு பாணி விநாயகர்



காஞ்சீபுரம் நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட கோவில்கள் உள்ள போதிலும் விநாயகரை வணங்கிய பிறகே எந்த காரியத்தையும் தொடங்க வேண்டும் என்ற ஐதீகம் உள்ளது.


காஞ்சீபுரத்தில் 25–க்கும் மேற்பட்ட விநாயகர் கோவில்கள் இருக்கின்றன. அவற்றுள் மக்கள் மனதில் இடம் பிடித்த தலமாக ''சங்கு பாணி விநாயகர்'' ஆலயம் உள்ளது.

காஞ்சீபுரம் நகர மக்கள் புதிய செயல்களை தொடங்கும் முன்பு இந்த தலத்துக்கு வந்து வழிபாடு செய்யத் தவறுவது இல்லை. இத்தல விநாயகர் சங்கில் இருந்து தோன்றியதால் அவருக்கு சங்கு விநாயகர் என்று பெயர் வந்ததாம். உலகளந்த பெருமாள், அபிராமேஸ்வரர் கோவில்களுக்கு மிக அருகில் இந்த விநாயகர் வீற்றிருக்கிறார்.

காஞ்சியில் புதிதாக வாகனம் வாங்குபவர்கள் சங்கு பாணி விநாயகர் முன்பு அதை நிறுத்தி பூஜிப்பதை வழக்கத்தில் வைத்துள்ளனர். மிக, மிக சிறிய அறைக்குள் சங்கு பாணி விநாயகர் வீற்றிருக்கிறார்.

இந்த ஆலயம் ஒரே ஒரு பிரகாரத்துடன் மட்டுமே உள்ளது. பிரகார இடது பக்க மூலையில் சனீஸ்வரன் தனி சன்னதியில் உள்ளார். சனிக்கிழமைகளில் இவரை தரிசனம் செய்து அருள் பெற தொலை தூரங்களில் இருந்தெல்லாம் மக்கள் வருகிறார்கள். காஞ்சீபுரத்தில் ஆன்மீக சுற்றுலா மேற்கொள்ள விரும்பும் அன்பர்கள் இவரை வணங்கி தங்கள் யாத்திரையைத் தொடங்கலாம்.

அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவிலிலும் சக்தி வாய்ந்த வலம்புரி விநாயகர் வீற்றிருந்து அருள் செய்கிறார். தனி சன்னதியில் உள்ள இவரையும் வழிபட்டால் உங்கள் தொடக்கங்கள் எல்லாம் வெற்றி கலந்த சுபமாகவே முடியும்.





# ஏகாம்பரநாதர் கோவில்

இந்தியாவில் உள்ள 7 முக்தி தரும் தலங்களில் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோவிலும் ஒன்று. இத்தலம் காஞ்சியில் சிறப்புற அமைந்துள்ளது.

பஞ்சபூத ஸ்தலங்களுள் இதுவும் ஒன்று. இந்தத் தலம் பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலத்தைக் குறிக்கிறது.

இந்தக் கோவிலின் முக்கிய கடவுளான சிவன் ஏகாம்பரேஸ்வரர் என்ற பெயரிலும், அம்பிகை காமாட்சி அம்மன் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறார்கள். மொத்தம் 40 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோவில், 600ஆம் ஆண்டே கட்டப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இங்கு உள்ள சிவபெருமானை பிருத்வி லிங்கம் என்று அழைப்பர். மேலும் இந்த சிவபெருமான் மண்ணால் ஆனவர். இதனை சுயம்பு என்றும் கூறுவது உண்டு. அதனால் இந்த சிவபெருமானுக்கு அபிஷேகங்கள் நடப்பது கிடையாது. மாற்றாக லிங்க வடிவில் உள்ள ஆவுடையாருக்கு அபிஷேகங்கள் நடைபெறும். மேலும் இங்கு மற்ற கோவில்களைப் போல அம்மனுக்கு என்று தனியாக சந்நிதி கிடையாது.

மற்ற கோவில்களைப் போல் விநாயகர், முருகன், போன்ற கடவுள்களும் இங்கு காட்சி தருகின்றனர். முதல் பிரகாரத்தின் ஈசான மூலையில் நிலாத்துண்ட பெருமாள் சந்நிதி அமைந்துள்ளது. மேலும் இந்தக் கோவில் 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்குகிறது.

**வரலாறு:**

முதன் முதலில் பல்லவர்களே இந்தக் கோயிலை கட்டியுள்ளனர் என்பதற்கு சான்றாக பல்லவர் கால சிற்பங்களும் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. பின்னர் சோழர்களால் புணரமைக்கப்பட்டு கோவில் வளர்ச்சியடைந்தது.

மேலும் அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய நால்வராலும் பாடல் பெற்ற தலம் இது. பழங்கால சமயம் சார்ந்த நூல்களில் இந்தக் கோவில் திருக்கச்சிஏகம்பம் என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டு வந்தது. இந்தக் கோவிலின் கிழக்கு கோபுரமான ராஜ கோபுரம், 58.5 மீட்டர் உயரமும் ஒன்பது அடுக்குகளையும் கொண்டது. இதனை விஜயநகரத்தை ஆண்ட கிருஷ்ணதேவராயர் கி.பி 1509 ஆம் ஆண்டு கட்டியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் இக்கோவிலில் உள்ள ஆயிரம் கால் மண்டபத்தையும் கிருஷ்ணதேவராயரே கட்டியுள்ளார். இந்தக் கோவிலில் மொத்தம் ஐந்து பிரகாரங்கள் உள்ளன.

**தலவிருட்சம்:**

ஒவ்வொரு கோவிலுக்கும் தலவிருட்சம் என்று ஒரு மரம் உண்டு, அந்த வகையில் இந்தக் கோவிலில் தலவிருட்சம் என போற்றப்படுவது 3500 ஆண்டுகள் பழமை வாய்ந்த மாமரம். இந்த மாமரத்தில் நான்கு கிளைகள் உள்ளன. வெவ்வேறு காலங்களில் இந்த மாமரத்தில் உள்ள நான்கு கிளைகளில் நான்கு விதமான மாம்பழங்கள் உருவாகும் என்பது இதன் சிறப்பு. இந்த நான்கு கிளைகளும் ரிக், யஜுர், சாம, அதர்வண எனும் நான்கு வேதங்களை குறிக்கின்றன.

**தலவரலாறு:**

பார்வதி திருக்கைலாயத்தில் சிவபெருமானின் கண்களை விளையாட்டாக மூடியதால் உலகம் இருளில் மூழ்கியது. சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்து உலகத்துக்கு வெளிச்சம் தந்தார். இந்த தவற்றினால் பார்வதியை உலகத்துக்குச் சென்று தன்னை நோக்கி தவம் இருக்கச் சொன்னார் சிவபெருமான். பார்வதியும் காஞ்சிபுரத்தில் கம்பா நதிக்கரையில் ஒரு மாமரத்தின் அடியில் மணல் லிங்கம் செய்து பூஜித்தார்.

பார்வதியின் தவத்தை உலகினுக்கு அறியச் செய்ய சிவபெருமான் கம்பா நதியில் வெள்ளத்தை உண்டாக்கினார். பார்வதி தனது மணல் லிங்கத்தை வெள்ளம் அடித்து செல்லாமல் இருக்க கட்டி அணைத்துக் கொண்டார். உடனே சிவபெருமான் அந்த மாமரத்தின் அடியில் தோன்றி பார்வதிக்கு அருள் புரிந்து, இரண்டு படி நெல்லைக் கொடுத்து காமாட்சி என்ற பெயரில் காமகோட்டத்தில் 32 அறங்களைச் செய்ய பணித்தார்.

பார்வதி வழிபட்ட மணல் லிங்கம் தான் பிரித்வி லிங்கம், அந்த மாமரம் தான் தல விருட்சம். காமகோட்டம் தான் காமாட்சி அம்மன் கோவில். பார்வதி கட்டித் தழுவியதால் இங்கு உள்ள சிவபெருமானை தழுவக் குழைந்தார் என்றும் அழைப்பர்.

சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சியாரை மணந்த போது "உன்னைப் பிரியேன்" என்று சிவனை சாட்சியாக வைத்து சத்தியம் செய்தார். அந்த சத்தியத்தை மீறியதால் அவர் கண் பார்வை இழந்தார். இழந்த பார்வையில் இடக்கண் பார்வையை சுந்தரர் இங்கு பதிகம் பாடி பெற்றதாக வரலாறு உண்டு.

**விழாக்கள்:**

இந்தக் கோவிலில் தினமும் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றன. மேலும் ஆனித் திருமஞ்சனம், ஆடிக் கிருத்திகை, ஆவணி மூலம், நவராத்திரி, பங்குனி உத்திரம், சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம் போன்ற விழாக்களும் நடைபெறுகின்றன. கோவில் திறந்திருக்கும் நேரம்: காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை.

# வரதராஜப் பெருமாள் கோயில்



திருக்கச்சி அல்லது காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் என்பது பெருமாள் கோயில் என்று வைணவர்களால் போற்றப்படுகிறது. வைணவ பாரம்பரியத்தில் திருவரங்கம் மற்றும் திருவேங்கடம் ஆகிய தலங்களுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்த தலம். இது சென்னைக்கு அடுத்த காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள முப்பதோராவது திவ்ய தேசமாகும்.

இக்கோயில் எவரால் முதலில் நிறுவப்பட்டது என்பது தெரியவில்லை. எனினும் கி பி 1053 இல் சோழகளால் வேழமலையில் குகைவரைக் கோயில் கிழக்கு மேற்கே விரிவாக்கப்பெற்றது என்று கல்வெட்டுகளின் மூலம் அறியபடுகிறது. முதலாம் குலோத்துங்க சோழனும், விக்கிரம சோழனும் கோயிலை விரிவுபடுத்தினர். பதினான்காம் நூற்றாண்டில் தாயார் சன்னதியும், அபிஷேக மண்டபமும் அமைக்கப்பெற்றன. சோழர்களின் வீழ்ச்சிக்குபின், விஜயநகர அரசர்கள் கிழக்கு கோபுரம், ஊஞ்சல் மண்டபம் மற்றும் கல்யாண மண்டபங்களை நிறுவினர்.

கல்யாண மண்டபம் எட்டு வரிசைகளில், வரிசைக்கு பன்னிரண்டு தூண்களாக 96 சிற்பகலை மிக்க ஒரே கல்லாளான தூண்கள் நிறைந்த மண்டபம் ஆகும். தூண்களில் யாளி, போர்குதிரை, குதிரை மீது வீரர்கள் மற்றும் பல்வகை சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இதற்குள் உள்ள சிறிய நன்கு தூண் கொண்ட மண்டபத்தையும் சேர்த்து நூறு கால் மண்டபம் என அழைக்கபடுகிறது. இதன் நன்கு மூலைகளில் தொங்கும் கற்ச்சங்கிலிகள் சிறப்க்கலையின் விந்தையாகும்.

கிழக்கு கோபுரம் ஒன்பது நிலைகளுடன் 180 அடி உயரமுடையது. தற்போது இக்கோபுரம் சிதிலமடைந்துள்ளது.

மூலவராகிய தேவராஜப் பெருமாள், வேழ மலை (அத்திகிரி) மீது நின்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுகமண்டலமுடன் நாற்கரத்துடன் அருள்பாலிக்கிறார். மூலவர் மலை மீது அமைந்துள்ளார் என்பதற்கு சான்றாக கர்ப்பகிரகத்தின் நோ் கீழே குன்று குடைவரை கோயிலில் யோக நரசிங்க பெருமாள் வீற்றுக்கிறார்.

பெருமாளை காண்பதற்கு இருப்பதி நான்கு படிகளை ஏறிச்செல்லும் போது காணப்படும் தங்க பல்லி மற்றும் வெள்ளி பல்லி, இக்கோவிலில் பிரசிதம். மூலவரை நோக்கிய படி தென்மேற்கே பெருந்தேவி தாயாருக்கு தனி சன்னதியும், திருக்குளத் தின் எதிரே சக்கரத்தாழ்வா் சன்னிதி உள்ளது.

கோயில் வெளி பிரகாரத் தில் கண்ணன், ராமர், வராஹா பெருமாள் சன்னதி களும், ஆண்டாள், ஆழ் வார்கள், க ளி ய மா னிக்க பெருமாள், ஆச்சார்யர்கள் சன்னதிகளும் மற்றும் நம்மாழ்வார் சன்னதியும் உள்ளன. இராஜகோபுரம் 96 அடி உயரமுள்ளது.

அத்தி வரதா் எனப்படும் மரத்தல் செய்யப்பட்ட பெருமாள், திருக்குளத்தில் பள்ளி கொண்டிருக்கிறார். முழுதும் அத்திமரத்தால் ஆன பள்ளிகொண்ட பெருமாள் நீண்ட நெடிய உருவம்.40 ஆண்டுகளுக்கு ஒருமுறை, குளத்து நீரை முழுவதும் வெளியேற்றி ஸ்ரீ அத்திவரதரின் திருவுருவச் சிலையை வெளியெடுத்து, கோயிலில் பள்ளிகொள்ள வைத்து ஒருமாத காலத்திற்கு உற்சவங்கள் பிரமாதமாக நடக்கும்.

அத்திவரதரை தம் வாழ்நாளில் தரிசிப்பது மிகப் பெரும் பேறு ஆகையால், எங்கிருந்தெல்லாமோ வந்து மக்கள் பெருமாளைத் தரிசிப்பர்.

திருக்குளத்தின் கிழக்குத்திசையில் சக்கரத்தாழ்வார் என பேசப்படுகின்ற சுதா்சன ஆழ்வார் சந்நிதி அமைந்துள்ளது.தமிழகத்தில் எங்கும் காணமுடியாத மிகப்பெரிய அளவில் சுதா்சன ஆழ்வார் திருமேனி காட்சி தருகின்றது. இவா் 16 கைகளுடன் சங்கு சக்கரங்கள் தாங்கி காட்சி யளிக்கின்றார்.

வைகாசி மாதத்தில் உற்சவத் திருவிழா ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெறும். இவ் உற்சவத் திருவிழாவில் கருடசேவையும், தேரும் மிகப்பிரபலம்.

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தி லிருந்து 5 கி.மீ. தொலைவில் காஞ்சிபுரம் செங்கற்பட்டு சாலையில் அமைந்துள்ள இத்திருத்தலத்திற்கு நகர பேருந்துகளும் ஆட்டோக்களும் இயக்கப்படுகின்றன. காஞ் சிபுரத்திற்கு சென்னை யிலிருந்து எண்ணற்ற பேருந் துகளும் ரயில்களும் உள்ளன.



# காமாட்சி அம்மன் கோயில்



அகிலங்கள் அனைத்திலும் அருளாட்சி செய்யும் நாயகியாகத் திகழ்ந்து, தன அருட்கருணை பொங்கும் திருவிழிப் பார்வையினால், தன்னை நாடி வந்து துதித்துத் தொழுகின்ற அடியார்களின் விருப்பங்களைஎல்லாம் நிறைவேற்றி அருள்பவள், அன்னை காமாட்சி.

காம என்றால் அன்பு, கருணை. அட்ச என்றால் கண். எனவே, காமாட்சி என்றால் கருணையும், அன்பும் நிறைந்த கண்களையுடையவள் என்று பொருள்.

அன்னை காமாட்சி எழுந்தருளி, நமக்கெல்லாம் அருள்புரியும் திருத்தலமான காஞ்சிபுரம் பெரும் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டது. அன்னை பராசக்தி தேவியின் அருள் நிறைந்து விளங்கும் முக்கிய திருத்தலங்கள் மூன்று.

அவை: காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி திருக்கோயில்களே அவை. அவற்றில் காஞ்சி காமாட்சி அன்னை ஆலயம் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

புண்ணிய பூமியான பாரத தேசத்தில் (இந்தியாவில்) உள்ள ஐம்பத்தொரு சக்தி பீடங்களுள், காமகோடி பீடம் என்று அழைக்கப்படும் காஞ்சிபுரம் முக்கிய இடம் வகிக்கிறது.

ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரியின் பூரண பிம்ப சொரூபிணியாகத் திகழ்வது, அருள்மிகு அன்னை காஞ்சி காமாட்சியின் மூல விக்கிரகம் ஒன்றுதான்.

அன்னை காமாட்சி கலைமகளையும் (சரஸ்வதி), திருமகளையும் (லட்சுமி) தன் இரு கண்களாகக் கொண்டவள்.

இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட காஞ்சிமாநகரத்தில் அன்னை காமாட்சி தேவி எழுந்தருளிய சம்பவம் ஒரு ஆற்றல்மிக்க வரலாறாக விரிகின்றது.

முன்னொரு காலத்தில், பந்தகாசுரன் என்ற ஓர் அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் மிகக் கடுமையான தவங்களை மேற்கொண்டு, பிரம்ம தேவரிடமிருந்து அரிய பல வரங்களைப் பெற்றிருந்தான்.

அந்த வரங்கள் அளித்த சக்தியாலும், ஆணவத்தாலும் அவன் மூவுலகங்களையும் கைப்பற்றித் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பலவித துன்பங்களை உண்டாக்கி வந்தான்.

பந்தகாசுரனின் கொடுமைகள் நாள்தோறும் அதிகமாகி வந்ததால், அதிக துன்பமுற்ற தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானிடம் சென்று தங்கள் துன்பத்தைக் கூறி முறையிட்டார்கள்.

பிரம்மாவின் வரங்களைப் பெற்றதால் பந்தகாசுரன் மிகுந்த வலிமை பெற்றிருப்பதை உணர்ந்த சிவபெருமான், " அந்தப் பந்தகாசுரனை அழிக்கும் ஆற்றல் அன்னை பராசக்தி தேவிக்குத்தான் உள்ள " என்று கூறி, அவர்களைப் பராசக்தியிடம் அனுப்பி வைத்தார்.

அத்தருணம், அன்னை பராசக்தி தேவி, காம கோட்டம் என்று அழைக்கப்படும் காஞ் சிபுரத்தில், கிளி வடிவம் கொண்டு, ஒரு செண்பக மரத்தில் அமர்ந்து சிவபெரு மானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந் தாள்.

தேவர் களும், முனிவர்களு அன்னை இருக்கும் இடத்துக்கு வந்து, அவளை வழிபட்டுத் தங்கள் துயரங்களை கூறினார்கள்

அவர்களி துன்பத்தைக் கண்டு மன இரங்கிய அன்னை,



## ஸ்ரீ சக்கரம்

அன்னை காமாட்சியின் காரண வடிவமான ஸ்ரீ சக்கரம், கருவறை யினுள், மூலவரான காமாட்சி அம்பாளின் எதிரில் காட்சியளிக் கின்றது. (அதனால், இத் திருத்தலம் ஸ்ரீ சக்கர பீடத் தலம் என அழைக்கப்படுகின்றது). அன்னை காமாட்சியே ஸ்ரீ சக்கரமாகவும் விளங்குகின்றாள். வட்ட வடிவமான தொட்டி போன்று சக்கர பீடம் அமைந்துள்ளது. இந்தப் பீடத்தின் உட்சுவர்களில் அஷ்ட லட்சுமிகளின் திரு உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தொட்டியின் மத்தியில், பீடத்தில், அபூர்வ சக்திகள் நிறைந்த ஸ்ரீ சக்கரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஸ்ரீ சக்கர பீடத்தைப் பூஜித்து, ஆதி சங்கரர் அன்னையின் அருள் பெற்றார் என்று கோயில் வரலாறு கூறுகின்றது. காமாட்சி அன்னையின் இடது புறத்தில் உள்ள வராஹி தேவியின் எதிரில், சந்தான ஸ்தம்பம் உள்ளது. இந்த ஸ்தம்பத்தைப் பிரதட்சணம் செய்யும் பக்தர்களுக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் என்பது அம்பாளின் அருள்வாக்கு.

பந்தகாசுரனைக் கொன்று, அவர்களின் துயரத்தைத் தீர்ப்பதாக உறுதியளித்தாள்.

அத்தருணம், பந்தகாசுரன் கயிலாயத்தில், ஒரு இருண்ட குகையினுள்ளே, ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதை அறிந்து, அவனைக் கொல்ல அதுவே தருணம் என்று முடிவு செய்த அன்னை, பதினெட்டுக் கரங்களில், பதினெட்டு வகையான ஆயுதங்களைத் தாங்கிய பைரவ ரூபிணியாக, உக்கிர உருவம் கொண்டாள்.



பந்தகாசுரனின் கழுத்தில் ஒரு பாதத்தையும், மார்பில் ஒரு பாதத்தையும் வைத்து, அவனது தலையை அறுத்து, ஒரு கையில் தூக்கிப் பிடித்தபடி காஞ்சிபுரம் வந்தடைந்தாள்.

உக்கிர கோப ரூபத்தில் வந்த அன்னையைக் கண்ட தேவர்களும், முனிவர்களும் பயத்தில் நடுங்கி மயங்கி வீழ்ந்தனர். அவர்களின் பயத்தைப் போக்க விரும்பிய அன்னை, உடனே, அழகிய பட்டாடை அணிந்த சிறு பெண்ணின் உருவத்தில், புன்னகை தவழும் முகத்துடன் அவர்களுக்குக் காட்சியளித்தாள்.

அத்தரிசனம் கண்டு, மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த தேவர்களும், முனிவர்களும் அவளைப் பலவாறும் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

அப்போது, அன்னை அவர்களைப் பார்த்து, அந்த இடத்தில் ஒரு பள்ளம் தோண்டுமாறும், பந்தகாசுரனை அந்தப் பள்ளத்தில் இட்டுப் புதைத்து, புதைத்த இடத்தில் வெற்றித் தூண் ஒன்றை நிறுவுமாறும் கூறினாள்.

அன்னையின் கட்டளைப்படி தேவர்கள் அந்த இடத்தில் ஒரு பள்ளம் தோண்டியபோது, மல்லகன் என்ற கொடிய அரக்கன் அங்கே மறைந்திருப்பதைக் கண்டார்கள். அந்த அரக்கனை அழித்துத் தங்களைக் காக்கும்படி, மகாவிஷ்ணுவிடம் வேண்டினார்கள்.

தேவர்களின் கோரிக்கையை ஏற்று, மகாவிஷ்ணு மல்லகனுடன் போரிட்டார். ஆனால், மல்லகனின் உடலிலிருந்து வெளியாகும் ஒவ்வொரு துளி இரத்தமும் ஒரு அரக்கனாக உருமாறிப் போர் புரிந்தது.

இவ்வாறு அங்கே மாபெரும் அரக்கர் படையொன்று உருவாக்கி மகாவிஷ்ணுவுடன் கடுமையான போர் புரிந்தது.

அரக்கனின் உடலிலிருந்து வெளிவரும் இரத்தத் துளிகள் ஒவ்வொன்றும் ஒரு அரக்கனாக உருவெடுப்பதைக் கண்ட மகாவிஷ்ணு, தம் உதவிக்குச் சிவபெருமானை அழைத்தார்.

சிவபெருமான் போர்க்கோலத்தில், ருத்ர மூர்த்தியாக அங்கே வந்தார்.

அவர் இரண்டு பூதங்களை உருவாக்கி, மல்லகனின் உடலிலிருந்து வெளிவரும் இரத்தத் துளிகள் எல்லாவற்றையும் பூமியில் விழாதபடி குடிக்கும்படி கட்டளையிட்டார். பூதங்கள் அப்படியே



செய்தன. இவ்வாறு, மேலும் அரக்கர்கள் தோன்றாமல் தடுத்ததும், மகாவிஷ்ணு தம் சக்கராயுதத்தால் அந்த அரக்கனை அழித்தார்.

அதன்பின், அன்னை கட்டளையிட்டபடி, பந்தகாசுறனைப் புதைத்த இடத்திற்கருகில், இருபத்து நான்கு தூண்களை நிறுவி, காயத்ரி மண்டபம் அமைத்து, அந்த மண்டபத்தினுள்ளே, அழகிய பீடம் அமைத்து, அன்னையின் உருவம் ஒன்றைச் செய்து வைத்து வணங்கினார்கள்.

பின்னர், கதவை மூடிவிட்டு வெளியில் இருந்து அன்னையைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.

மறுநாள் அதிகாலை, சூரியன் உதய வேளையில், மிகுந்த பயபக்தியுடன் அவர்கள் அந்தக் கதவைத் திறந்தார்கள். என்ன ஆச்சரியம் ? அங்கே அவர்கள் கண்ட அற்புதமான காட்சியைக் கண்டு மெய் சிலிர்த்து, மகிழ்ந்து நின்றார்கள்.

ஆம், அந்தக் காயத்ரி மண்டபத்தின் நடுவில், அவர்கள் நிறுவிய சிலை உருவத்துக்குப் பதிலாக, அன்னை காமாட்சி தேவி அழகிய திருக்கோலத்தில் காட்சியளித்தாள். அந்த நன்னாள், ஸ்வயம்பு மனுவந்திரத்தில், கிருத யுகத்தில், ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாதம் கிருஷ்ண பட்சத்தில், பிரதமை திதியும், பூர நட்சத்திரமும் கூடிய ஒரு வெள்ளிக்கிழமை நாள் ஆகும். எல்லையில்லாக் கருணை வடிவம் கொண்ட ராஜ ராஜேஸ்வரியாக காமாட்சி அன்னை காட்சியளித்தாள். அந்தக் காயத்ரி மண்டபத்தின் நடுவில் அன்னை தென் கிழக்காக, நான்கு கரங்களுடன், பத்மாசன கோலத்தில் காட்சியளித்தாள்.

அவளது நான்கு திருக்கரங்களில் பாசம், அங்குசம், மலர் அம்பு, கரும்பு வில் முதலியன காணப்பட்டன.

அன்னையின் அழகையும், கருணையையும் கண்டு பக்திப் பரவசமாகி மகிழ்ந்த தேவர்களும் முனிவர்களும், அன்னையை நோக்கி, அங்கேயே அமர்ந்து உலகம் வாழ அருள் புரியுமாறு வேண்டிக்கொண்டார்கள்.

அவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி, காமாட்சி அன்னை, இருபத்து நான்கு தூண்களாலான அந்தக் காயத்ரி மண்டபத்தின் மத்தியில் அழகிய பீடத்தில் அமர்ந்து அருளாட்சி செய்கின்றாள்.

தற்போது, அன்னை காமாட்சி திருக்கோயில் காஞ்சிபுரத்தின் மையப்பகுதியில், ஐந்து நிலைகளைக் கொண்ட அழகிய ராஜகோபுரத்துடன், கண்களையும், உள்ளத்தையும் பக்திப் பரவசமாக்கும் ஓர் அழகிய, கம்பீரமான ஆலயமாக எழுந்து நிற்கின்றது.

அன்னை காமாட்சி இத்திருக்கோயிலில் ஸ்தூலம், சூட்சுமம், காரணம் எனும் மூவகை வடிவிலும் அமைந்து அருள் புரிகின்றாள். (பெரும்பாலான கோயில்களில் இவற்றில் ஒன்றிரண்டு வடிவில்தான் அன்னை காட்சியளிப்பாள்.) அந்த மூவகை வடிவங்களாவன:

காமகோடி காமாட்சி (ஸ்தூல வடிவம்) (மூல விக்கிரக உருவில்)

அஞ்சன காமாட்சி (அரூப லட்சுமி) (சூட்சும வடிவம்)

காமகோடி பீடம் எனப்படும் ஸ்ரீ சக்கரம் (காரண வடிவம்)

காமாட்சி அன்னைக்கு மகாதேவி, திரிபுரசுந்தரி, ராஜராஜேஸ்வரி, காமேஸ்வரி, லலிதா, ஸ்ரீ சக்கர நாய[illegible] என்னும் திருப்பெயர்களும் உண்டு.

காஞ்சிபுரத் திருத்தலத்திலுள்ள எல்லா சிவாலயங்களுக்கும் காமாட்சி அம்பாளே மூலவர் அம்பாளாக விளங்குகிறாள். இதனால் காஞ்சீபுரத்தில் உள்ள சிவாலயங்களில், அம்பாளுக்குத் தனி சந்நிதிகள் இருப்பதில்லை. அம்பாளின் உற்சவ மூர்த்திகள் மட்டுமே எல்லா சிவாலயங்களிலும் காட்சியளிக்கின்றனர்.

மூல மூர்த்தியான காமகோடி காமாட்சியின் இடது பக்கத்தில் வட திசை நோக்கியவாறு அரூப லட்சுமியாகிய அஞ்சன காமாட்சி காட்சியளிக்கின்றாள். இது அன்னையின் சூட்சும வடிவமாகும். இந்த அன்னைக்கு வடிவம் கிடையாது.

ஆனால், இவளது மேனியில் தடவப்படும் அர்ச்சனை குங்குமத்தின் மகிமையால் இவள் ஒரு அழகிய வடிவத்தைப் பெறுகின்றாள். இந்த அஞ்சன காமாட்சி தவம் புரியும் கோலத்தில் காட்சியளிக்கின்றாள்.

## 24 சந்நிதிகள்

காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில், நாம் தரிசனம் செய்யக்கூடிய சந்நிதிகள் இருபத்துநான்கு உள்ளன. காமாட்சி அம்மன் கோவிலுக்கு செல்பவர்கள் இந்த 24 சன்னதிகளையும் பொறுமையாக தரிசனம் செய்து வர வேண்டும். அந்த சன்னதிகள் விவரம் வருமாறு:-

காயத்ரி மண்டபம்
காமகோடி காமாட்சி (கருவறையில்)
காமகோடி பீடமாகிய ஸ்ரீ சக்கரம் (கருவறையில்)
தபஸ் காமாட்சி
பிலாகாசம்
அரூப லட்சுமி எனப்படும் அஞ்சன காமாட்சி
வராஹி
சந்தான ஸ்தம்பம்
அர்த்த நாரீஸ்வரர்
ரூப லட்சுமியும், கள்ளர் பெருமாளும்
அன்னபூரணி
தர்ம சாஸ்தா
ஆதி சங்கரர்
துர்வாச முனிவர்
உற்சவ காமாட்சி
துண்டீர மகாராஜா
(அஷ்ட புஜ) மகா சரஸ்வதி
தர்ம ஸ்தம்பம்
காசி கால பைரவர்
துர்க்கை
காசி விஸ்வநாதர்
பஞ்ச கங்கை
பூத நிக்ரக பெருமாள்
அகஸ்தியரும், ஹயகிரீவரும்

# பாடல் பெற்ற 5 சிவாலயங்கள்

காஞ்சீபுரத்தில் முன்பு 1008 சிவாலயங்கள் இருந்தது. அதற்கு ஆதாரமான குறிப்புகள் கூட உள்ளன. அந்த ஆலயங்கள் எண்ணிக்கை கவனிப்பாரின்றி குறைந்து. குறைந்து... தற்போது காஞ்சீயில் 108 சிவாலயங்கள் இருப்பதே உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த 108 சிவாலயங்களில் ஐந்து தலங்கள் தான். "பாடல் பெற்ற தலம்" என்ற சிறப்பைப்பெற்றுள்ளன.

அந்த மகிமை வாய்ந்த 5 தலங்கள் வருமாறு:-



1.ஏகாம்பர நாதர் கோவில்.
2.சத்ய நாதர் கோவில்.
3.அனேகதங்காவதேஸ்வரர்
4.திருமேற்றிலிஸ்வரர்.
5.அருள்மிகு ஓணகாந்தேசுவரர்.

இந்த 5 தலங்களில் முதன்மையான தலமான ஏகாம்பர நாதர் பற்றி 12-ம் பக்கத்தில் படித்திருப்பீர்கள். மீத முள்ள 4 தலங்களை காணலாம்.

## 1.கச்சி அனேக தங்காவதம் கோவில்

கச்சபேசர் கோவிலுக்கு மேற்கே சுமார் ½ கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

கோவிலின் நுழைவு வாயில் வடக்கு நோக்கியும் மூலவர் அமைந்துள்ள கருவறை வாயில் கிழக்கு நோக்கியும், இறைவன் பெரிய லிங்கத் திருமேனி கொண்டு கிழக்கு நோக்கி அமைந்து, அருள்புரிந்து கொண்டுள்ளார்.

மூலவர் பெயர் அனேக தங்காவதேசுவரர் தாயார் பெயர் காமாட்சியம்மை. இது 1350 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருத்தலம்.

தொண்டை நாட்டுத் திருமுறைத் திருத்தலங்கள் 32–ல் இத்திருத்தலம் 4–வது திருத்தலமாகும்.

பூவுலகில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் தோறும் ஈசனைத் தரிசித்து வந்த விநாயகர், காஞ்சிபுரத்தை அடைந்தார். கச்சியில் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள ஈசனைக் கண்டு மகிழ்ந்து அவரைப் பக்தியுடன் வழிபட்டார். பின்னர் இத்தலத்திலே தாமே ஓர் லிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட எண்ணம் கொண்டார்.

அதன்படி இங்கு ஓர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து அதற்கு அபிஷேகம், ஆராதனைகள் செய்து வழி பட்டார். யானை முகமுடைய விநாயகரால் வழிபடப் பட்டதால் அப்பெருமான் அநேக பேசுவரர் என்று அழைக்கப்பட்டார். விநாயகருடைய பூசையால் மகிழ்ந்த ஈசன் அவர் முன்பு தோன்றி ''நீ வேண்டுவது என்ன?'' என்று கேட்டார்.

உடனே விநாயகப் பெருமான், ''தந்தையே, நான் செய் வேண்டிய பணிகள் என்ன?'' என வினவினார்.

அதற்கு பரமசிவன், ''உன் பாதங்களைப் பணிந் வேண்டி, காரியங்களைத் தொடங்குபவருக்கு எவ்வி இடையூறும் நேராது காத்து அவர்கள் தொடங்கி காரியங்கள் இனிது நிறைவேற அருள் செய்வா மேலும் இரணியபுரத்திலே கேசி முதலான அசுரர்க வாழ்கின்றனர். அவர்களுடைய கல்பத்தில் ஒரு தெய்வ பெண் வீற்றிருக்கிறாள்.

அந்த அசுரர்களை அழித்து வல்லபை எனப்படு அச்சக்தியை நீ அடைந்து அவளோடு, பக்தர்களுக் நாள்தோறும் நன்மைகள் வழங்கி வருவாயாக என கூறினார்.

இதையடுத்து விநாயகர் ரணியபுரம் சென்று அசு களை அழித்து வல்லபையை மீட்டுத் தமது இருப்பிட திரும்பினார். தேவர்கள் மகிழ்ந்து அப்பெருமானுக் வல்லபையைத் திருமணம் செய்து வைத்தனர்.

இத்தலத்தில் வீற்றிருக்கும் அனேக பேசுவரரை வ பட்டு, தரிசிப்பவர் செய்யும் காரியங்கள் அனைத்து தடை யின்றி முடிவு பெற்று ஈசன் திருவருளைப் பெ வர்.

சம்பந்தர் பாடிய இத்தலத்தில் திருமணத்தடைக இருந்தால் விலகும். அதோடு பிறவித் துன்பங்கள் நீங் கயிலாயத்தை அடையும் பேறு பெறலாம்.

தற்போது இத்தலத்தில் சீரமைப்பு பணிகள் நடந் வருகிறது.



கச்சிஅநேக தங்காவதீஸ்வரர் திருக்கோயில் (உள்புறம்)

## 2.அருள்மிகு திருமேற்றளி ஈசுவரர் கோவி

காஞ்சிபுரம் நகரத்திற்குத் தென்மேற்குப் பகுதியி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ தொலைவி உள்ள பிள்ளையார் பாளையத்தில், திருமேற்றி தெருவின் இறுதியில் இத்திருத்தலம் அமைந்துள்ளது

திருமேற்றளி ஈசுவரர் சந்நிதி மேற்குப் பார்த் சந்நிதியாகும். இத்திருக்கோவில் இரண்டு சந்நிதிகளை கொண்டுள்ளது. மற்றொரு சந்நிதியில் சிவசாரூப பெற்ற திருமல் ஓதவுருகீஸ்வரர் என்னும் திருநாமத்தை பெற்று கிழக்கு நோக்கி காட்சித் தருகிறார்.

இத்திதிருக்கோவில் 1400 ஆண்டுகளுக்கு முற்பட் திருத்தலம்.

தொண்டைநாட்டுத் திருமுறைத் திருத்தலங்க 32-ல் இத்திருத்தலம் 2-வது திருத்தலமாகு



திருமேற்றிஸ்வரர்

திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரரால் பாடல் பெற்ற திருத்தலம். முன்னொரு காலத்தில் திருமால் சிவசாரூபம் பெற விரும்பித் தவம் செய்தார். சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்து, சிவசாரூபப் பேற்றை அளித்தார். இருபத்தெட்டாம் கலியுகத்தில் சீர்காழிப் பதியில் தோன்றும்,திருஞானசம்பந்தன் அந்த பேற்றை அளிப்பான். அதுவரையில் நீ இங்கேயே இருந்து தவம்புரியுமாறு அருளிச் செய்து மறைந்தார். திருமால், ஈசனார் கூறியபடியே தவம் செய்தார்.திருஞானசம்பந்தப் பெருமான் இங்கு எழுந்தருளி வந்து, பாட, திருமால் சிவசாரூபம் பெற்றார். மருள்நீக்கி திருநாவுக்கரசர், அப்பர் மற்றும் ஆளுடைய அ என்று சிறப்புப் பெயர்களைப் பெற்ற திருநாவுக்க இத்தலத்து இறைவனை 10 திருப்பாடல்களால் அருளியுள்ளார். அடுத்து இத்தலத்து இறைவ சுந்தரர் பெருமானும் திருப்பதிகம் பாடி வண வழிபட்டுள்ளார்.

பிரம்மோற்சவம், பௌர்ணமி, அமாவாசை, பிரதே சோமவரம் போன்ற நாட்களில் சிறப்பு அபிஷே ஆராதனைகள் நடைபெறுகின்றன. 2 கால பூ நடைபெறுகிறது.

பழங்காலந்தொட்டு திருமேற்றளித் தெ மற்றும் ஐயனாரப்பன் கோவில் தெரு, செங்குந் இனத்தைச் சேர்ந்தவர்களால் நிர்வாகம் செய்யப்ப வருகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தைச் சேர்ந்தது. செங்குந்தர் மரபி அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர்.


தற்போது இத்தலத்தில் திருப்பணி- சீரமை வேலைகள் நடந்து வருகின்றன. அன்பர்கள் இத்த துக்கு உதவி செய்து ஈசன் அருள் பெறலாம்.

## 3.காஞ்சிபுரம் சத்யநாதர் கோயில்

கச்சிநெறிக்கரைக்காடு திருக்காலிமே திருக்காலீஸ்வரர் கோயில் காஞ்சிபுரம் நகர் வடகிழக்குப் பகுதியில் திருக்காலிமேடு என்ற இடத் இக்கோவில் அமைந்துள்ளது. காஞ்சிபுரம் ரயில் ரோடில் உள்ள தலைமை தபால் நிலையத்தின் எத உள்ள சாலையில் சென்றால் இத்தலத்தை அடைய சம்பந்தர் பாடல் பெற்ற சிவாலயமாகும். இந்திர புதனும் வழிபட்ட தலம் என்பது நம்பிக்கை.

பாடல் பெற்ற மற்றொரு தலமான ஓணகாந்தேசு தலம் பற்றிய குறிப்பு 50-ம் பக்கத்தில் உள்ளது.

# திவ்யதேசங்கள் – ஒரு அலசல்




பகவான் விஷ்ணு உறைந்துள்ள 108 திவ்ய தேசங்களில் 14 திவ்ய தேசங்கள் காஞ்சீபுரம் நகரில் இருக்கிறது. அதாவது திவ்யதேசத்தில் 10 சதவீதம் காஞ்சியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நீங்கள் நினைத்தால், பயணத்தை திட்டமிட்ட முறையில் அமைத்து கொண்டால் 14 திவ்ய தேசத்தையும் ஒரே நாளில் சேவித்து விட்டு வரமுடியும். இந்த புத்தகத்தின் 14-வது பக்கத்தில் பெருமாள் கோவில் என்றதும் நினைவுக்கு வரும் வரதராஜ பெருமாள் ஆலயம் பற்றி குறிப்புகளை படித்திருப்பீர்கள். காஞ்சியில் உள்ள 14 திவ்ய தேசங்களில் அது தான் முதன்மையான தலமாகும். மற்ற 13 திவ்ய தேசங்களை இனி காணலாம்....

## 1. அருள்மிகு புஷ்பவல்லித் தாயார் உடனுறை அஷ்டபுஜப் பெருமாள் திருக்கோவில்

(விஷ்ணுகாஞ்சி)

அஷ்டபுஜ பெருமாள் கோவில் காஞ்சீபுரம் பேருந்து நிலையத்திற்குத் தென் கிழக்கே அமைந்துள்ளது.



கோவிலின் கோபுரவாயில் வடக்கு நோக்கி உள்ளது. மூலவர் அஷ்டபுஜப் பெருமாள் மேற்கு நோக்கிய வண்ணம் 8 கைகளுடன் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

அஷ்டபுஜப் பெருமாள் வலது திருக்கைகளில் முறையே அம்பு, தாமரைப், புஷ்பம், கத்தி மற்றும் சக்கரத்தை ஏந்தியுள்ளார். இடது திருக்கைகளில் வில், சங்கு கேடயம் மற்றும் கதையை ஏந்தியுள்ளார்.

மகாசந்தன் என்னும் முனிவர் மகாவிஷ்ணுவை எண்ணித் தவம் புரிந்தார். இம்முனிவர் இந்திரனுக்கு மிகவும் எதிரி.

மகாசந்த முனிவர் தவம் இருப்பதை அறிந்த இந்திரன் தன் பதவிக்காகத்தான், மகாசந்தன் தவம் இருக்கிறார் என நினைத்து, எப்படியாவது அவரின் தவத்தைக் கலைக்க வேண்டும் எனக் கருதி, தேவ உலகத்தில் உள்ள அழகியப் பெண்களை அனுப்பி முனிவரின் தவத்தைக் கலைக்கக் கட்டளையிட்டான்.

பெண்கள் சென்று முனிவரின் தவத்தைக் கெடுக்க முயற்சித்தனர். முனிவர் அவர்களை வெறுத்து ஒதுக்கினார்.

இதனை அறிந்த இந்திரன் மேலும் கோபம் கொண்டு, எப்படியாவது மகாசந்தனின் தவத்தைக் கலைக்க வேண்டும்

என்று முடிவு செய்து, யானை வடிவம் கொண்
தன்னோடு பல யானைக் கூட்டங்களை
அழைத்துக் கொண்டு மகாசந்தன் முனிவர்
தவம் இருக்கும் இடத்திற்கு அருகே வந்து
யானை வடிவத்தில் காமப்புணர்ச்சிக் கொண்
நின்றான்.

இதைக் கண்ட முனிவர் தன் சித்தம் கலங்
தவவலிமை இழந்து தாமும் ஒரு யானையாக
மாறி, பெண் யானைகளுடன் சேர்க்கையில்
ஈடுபட்டு இன்புற்று இருந்தார். இவ்வாறாகப் ப
வருடங்கள் இருந்தார்.

யானை கூட்டங்களுடன் சுற்றித்திரிந்து
கொண்டு இருக்கும் நாளில், ஒரு நாள் சாளக்
கிராமத்தில் நீராடினார். யானை வடிவில் இருந்
மகாசந்தனுக்கு தீர்த்தத்தின் மகிமையால் தன
முன்பிறவியின் ஞானம் வரலாயிற்று.


தற்போதைய நிலையை அறிந்து, வருந்தி
யானைக் கூட்டத்திலிருந்து விலகி திவ்ய தே
தலங்கள் தோறும் (யானை வடிவுடனேயே)
சென்று மகாவிஷ்ணுவைத் தரிசித்தார்.
ஒருநாள் கோதாவரி நதியில் நீராட, அங்கிருந்
மிருகண்டு முனிவரிடம், தனக்கு விமோசனம்
கேட்க, மிருகண்டு முனிவர் காஞ்சிக்குச்
சென்று அட்டபுயக்கரத்தோனை வணங்கு
என்றார்.

அவ்வாறே காஞ்சீபுரத்தை அடைந்து யானை
(மகாசந்தன்) தினந்தோறும் 14,000 மலர்களை
கொண்டு அட்டபுயக்கரத்தானை வணங்கி
வந்தார். ஒரு சமயம் மழை பொய்த்துப் போக,
மலர் பறிக்க யானை வெகுதூரம் சென்று ஒரு
குளத்தில் இறங்கி அங்கிருந்த மலர்களைப்
பறிக்க, அதில் இருந்த முதலை யானையின்
காலை கவ்விக் கொண்டது.

வலிபொறுக்க முடியாமல் யானை திருமால
கூவி அழைக்க அட்டபுயக்கரத்தோன் வந்து
சக்கராயுதத்தால் முதலையின் தலையைக்
கொய்ய, யானைக்குச் சாபம் நீங்கியது. யா
வடிவிலிருந்த மகாசந்தன் தனக்கு மோட்சம்

வேண்டும் என்று கேட்டார். அவரும் இம்முனிவருக்கு மோட்சம் நல்கினார்.

## 2. அருள்மிகு அமுதவல்லி நாச்சியார் உடனுறை உலகளந்த பெருமாள் கோவில்



உலகந்த பெருமாள் கோவில் பெரிய காஞ்சீபுரம் பகுதியில் காமாட்சியம்மன் கோவிலுக்கு மிக அருகில் – கிழக்கே அமைந்துள்ளது.

கோவில் தற்போது உள்ள பூமியின் மேல்மட்டத்திலிருந்து சுமார் 6 அடி தாழ்ந்து அமைந்துள்ளது. அதாவது கோவிலின் நுழைவு வாயிலை அடைந்தவுடன் சுமார் 8 படிகள் கீழ் இறங்கிச் சென்ற பின்பே திருக்கோவிலை அடையலாம்.

மகாபலி அசுரேந்திரனாக முடி சூட்டிக் கொண்டதும் அவனுடைய ஆணை 3 லோகங்களிலும் செயல்பாட்டிற்கு வந்தது. இதனால் தேவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். தேவர்களின் கஷ்டங்களைப் போக்கவும், மகாபலியின் கொட்டத்தை அடக்கவும், திருமால் வாமன அவதாரம் எடுத்து மகாபலியிடம் சென்று நிம்மதியாகப் பகவானைத் தியானிக்க, தனக்கென்று ஓர் இடம் தேவைப்படுகிறது. அதனை அளித்தால் நன்மையாக இருக்கும் எனக் கேட்டார்.

மகாபலியும் இதற்கு உடன்பட்டு தேவையான அளவு இடத்தை எடுத்து கொள்ளக் கூறினார். உடனே திருமால் திரிவிக்ரம வடிவம் எடுத்து தன்னுடைய ஒரு திருவடியால் மேலுலகத்தையும், மற்றொரு அடியால் கீழுலகத்தையும் அளந்தார்.

மூன்றாவது அடிக்கு இடமில்லை என மகாபலியிடம் வாமனர் கூற, அதற்கு மகாபலி அடியேனின் சிரசு இருக்கிறது என்று கூறு தலையைக் கொடுத்தார். திரிவிக்கிரமர் தன் பாதத்தை மகாபலியின் தலையில் வைத்து அழுத்தி அவனைப் பாதாள லோகத்தில் கொண்டு சேர்த்தார். மீண்டும் மூன்று லோகத்தையும் இந்திரரிடம் இருக்குமாறு செய்தார் என்பது புராண செய்தியாகும்.

மூலவர்–சுவாமி உலகளந்த பெருமாள் மேற்குப் பார்த்த வண்ணம், நின்ற திருக்கோலத்தில் திரிவிக்கிரம வடிவத்தில் பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார்.

அதாவது மூலவர் சிலை இடது கையை ஒட்டி 2 விரல்களை உயர்த்தியபடி உள்ளது. வலது கையை நீட்டி ஒரு விரலை மட்டும் உயர்த்தி "எங்கே 3–வது அடி?" என்று கேட்பது போல தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருஊரகத்தான் எனப்படும் இவரை வழிபட்டால் திருமண தடைகள் விலகும். வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபட்டால் ராகு–கேது தோஷம் நீங்கும். பால் பாயாசம் நிவேதனம் செய்து வழிபடுவது நல்லது.


உலகளந்த பெருமாள் திருக்கோவிலினுள் அந்த திவ்ய தேசத்தைத் தவிர மேலும் திருநீரகம், திருக்காரகம் மற்றும் திருக்கார்வானம் ஆகிய 3 திவ்யதேசங்களும் அமைந்து உள்ளன. அதாவது, ஒரே திருக்கோவிலில் மொத்தம் 4 திவ்யதேசங்கள் அமைந்து உள்ளன. இது மிகவும் சிறப்பான ஒன்று.

வேறு எங்கும் இதைப்போல் ஒரே திருக்கோவிலில் 4 திவ்யதேசங்களைக் காண முடியாது. இது காஞ்சிக்குக் கிடைத்தப் பெரும்பேறு ஆகும்.

திரு ஊரகத்தைத் தவிர மற்ற மூன்று திவ்யதேசங்களும் வேறு எங்கோ இருந்ததாகவும் பிறகு இங்குப் பிரதிஷ்டை செய்ததாகவும் செய்திகள் உண்டு.

## 3. திருநீரகம்

**(உலகளந்த பெருமாள் திருக்கோவினுள் அமைந்துள்ள சந்நிதி)**



மூலவர் திருப்பெயர்: ஜகதீச்வரர் பெருமாள்

தாயார் திருப்பெயர்: நிலமங்கைவல்லி தாயார்

தீர்த்தம்: அக்ரூர தீர்த்தம்

விமானம்: ஜகதீச்வர விமானம்

மங்களாசாசனம்: திருமங்கை ஆழ்வார்


இச்சந்நிதியின் மூலவர் பெருமாள் எங்கு இருந்தார்? பழைய திருக்கோவில் எங்கு உள்ளது? திருக்கோவிலின் தீர்த்தம் எங்குள்ளது? போன்ற விவரங்கள் ஏதும் தெரியவில்லை.

திருஊரகம் அருள்மிகு உலகளந்தப் பெருமாள் அமைந்துள்ள திருப்பதியின் உள்ளே அமைந்துள்ள திருச்சந்நிதியாகும்.

## 4. திருக்காரகம்

**(அருள்மிகு உலகளந்தப் பெருமாள் திருக்கோவிலினுள் அமைந்துள்ள சந்நிதி)**

மூலவர் திருப்பெயர்: கருணாகரப் பெருமாள்




திரிவிக்ரமப் பெருமாள்
வடக்கே திருமுக மண்டலம்
நின்ற திருக்கோலம்
தாயார் திருப்பெயர்: பத்மா மணி நாச்சியார்
தீர்த்தம்: அக்ராய தீர்த்தம்
விமானம்: வாமன விமானம், ரம்ய விமானம்.
மங்களாசாசனம்: திருமங்கை ஆழ்வார்.

திருஊரகம் அருள்மிகு உலகளந்தப் பெருமாள் அமைந்துள்ள திருக்கோவிலின் உள்ளேயே அமைந்துள்ள திருச்சந்தியாகும்.

இத்திருச்சந்நிதி மூலவர் கட்டிடம் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவர் காரகத்துப் பெருமான் வடக்குப் பார்த்த வண்ணம் ஆதிசேஷன் மீது அமர்ந்த திருக்கோலம் கொண்டுள்ளார்.

## 5.திருக்கார்வானம்

**(அருள்மிகு உலகளந்த பெருமாள் திருக்கோவிலினுள் அமைந்துள்ள சந்நிதி)**



மூலவர் திருப்பெயர்: கார்வானப் பெருமாள்
நின்ற திருக்கோலம்– வடக்கே திருமுக மண்டலம்.
தாயார்: கமலவல்லி தாயார்
தீர்த்தம்: கவுரி தடாகம் (குராதர தீர்த்தம்)
விமானம்: புஷ்கல விமானம்
மங்களாசாசனம்: திருமங்கை ஆழ்வார்

திருஊரகம் திருக்கார் வானம் அருள்மிகு உலகளந்தப் பெருமாள் அமைந்துள்ள திருக்கோவிலின் உள்ளேயே அமைந்துள்ள திருக்கோவிலாகும்.

இத்திருச்சந்நிதி மூலவர் கட்டிடம் வடக்குப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது. மூலவர் கார்வானப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவித் தாயார் உடன் நின்ற திருக்கோலத்துடன் வடக்குப் பார்த்த வண்ணம் எழுந்தருளி அருள்புரிந்து கொண்டுள்ளார்.

இந்த திவ்ய தேசங்கள் பற்றிய கூடுதல் தகவல்களை கண்ணன் குருக்களிடம் 9994883584 என்ற எண்ணில் பெறலாம்.

## 6.ஸ்ரீபாண்டவதூதர் திருக்கோயில்

இத்திருக்கோயில் பெரிய காஞ்சிபுரம் பகுதியில் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச்



தென்மேற்கில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் கிழக்குப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது. மூலவர் பாண்டவ தூதப் பெருமாள் கிழக்குப் பார்த்த வண்ணம் பிரமாண்டமாக அமர்ந்த திருக்கோலத்தில் எழுந்திருளியுள்ளார்.

மகாபாரதப் போர் முடிந்து, நீண்ட காலத்திற்குப் பிறகு ''ஜெனமேஜெய'' என்னும் அரசன் வைசம்பாயனார் என்னும் ரிஷியிடம் மகாபாரதக் கதையைக் கேட்டார். அப்போது, ஸ்ரீகிருஷ்ணர் அஸ்தினாபுரத்திலிருந்து தூது சென்ற போது, துரியோதனின் சூழ்ச்சியால் – ஸ்ரீகிருஷ்ணர் எடுத்த பிரமாண்டத் திருக்கோலத்தைத் தானும் காண வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்கான வழியைக் கேட்டார். ரிஷி மன்னனை நோக்கி, சத்திய விரதச் சேத்திரமான காஞ்சிக்குச் சென்று அசுவமேத யாகம் செய்து யாகத்தின் முடிவில் நீ விரும்பிய கோலத்தைக் காணலாம் என்று கூற, மன்னன் அவ்வாறே செய்தான்.

காஞ்சியை அடைந்து அசுவமேத யாகம் செய்து, இறுதியில் யாகத்தின் திரண்ட பயனாகப் பிரம்மாண்டமமான கண்ணன், யாக வேள்வியில் தோன்றி ஜெனமேஜெய மன்னனுக்கும், மற்றமுள்ள முனிவர் பெருமகனார்களுக்கும் காட்சி கொடுத்தார் என்பது வரலாறு. இத்தலத்து கிருஷ்ணர் சிலை மாதிரி தமிழ்நாட்டில் வேறு எங்குமே பெரிய சிலை இல்லை.

## 7. கச்சிநிலாத் துண்டப் பெருமாள்

**(அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோவிலினுள் உள்ள சந்நிதி திவ்யதேசம்)**

இத்திருக்கோவில் 108 திவ்விய தேச தலத்தில் 49–வது திவ்யதேசம் ஆகும். காஞ்சீபுரம் அருள்மிகு காமாட்சியம்மை உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோவிலின் முதல் பிராகாரத்தில் மூலவர் எழுந்தருள்புரியும் கட்டத்திற்கு வடகிழக்கே தனிச் சந்நிதியாக அமையப்பெற்றுள்ளது.

நிலாத் துண்டப் பெருமாள் நின்றத் திருகோலத்தில், மேற்குப் பார்த்த வண்ணம் அழகிய திருமேனி கொண்டு, சேவார்த்திகளுக்கு அருள் பாலித்துக் கொண்டுள்ளார்.


ஒரு கற்பக் காலத்தில் தேவர்களும், அசுரர்களும் ஒன்று சேர்ந்து அமிர்தத்தைப் பெறவேண்டி திருப்பாற்கடலைக் கடைந்தனர். மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் சுற்றிப் பிணைத்து, அதன் தலைப்புறம் அசுரர்களும், வால்புறம் தேவர்களும் நின்று இழுத்துக் கடைந்தனர்.

அப்படிக் கடையும்போது வாசுகி வலிதாங்காமல் விஷம் கலந்த பெருமூச்சு விட்டான். அவ்விஷமானது கடலிலே கலக்கும் போது ஆழ்கடலிலிருந்து கொடிய விஷம் வெளிப்பட வெப்பம் தாளாமல் அனைவரும் ஓடினர். அப்படியும் முடியாமல் அவர்களின் தேகம் கருத்தது. தேவர்களுக்கு ஆறுதல் கூறிய திருமாலின் உருவமும், அவ்விஷ வெப்பத்தால் கரிய நிறத்தை அடைந்துவிட்டது. தாம்கரிய நிறமாகிவிட்டதை கண்டு மனம் வருந்திய திருமால் இந்தத் துன்பம் காஞ்சிப்பதியை அடைந்து அழகிய லிங்கம் ஒன்றை நிறுவி பக்தியுடன் ஈசனை வழிபட்டார். அவரால் நிறுவி வழிபடப்பட் அழகிய சிவ லிங்கத் திருமேனிதான் கண்ணேசலிங்கம் ஆகும். திருமாலின் வழிபாட்டினால் மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குத் காட்சி அளித்து, துளப மார்பினை உடையவனே! உன்னை வருத்திவரும் வெப்பத்தின் கொடுமை நீங்க யாம் ஒரு வழி கூறுகிறோம் எனச் சொல்லி, மாவடி நிழலிலே எழுந்தருளியுள்ள எம் சந்நிதிக்கு வந்தாயானால், இளம் சந்திரனுடைய குளுமை பொருந்திய கிரணங்கள் வீசும் இடத்திலே இருந்து அதன் குளிர்ச்சியால் துன்பம் நீங்கப்பெறுவாய் என்று அருளினார் சிவபெருமான் அருளியபடியே திருமால், பிறைச்

சந்திரனுடைய குளிர்ச்சிப் பொருந்திய கிரணங்கள் விழும் இடத்தை அடைந்து அங்கே இருந்தவாறு இறைவனைத் துதித்தார். அக்கணம் அவரை வதைத்து வந்த கொடிய வெப்பத்தின் வருத்தம் நீங்கப் பெற்றார்.

அன்று முதல் கச்சி நிலாத் துண்டப் பெருமாள் என்ற பெயரோடு திருமால் எழுந்தருளியிருக்கிறார்.

## 8. திரு வெகா



### (சொன்ன வண்ணம் செய்த பெருமாள்) ஸ்ரீயதோக்தகாரி பெருமாள் திருக்கோவில்

சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோவில் அட்டபுயக்கரத்துப் பெருமாள் கோவிலுக்கு எதிரில் அமைந்துள்ளது.

கோவிலின் இராசகோபுரம் மேற்கு நோக்கி உள்ளது. மூலவர் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் மேற்கு நோக்கி உள்ளார். பொய்கை ஆழ்வார் அவதரித்த தலம். கோமள வல்லித் தாயார் தனிச் சந்நிதியில் எழுந்தருளி அருள்புரிந்து கொண்டு உள்ளார்.

ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் நாச்சியாருக்கு இத்திருக்கோவிலில் தனிச்சந்நிதியுள்ளது. நாச்சியார் நின்ற திருக்கோலத்தில் சுமார் 6 அடி உயரத்தில் சிலையாக உள்ளார். சிற்பக் கலைக்கு ஒரு உதாரணமாக அவ்வளவு தத்ரூபமாக சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் இந்த பிரமாண்ட ஆண்டாளை தவறாமல் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

பொதுவாக திருமால் எழுந்தருளியுள்ள தலங்களில் சயன திருக்கோலமானது இடமிருந்து வலமாக அமைந்திருக்கும். ஆனால் இங்கு மட்டும் - திருவெகாப் பெருமாள் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார் என்பது தனி சிறப்பாகும்.

ஒரு முறை பிரம்மன் - மகாவிஷ்ணுவைக் காண வேண்டித் தவம் செய்தார். வானத்தில் ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது. அதாவது, தொண்டை நாட்டிலுள்ள சத்திய விரத சேத்திரத்திற்குச் சென்று ஒரு அசுவமேத யாகம் இயற்றி 1000 அசுவமேதயாகப் பலனைப் பெற்று திருமாலைத் தரிசிப்பாயாக என்றது.

பிரம்மன் காஞ்சியை அடைந்து யாகத்தை நடத்த முயற்சிகளை மேற்கொண்டான்.அப்போது குரு, நான்முகனின் பத்தினியாகிய சரஸ்வதிதேவி இல்லாமல் யாகம் நடைபெறாது என்று கூற, பிரம்மா, வசிட்டரை அழைத்து சரஸ்வதி தேவியை அழைத்துவர அனுப்பினார்.

பிரம்மனுக்கும், சரஸ்வதிக்கும் கருத்து மாறுபாட்டினால், சரஸ்வதி தேவியானவள் பிரம்மனைப் பிரிந்துச் சென்று - தன் அம்சமான சரஸ்வதி நதியை அடைந்து வாழ்ந்து வந்தாள். இந்தச் சூழ்நிலையில் வசிட்டர் சென்று அழைத்தபோது சரஸ்வதி தேவி தான் வர இயலாது. வேண்டுமானால் தானிருக்கும் இடத்திற்கு எழுந்தருளி யாகத்தை நடத்தலாம் என்று கூறி, யாகத்திற்கு வருவதை மறுத்துவிட்டார்.

வசிட்டர் எவ்வளவு கூறியும் யாகத்திற்குச் சரஸ்வதி தேவி வராததால் சதய மகரிசிகளும் சாவித்திரி முதலிய மற்றைய மனைவியர்களை அருகில் வைத்துக் கொண்டு பிரம்மன் யாகத்தைத் தொடங்கினார்.

யாகத்தில் அசுரர்களுக்கு முதல் மரியாதை தரப்படாத காரணத்தால் அசுரர்கள் ஒன்று கூடி அதில் விரோசனன் ஆலோசனையின் பேரில் சரஸ்வதியிடம் சென்று கலைமகளே உங்கள் கணவர் தீய எண்ணம் கொண்ட முனிவர்களின் தூண்டுதலின் பேரில் உம்மை நீக்கி, மற்ற மஹரிஷிகளோடு கூடி யாகம் செய்யத் தொடங்கி இருக்கிறார். இதை எப்படியாவது நீங்கள் தடுக்க வேண்டும் எனக்கூறினர்.

அது கேட்ட சரஸ்வதி தன் கணவர் செய்யும் யாகத்தைத் தடுக்க எண்ணி மலையினின்று கிளம்பி வேகவதி என்னும் பெயரில் நதியாகப் பெருகி சத்தியவிரத சேத்திரத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அந்த நதியின் பெருக்கு வேகத்தைப் பார்த்து யாகச் சாலையிலுள்ள அனைவரும் பயந்து நான்முகனைச் சரண் அடைந்தனர்.

பிரம்மன் ஞானதிருஷ்டியால் பார்த்து, இக்காரியம் அசுரர்களின் தூண்டுதல் பேரில் நடைபெற்று உள்ளது என்பதை அறிந்தார். உடனே அவர் நாராயணனை மனதில் எண்ணினார்.

நாராயணன் பிரம்மனின் முன் தோன்றி, கவலை அடையாதே என்று கூறி, வெள்ளமாக வரும் வேகவதி ஆற்றில் இறங்கி - அணையாகபடுத்துக் கொண்டார். அந்த காட்சியைக் கண்ட சரஸ்வதி வெட்கப்பட்டு மேலே பெருகிச் செல்ல முடியாமல் கடலில் கலந்தாள்.

யதோக்தகாரி என்று சொல்லப்படும் அப்பெருமானது தென்புறமாகச் செல்லத் தொடங்கிய வேகவதியை -



சரஸ்வதியை முனிவர்கள் வணங்கி தாயே இனியாவது தாங்கள் வந்து பிரம்மனோடு கூடி இந்த யாகத்தை நிறைவு செய்ய வேண்டும் எனக் கூறினர்.

கலை மகளும் விரைந்து வந்து தன் கணவர் நடத்தும் யாகத்தில் கலந்து கொண்டார்.

நான்மு கனார் நடத்திய யாகத்தைக் காக்க வந்து வேகவதி ஆற்றின் பிரவாகத்தின் குறுக்கே அணையாக வலது கை கீழ்பட சயனித்துக் கொண்டு அருளிய படியால் இப்பெருமாள் புஜங்க சயனன் - திருவணைப்பள்ளி கொண்ட பெருமாள் என்கிற பெயரோடு திகழ்கின்றார் என்பது புராண வரலாறாகக் கூறுவர்.

இத்தலத்துக்குள் திருகள்வர் பெருமாள், நிலாத் துண்ட பெருமாளுக்கு என 2 தனி தனி சன்னதிகளை புதிதாக கட்டியுள்ளனர். இனி இந்த 2 திவ்ய தேசங் களும் இந்த ஆலயத்தில் தனி சன்னதியாக இருக்கும் என்கிறார்கள்.

இத்தலம் தொடர்பான கூடுதல் தகவல்களை கோவில் பரம்பரை அறங்காவலர் நல்லப்பா நாராயண னிடம் 044 - 27 23 20 11 என்ற எண்ணில் தெரிந்து கொள்ளலாம்.

## 9.திருக்கள்வர் பெருமாள்

(அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோவிலினுள்

அமைந்துள்ள சந்நிதி)

மூலவர் – கள்வர் பெருமாள்
தாயார் – அஞ்சிலைவல்லி தாயார்
தீர்த்தம் – நித்திய புஷ்கரிணி
விமானம் – வாமன விமானம்
மங்களாசாசனம் – திருமங்கை ஆழ்வார்

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் திருக்கோவிலினுள் அம்பாளுக்குத் தெற்கில் – வலப்புறத்தில் தென் கிழக்குப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது.

மூலவர் கள்வர் பெருமாள், காமாட்சி அன்னை எழுந்து அருள்புரிந்து கொண்டு இருக்கும் மூலவர் கட்டடத்தின் தெற்கில் வலது புறத்தில் எப்படி அன்னை தென்கிழக்குத் திக்கை நோக்கியுள்ளாரோ, அதைப்போன்று, கள்வர் பெருமாளும் தென்கிழக்குத் திக்கை நோக்கிய வண்ணம் நின்ற திருக்கோலத்தில் அமைந்துள்ளார். ஒரு சமயம் வைகுந்தத்தில் திருமாலும் திருமகளும் நகைத்துப் பேசிக் கொண்டு இருந்த போது, இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. உடனே திருமால் கோபம் கொண்டு, உன்மேனி சிவப்பாக இருப்பதால் ஆணவம் கொண்டு என்னை இகழ்கிறாய், ஆகவே உன் மேனி கரிய நிறத்தை அடையக்கடவது என்று சபித்தார்.

அந்தக் கணமே லட்சுமி மேனி கரிய நிறத்தை அடைந்தது. அதைக் கண்டு வருத்தம் அடைந்த திருமகள், திருமாலின் திருவடிகளில் விழுந்து வணங்கி, ஐயனே என்னை மன்னித்து இந்தப் பாபத்திலிருந்து பாப பிமோசனம் தர வேண்டும் என வேண்டினார்.

திருமால், திருமகளின் மீது கருணை கொண்டு, தேவி கோபத்தால் நானும் அவசரப்பட்டு உன்னைச் சபித்துவிட்டேன். கவலை அடையாதே. உன்னுடைய திருமேனி கரிய நிறத்தை அடைந்தாலும், நான் உன் மீது கொண்டுள்ள அன்பானது மாறாது எனக் கூறி திருமால், தேவியின் கவலையைக் குறைக்க அன்புடன் அணைத்துக் கொண்டார்.

இருப்பினும், மகாலட்சுமியின் மனம் கவலையிலிருந்து விடுபடவில்லை. தன் தோழிமார்களுடன் இது குறித்து கலந்து பேசினாள். அவர்களின் மூலமாக காஞ்சியின் சிறப்பை அறிந்து, உடனே புறப்பட்டு காஞ்சியை அடைந்து பஞ்ச கங்கை தீர்த்தத்தின் கரையிலே, உமை அன்னையை வணங்கி அவளுக்கு இடப்புறத்திலே தங்கினாள் திருமகள். பிறகு தன் கோரிக்கையான, தன் திருமேனியில் திருமாலின் சாபத்தால் ஏற்பட்டு, பொருந்தியுள்ள கரிய நிறத்தைப் போக்கி அருளுமாறு நெஞ்சம் உருக வேண்டியாள்.


இவ்வார்த்தைகளைக் கேட்ட பார்வதி திருமகளை நோக்கி, வருத்தப்படவேண்டாம். உன் திருமேனியில் உள்ள கருமையைச் சந்தனமாக பதியுமாறு அருள் செய்தேன் என்றார். உன் மேனியிலிருந்து வழியும் சாந்தைத் திலகமாக அணிந்து கொள்பவர்களுக்கு வறுமை, தாழ்வு ஆகியவைகள் ஒழிந்து இன்பமும், செல்வமும் பெருகும் என்றாள். அந்தச் சமயத்தில் வைகுந்தத்தில் திருமகளைக் காணாத திருமால் எங்கெங்கோ தேடி, அலைந்து, இறுதியில் காஞ்சி சென்று இருப்பாளோ எனக் கருதி காஞ்சியை அடைந்து, உமை அன்னையும், திருமகளும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு மறைந்திருந்து கேட்டார். உடனே பார்வதி, கள்வனைப் போல் ஒளிந்து நிற்கும் நீ யார்? என்று திருமாலைக் கேட்டாள்.

அச்சமயம், திருமகள் வெட்கத்துடன் கணவனை நெருங்கி அவரை வணங்கினாள். திருமாலும், பார்வதியை வணங்கினார்.

இவர் தன் கணவர் என்று திருமகள் அன்னை உமையிடம் கூறினாள். இதுவே இச்சந்நிதியின் சிறப்பு ஆகும்.

இத்திருக்கோவில் காலையில் 5.30 மணி முதல் 12.00 வரையிலும் மாலையில் 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

## 10. அருள்மிகு பவளவல்லி தாயார் உடனுறை பவள வண்ணர் திருக்கோவில்



பவள வண்ணர் கோவில் பெரிய காஞ்சிபுரம் பகுதியில் அமைந்துள்ளது.

பவளவண்ணர் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி உள்ளார்.

ஒரு சமயம் வைகுந்தத்தில் திருமகளும், திருமாலும் அருகருகே அமர்ந்து ஆனந்தத்துடன் பேசிக் கொண்டு இருந்தனர். அப்போது திருமகள், திருமாலை நோக்கி, முத்தொழிலையும் நடத்தும் சிவபெருமான் அருள் பெற்று தாங்கள், தங்கள் மேனியைப் பொன்நிறமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என கூறினாள்.

இதைக் கேட்ட திருமால், உன் விருப்படியே பொன்நிற மேனிகொண்டு திரும்புவேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அவர் காஞ்சீபுரத்தை அடைந்து வீரட்டகாசத்தின் முன்பு தன் சக்கர ஆயுதத்தால் அழகிய தீர்த்தம் ஒன்றை உண்டாக்கினார். தினமும் சக்கர தீர்த்ததிலே நீராடி, 14000 தாமரை மலர்களைக் கொண்டு வந்து அவற்றால் வீரட்டகாசரை வழிபட்டார். திருமாலின் வழிபாட்டைக் கண்டு மகிழ்ந்த ஈசன், தாய் உமையுடன் திருமாலுக்குக் காட்சிக் கொடுத்து பச்சை மேனியனே, உன் எண்ணத்தை யாம் அறிவோம் கவலை வேண்டாம், பவளம் போன்ற செந்நிறமேனியை உனக்குத் தந்தோம், என்று அருளினார்.


இந்த ஆலயம் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 10.00 மணி வரை மாலை 5.00 மணிமுதல் இரவு 7.30 வரை திறந்திருக்கும்.

## 10. அருள்மிகு மரகதவல்லித் தாயார் உடனுறை பச்சை வண்ணப் பெருமாள் திருக்கோவில்

108 திவ்ய தேசங்களில் ஒன்றான பச்சை வண்ணப் பெருமாள் கோவில் பெரிய காஞ்சீபுரம் பகுதியில் கம்மாளர் வீதியில் – இறவாத்தானம் தலத்துக்கு அருகில் அமைந்துள்ளது. எதிரில் பவள வண்ணர் கோவில் அமைந்துள்ளது.

மூலவர் பச்சை வண்ணர் என்கிற மரகத வண்ணர் அமைந்துள்ள மண்டப வாயில் தெற்கு நோக்கியும், மூலவர் பச்சை வண்ணர் பெருமாள் கிழக்கு நோக்கியும் தரிசனம் வழங்கி கொண்டுள்ளார். தாயார் சந்நிதி தனிச் சந்நிதியாக உள்ளது. தாயார் சந்நிதிக்கு முன்பு பீடத்தில் யந்திரபிரவானி சிலா ரூபத்தில் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீனிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். இங்கு மகாலட்சுமி தாயார் உற்சவ ரூபத்தில் கஜலட்சுமியாகக் காட்சித் தருகிறார். ஆதிசேஷன் காவலாக உள்ளார்.



இதனால் இத்தலத்தில் சேஷ விளக்கு வழிபாடு சிறப்பானதாக கருதப்படுகிறது.9 வாரம் சேஷ விளக்கு ஏற்றி வழிபட்டால் நினைத்து நடக்கும்.

தொண்மைக்காலத்தில் திருவட்டாறு என்கிற பகுதி யாதவக் குப்பம் என்று ஆகி, பிறகு அப்பெயர் மருவி தற்போது கோனேரிகுப்பம் என்று வழங்கப்படும் பகுதியானது, பசுக்கள் நிறைந்த - யாதவர்கள் நிறைந்த பகுதியாக விளங்கியது.

அச்சமயம் மரீச்சி என்னும் மகரிஷி இப்பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர் மகாவிஷ்ணுவின் பரம பக்தர் அதனால் சதா மகாவிஷ்ணுவை நினைத்துக் கொண்டும், அவரின் புகழைப்பாடிக் கொண்டும் இருந்தார்.

இவரின் பக்திக்கு மகிழ்ந்து மகாவிஷ்ணு, ராம அவதாரத்தில்- விஷ்ணு ரூபத்தில் பச்சை நிற மேனி கொண்டு இந்த மரீச்சி மகரிஷிக்குக் காட்சி கொடுத்தார். அந்த அற்புதம் இத்தலத்தில் நடந்ததாக கருதப்படுகிறது.

பவள வண்ணப் பெருமாளைத் தரிசிக்கும் பக்தர்கள் பச்சை வண்ணர் பெருமாளையும் ஒரு சேர சேவித்தால் புண்ணியம், என்பது சான்றோர்களின் எண்ணம் ஆகும். திவ்யதேசங்களில் 2 பெருமாள் உருவங்களில் இவர் ஒருவராகவே காட்சித் தருவது சிறப்பு ஆகும்.


எனவே பவள வண்ணர் பெருமாளைச் சேவிக்கச் செல்லும் பக்தர்கள் பச்சை வண்ணரையும் சேவிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. டிரஸ்டி ஆதிலட்சுமி 98401 10092

## 11. திருபரமேச்சுவர விண்ணகரம் கோவில்

**(வைகுந்த பெருமாள் கோவில்)**

காஞ்சீபுரத்தில் உள்ள 14 திவ்ய தேசங்களில் மிகவும் தனித்துவம் கொண்டது வைகுந்த பெருமாள் கோவிலாகும்.

திருப்பரமேச்சுவர விண்ணகரம் கோவில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு வடகிழக்கே அமைந்துள்ளது. வைகுந்தப் பெருமாள் சந்நிதி வீதியின் (கிழக்கு) இறுதியில் இத்திருக்கோவிலைக் காணலாம். இந்த கோவில் மாடக்கோவில் வகையைச் சார்ந்தது. மூன்று நிலைகளைக் (தளங்கள்) கொண்டுள்ளது. முதல் தளத்தில், மூலவர் வைகுந்தப் பெருமாள் அமர்ந்த



திருக்கோலத்தில் உள்ளார் மேற்குப் பார்த்த வண்ணம் எழுந்தருளியுள்ளார். இரண்டாம் தளத்தில், அரங்கநாத பெருமாள், வடக்கே தலைவைத்து அனந்த சயன திருக்கோலத்தில் அருள்புரிந்து வருகிறார்.

மூன்றாம் தளத்தில், பரமபதநாதர் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அருள் புரிந்து கொண்டுள்ளார். இவ்வாறு பெருமாள் இருந்த, கிடந்த, நின்ற திருக்கோலங்களைக் கொண்டுள்ளார். பரமேஸ்வரவர்மன் என்ற 2ம் நந்திவர்ம பல்லவ மன்னால் எழுதப்பட்டு பரமேஸ்வர விண்ணகரம் என இந்த கோவிலுக்கு பெயரிடப்பட்டது.

6-ம் நூற்றாண்டில் இந்த கோவில் கட்டப்பட்டது. ஆனால் சரித்திர ஆய்வாளர்கள் இந்த கோவில் கட்டி சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று மதிப்பீடு செய்துள்ளனர்.

காஞ்சீபுரத்தில் பல்லவ மன்னர்கள் எத்தனையோ



கோவில்களை கட்டியுள்ளனர். அவர்கள் உருவாக்கிய முதல் கோவில் இதுதான் என்று கூறப்படுகிறது.

இந்த கோவில் கருங்கல்லால் கட்டப்பட்டது என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இத்தலத்தில் உள்ள சுவர்கள், சிற்பங்கள் தளங்கள், அனைத்தும் மணல் கல்லால் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கோவிலின் உட்புற சுவர்களில் பல்லவ மன்னர்களின் 18 வம்ச நிகழ்வுகள் உள்ளன. பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் சீனா யாத்ரீகர்க யுவான்சுவாங், பாகீயான் காஞ்சீபுரம் வந்தனர்.

பல்லவ மன்னருடன் யுவான்சுவாங் இருக்கும் காட்சியும் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இந்திய தொல்லியல் துறை இந்த சிற்பங்களை பாதுகாத்து வருகிறது.

இத்தலத்தில் வைகுண்ட ஏகாதசி மிக, மிக சிறப்பா நடைபெறும். மற்ற ஏகாதசி நாட்களில் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது.

கோவிலை சுற்றி நன்கு புல்வெளி உள்ளது. இதனால் கோவில் குளுமையாக உள்ளீது. காஞ்சீபுரம் செல்பவர்கள் தவறாமல் தரிசனம் செய்ய வேண்டிய தலம்.

## 12. திருத்தண்கா

(விளக்கொளி பெருமாள் கோவில், தூப்புல், காஞ்சிபுரம்) இக்கோவில் காஞ்சீபுரம் கீரை மண்டபத்துக்கருகில் உள்ளது.

முலவர் - ஸ்ரீதீபப்பிரகாசர், ஸ்ரீவிளக்கொளி பெருமாள், திவ்விய பிரகாசர்

தாயார் -ஸ்ரீ மரகதவல்லி தாயார்

தீர்த்தம்- சரஸ்வதி தீர்த்தம்

விமானம் - ஸ்ரீகர விமானம்

பிரத்யட்சம் - ஸ்ரீசரஸ்வதி தேவி

தனி சன்னிதி - வேதாந்த தேசிகர்

திருவாராதனைப் பெருமாள் லட்சுமி ஹயக்ரீவர்.



தூப்புல் ஸ்ரீசுவாமி தேசிகனின் அவதாரத் தலம். அவருடைய சன்னிதியும் இக்கோவிலின் பக்கத்திலேயே உள்ளது.

பிரம்மா செய்யும் யாகத்தைக் கெடுக்க வந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக்கினர். எம்பெருமான் ஒரு பேரொளியாய்த் தோன்றி இருட்டைப் போக்கினதால் "தீபப்பிரகாசர்" என்றும் "விளக்கொளி" என்றும் திருநாமங்கள் ஏற்பட்டன எனத் தலபுராணம் கூறுகிறது.

சிறப்பு: ஸ்ரீ வேதாந்த தேசிகர் அவதார ஸ்தலம். சுமார் 730 ஆண்டுகளுக்கு முன்னால் திருவேங்கடமுடையான் அருளால் திரு.அநந்தசூரி–தோதாரம்மா தம்பதிகளுக்குப் பிறந்தவர் இவர் இயற்பெயர் திருவேங்கடேசன். ஸ்ரீரங்கநாதப் பெருமாளே இவருக்கு வேதாந்தாச்சாரியார்" என்ற விருதை அளிக்க அதனாலேயே வேங்கடேச கவியாக இருந்த இவர் "வேதாந்த தேசிகன்" என்ற கொண்டாடப்பட்டார்.

ஸ்ரீரங்கநாயகித் தாயார் இவருக்கு "ஸர்வதந்தர ஸ்வதந்தரர்" என்ற விருதை அளித்தார்.

## 13. திருவேளுக்கை

**(அழகிய சிங்கப்பெருமாள் கோவில் – காஞ்சீபுரம்)**

இக்கோவில் காஞ்சீபுரம் விளக்கொளி பெருமாள் கோவில் அருகில் உள்ளது.



மூலவர் – அழகிய சிங்கர், நரசிம்மர், முகுந்த நாயகன்

தாயார்– வேளுக்கைவல்லி, அமிர்தவல்லி

தீர்த்தம் – கனக ஸரஸ், ஹேமஸரஸ்,

விமானம் – கனக விமானம்

பிரத்யட்சம் – பிருகு முனிவர்

'வேள்' என்ற சொல்லுக்கு விருப்பம் என்று பொருள். ஸ்ரீநரசிம்மர் விருப்பத்துடன் எழுந்தருளியிருக்குமிடம் ஆதலால் வேள்–இருக்கை என்றாகிப் பின்னர் திருவேளுக்கை என்று மருவிற்று.

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமித் திருக்கோயில்

## குமரக்கோட்டம்



இத்திருக்கோவில் அருள்மிகு காமாட்சியம்மன் கோவிலுக்கு மேற்கேயும், மேற்கு ராஜவீதியின் அருகிலும், சங்கரமடத்திற்குத் தென்கிழக்குக் திசையில் மெயின் ரோட்டில் உள்ளது. அங்கு கம்பீரமான ராஜகோபுரத்துடன் நுழைவு வாயில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் சந்நிதி மேற்குப் பார்த்த சந்நிதி ஆகும்.

ஒரு முறை பிரம்மன் கயிலாயத்திலே எம்பெருமானைத் தரிசித்து விட்டு திரும்பும் வழியில் முருகப் பெருமானைப் பார்த்தும், பார்க்காததுப் போல் சென்றார். இதனால் கோபமுற்ற முருகப்பெருமான் பிரம்மனை அழைத்து, நீ யார்? நீ இருப்பது எந்த இடம்? நீ செய்யும் தொழில் என்ன? உனக்கு எந்த நூல் தெரியும்? சொல்லும் என்றார்.

அதற்குப் பிரம்மன் என் பெயர் பிரம்மன். உங்கள் தந்தையார் எனக்கு எல்லாக் கலைகளையும் கற்பித்து உலகத்தைப் படைக்க கட்டளையிட்டார். அப்பணியைச் செய்து கொண்டு சத்தியலோகத்தில் வாழ்ந்து வருகிறேன் எனக் கூறினார்.

நல்லது பிரம்மனே, எல்லாக் கலைகளையும் இறைவனிடம் இருந்து தெரிந்து கொண்டாய் அல்லவா? அப்படியானால் அக்கலைகளுக்கு முன்னே சொல்லப்படும் எழுத்து என்ன? அதன் பொருள் என்ன? என்று கேட்டார்.

அதற்குப் பிரம்மன், ஐயனே, அந்த எழுத்தும்அதன் பொருளும் எனக்குத் தெரியாது. என்மீது கருணை செய்யவேண்டும் என்றார். இதைக்கேட்ட முருகப்பெருமான் கோபம் கொண்டு "ஓம்" என்னும் பிரணவத்தின் பொருள் அறியாத இவரைச் சிறைலிடுமாறு ஆணைப் பிறப்பித்தார்.

அதன்பின்பு சுப்பிரமணியர் பிரம்மனைப் போன்று ருத்திராட்சமாலை, கமண்டலம் கொண்டு படைப்புத் தொழிலை மேற்கொண்டார். இத்திருக்கோலத்தில் தான் தற்போது உள்ள மூலவர் சுப்ரமணியர் கைகளில் ருத்திராட்ச மாலை, கமண்டலம் கொண்டுள்ளார்.

18 புராணங்களில் ஒன்றான கந்தபுராணம் முருகப் பெருமானின் அருளால், இத்திருக்கோவிலினுள் பணிபுரிந்து வந்த கச்சியப்ப சிவாசாரியார் அவர்களைக் கொண்டு திகட சக்கரம் என அடி எடுத்துக் கொடுத்து எழுதச் செய்தார்.

இப்புராணம் அரங்கேறியபோது எழுந்த சந்தேகத்தையும் முருகனே தீர்த்து வைத்தார். கந்தபுராணம் அரங்கேறிய மண்டபம் இன்றும் இங்கு நல்ல நிலையில் உள்ளது. அது 11–ம் நூற்றாண்டைச் சேர்ந்த மண்டபமாகும்.

இத்தலத்திற்கு அருணகிரிநாதரும் வருகைதந்து முருகனைக் குறித்துப்பாடல்களை அருளிச் செய்து உள்ளார்.

ஒரு தடவை இந்த ஆலயம் இருக்கும் இடம் தெரியாமல் பாம்பன் சுவாமிகள் வழிமாறி சென்று விட்டார். அவரை சிறுவனாகச் சென்று வழிகாட்டி, அழைத்து வந்து தரிசனம் செய்வித்துப் பாடலையும் பெற்றான் இத்தலத்து முருகன் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஞ்சீபுரத்தில் 108 சிவாலயங்கள்



இந்துக்கள், தங்கள் வாழ்நாளில், 108 சிவாலயங்களில் வழிபட்டு இருந்தால், அதை பெரும் புண்ணியமாக கருதுகின்றனர். பொருள் செலவு, நேர செலவு, பயணம் ஆகிய காரணங்களால் பலரால் இதை செய்ய முடியவில்லை. அப்படி தவித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு, கோயில் நகரமான காஞ்சீபுரத்தில் வழி உள்ளது. இங்கு உள்ள, 108 சிவாலயங்களில், 165 லிங்கங்கள் மற்றும் பைரவர்களாக சிவபெருமான் அருள் பாலிக்கிறார். இவற்றை தரிசித்தால் பாவம் நீங்கி புண்ணியம் பெறலாம்.

வரசித்தி விநாயகர்
1.பிரம்மபுரீஸ்வரர்
2.வேதவனேஸ்வரர்
3.புண்ணியகோட்டீஸ்வரர்
4.மணிகண்டீஸ்வரர் (சனி)
5.மார்க்கண்டேஸ்வரர்
6.பணாமணீஸ்வரர்
7.கணிகண்டீஸ்வரர்
8.பணாமணீஸ்வரர்
9.அத்தீஸ்வரர்
10.குச்சீஸ்வரர்
11.காசிபேஸ்வரர்
12.ஆங்கீரீஸ்வரர்
13.சாந்தாலீஸ்வரர்
14.வசிட்டேஸ்வரர்
15.லட்சுமி ஈஸ்வரர்
16.ராமேஸ்வரர்
17.வன்னீஸ்வரர்
18.முத்தீஸ்வரர்
19.கருடேஸ்வரர்
20.வழக்கறுத்தீஸ்வரர்
21.பராசாரஸ்வரர்
21.ஏ. சீத்தீஸ்வரர்
22.நகரீஸ்வரர்
23.ஆதிபதீஸ்வரர்
24.விருபாட்சஷீஸ்வரர்
25.பணாமுடீஸ்வரர்
26.கவுதமேஸ்வரர்
27.அறம்வளர்த்தீஸ்வரர்
28.தட்சிண கயிலாயம் செவிலிமேடு
29.காசிவிஸ்வநாதர் செவிலிமேடு
30.சுயம்புலிங்கம் செவிலிமேடு
31.கிழக்கு கயிலாயநாதர் செவிலிமேடு
32.வேதபுரீஸ்வரர்
33.திரி லோகநாதர்
34.கணிகண்டீஸ்வரர்
35.எமதர்மேஸ்வரர்
36.காயரோகணேஸ்வரர் (குரு)
37.லிங்கபேஸ்வரர்
37.ஏ.லிங்கபேஸ்வரர்
38.ஏகாம்பரேஸ்வரர்
39.உருத்திரகோடீஸ்வரர்
40.சிதம்பரேஸ்வரர்
41.முத்தீஸ்வரர்
42.வன்னீஸ்வரர்
43.மகா ஆனந்தருத்திரேஸ்வரர்
44.பைரவா ஆலயம்
45.சோளீஸ்வரர்
46.அஷ்டபிக்ஷவ பைரவர்
47.அசிதாங்க பைரவர்
48.சமமார பைரவர்
49.கால பைரவர்
50.உன்மத்த பைரவர்
51.குரோதன பைரவர்
52.விடுவச்சனேஸ்வரர்
53.குருபைரவேஸ்வரர்
54.வன்மீகநாதர் (கழனிவெளி)
55.தக்கீஸ்வரர்
56.மகா ருத்திரேஸ்வரர்
57.ஒத உருகீஸ்வரர்
58.திருமேற்றளீஸ்வரர்
59.காளத்தீஸ்வரர்
60.பலபத்திராராமேசம்
61.உற்றுக்கேட்ட முத்தீஸ்வரர்
62.திருஞானசம்பந்தர்
63.விஸ்வநாதேஸ்வரர்
64.மகா ருத்திரேஸ்வரர்
65.கற்சீசர்
65.ஏ.அப்பர் சுவாமிகள் மடம்
66.லட்சுமீஸ்வரர்
67.வன்னீஸ்வரர்
68.மாண்டுகன்னீஸ்வரர்
69.சவுனகேஸ்வரர்
69.ஏ.காஞ்சி ஆட்சீஸ்வரர்
70.மண்டேலேஸ்வரர்
71. கச்சபேஸ்வரர்–திருமால்–சரஸ்வதி சூரியன் வழிபட்ட தலம்.
72.தர்மசித்தீஸ்வரர்
73.யோகசித்தீஸ்வரர்
74.ஞானசித்தீஸ்வரர்
75.வேதசித்தீஸ்வரர்
76.லிங்கபேஸ்வரர்
77.மார்கண்டேஸ்வரர்
78.இஷ்டசித்தீஸ்வரர்
79.தீர்தேஸ்வரர்–குளக்கரை முருக்கடிபெருமான்
80.ஐராவதேஸ்வரர்
81.அரி சாபம் பயம் தீர்த்தேஸ்வரர்
82.திரி காலஞானேஸ்வரர்
83.நகரீஸ்வரர்
84.மதங்கீஸ்வரர்
85.பரகதீஸ்வரர்(பொற்கொடி பைண்டிங் எதிரில்)
86.சத்தியநாதேஸ்வரர் (புதன்) (திருக்காலிமேடு)
87.சோமசுந்தரேஸ்வரர் (பழைய ரயில் நிலையம்)
88.தட்சிணாமூர்த்தீஸ்வரர் (பழைய ரயில் நிலையம்)
89.சிகண்டீஸ்வரர் (வையாவூர் சாலை)
90.மச்சேஸ்வரர்
91.சிப்பீசம்
92.முத்தீஸ்வரர்
93.பூதநாதேஸ்வரர்
94.சூரி யேஸ்வரர்
95.அருணாசலேஸ்வரர்
96.வீரட்டானேஸ்வரர்
97.பஞ்சமுகேஸ்வரர்
98.பறவாத்தானேஸ்வரர்
99.பெரியாண்டவர்
100.இறவாத்தானேஸ்வரர்
101.எதிர்வீட்டானேஸ்வரர்
102.மகாலிங்கேஸ்வரர் (கேது)
103.ருத்திரகோட்டீஸ்வரர்
104.கடகேஸ்வரர்
105.கங்கணேஸ்வரர்
106.கண்ணேஸ்வரர்
107.மகாகாளேஸ்வரர் (ராகு)
108.சத்திலிங்கம்
109.கவுசிகேசம்
110.காசிவிஸ்வநாதர்
111.அபிராமேஸ்வரர்
112.மாசாத்தான்தளி
113.அமரேஸ்வரர்
114.தேவசேனாதிபதீஸ்வரர்
115.மெய்கண்டீஸ்வரர்
116.கரகரேஸ்வரர்
117.தான்தோன்றீஸ்வரர்
118.அரம்பையேஸ்வரர்
119.அயக்கிரீஸ்வரர்
120.அகத்தீஸ்வரர்
121.அனேகதங்காவதம்
122.கயிலாயநாதர்
123.சந்திரசேகரேஸ்வரர் (சந்திரன்)
124.சந்திரேஸ்வரர்–சந்தைவெளி அம்மன் ஆலயம் உட்புறம்
125.அனுமந்தேஸ்வரர்–சர்வ தீர்த்தம் கிழக்கு
126.கங்காதரேஸ்வரர்
127.யோகலிங்கேஸ்வரர்
128.லட்சுமணேஸ்வரர்
129.சீதேஸ்வரர்
130.மல்லிகார்ஜூனேஸ்வரர்
131.ராமநாதேஸ்வரர்
132.தீர்த்தேஸ்வரர்
133.இரண்யேஸ்வரர்
134.விஸ்வநாதேஸ்வரர்
135.காமேஸ்வரர்
136.தவளேஸ்வரர்
137.வானேஸ்வரர் (ஒலிமுகமதுபேட்டை தர்காவின் பின்பக்கம்)
138.சுக்கிரேஸ்வரர் (சுக்கிரன்)
139.ஜலந்தரேஸ்வரர்
140.ஓணேஸ்வரர்
141.காந்தேஸ்வரர்
142.நந்தீஸ்வரர் (மூலவர் நந்தி மட்டும்)
143.பருத்தீஸ்வரர்(பருத்திகுளம்) – (சூரியன்)
144.செவந்தீஸ்வரர் (விவசாயப் பண்ணை) – (செவ்வாய்)
145.அனந்தபத்மநாதேஸ்வரர் (லிங்கப்பையர் தெரு வீட்டின் பின்பக்கம்)
146.ராமநாதேஸ்வரர்
147.மங்களேஸ்வரர்
147.ஏ.சந்திரமவுலீஸ்வரர் (சங்கலி மடம்)
148. மாதலீஸ்வரர் (தர்கா பின்புறம்)
149.லிங்கபேஸ்வரர்
150.விஷ்ணுவேஸ்வரர் (ஆயிரங்கால் மண்டப கோபுரத்திற்கு எதிர்பக்கம்)
151.வாலீஸ்வரர்
152.கச்சி மயானம் (கொடிமரம் அருகில்)
153.இடபேஸ்வரர் (குளக்கரைக்கு வடகரை)
154.அகத்தீஸ்வரர்
155.படிகலிங்கம்
156.பிரளயம் காத்தேஸ்வரர்
157.வெள்ளைக்கம்பர்
158.நாகலிங்கம்
159.அஷ்டோத்ர லிங்கம்
160.மார்க்கண்டேஸ்வரர்
161.மத்தளமாதேஸ்வரர்
162.கள்ளக்கம்பர்
163.நல்லகம்பர்
164.சகஸ்ரலிங்கம்
165.ஏகாம்பரநாதர் விகடசக்ர விநாயகர்.

இவற்றில் சில ஆலயங்கள் பற்றி வரும் பக்கங்களில் விரிவாக காணலாம்.

# அருள்மிகு கைலாசநாதர் கோவில்

அருள்மிகு கைலாசநாதர் கோவில் காஞ்சீபுரம் பஸ் நிலையத்திலிருந்து மேற்கே அமைந்துள்ளது. கச்சபேசர் கோவில் அமைந்துள்ள வீதியின் வழியே சென்றால் எளிதில் இந்த கோவிலை அடையலாம். இந்த கோவில் அமைதியான, அழகான பச்சைப்பசேல் புல்வெளிகளைக் கொண்டு ஊரின் இறுதியில் அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்தச் சந்நிதி.

இத்திருக்கோவில் 1. வெளிப்பிராகாரம், 2. உள்பிராகாரம், 3. மூலவர் கட்டிடப்பகுதி என மூன்று பிரிவாக அமைந்துள்ளது. முதல் நுழைவு வாயில் கிழக்குப் பார்த்த வண்ணமும் மூலவர் அறைக்குச் செல்லும் வாயில் தெற்கு நோக்கியும் உள்ளது. மூலவர் கைலாசநாதர், பெரிய 16 பட்டை லிங்கத் திருமேனி கொண்டு அருள் புரிந்து வருகிறார்.

சென்னைக்கு அருகே உள்ள திருநின்றவூரில் பூசலார் எனும் பெரியவர் தோன்றினார். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர், அறவழியில் பொருள் தேடி சிவனடியார்களுக்கு உதவினார்.

இவர், இறைவனுக்கு கோவில் கட்ட ஆசைப்பட்டார். ஆனால் அவரிடம் அதற்கான பண வசதியே, பொருளோ இல்லை. பணத்துக்காகப் பல இடங்களில் முயற்சி செய்தார், ஆனால் கிடைக்கவில்லை. அதனால் மனம் வருந்திய அவர் தன் உள்ளத்திலேயே சிவபெருமானுக்குத் கோவிலைக் கட்டலாம் என்று முடிவு எடுத்தார்.



கல், சுண்ணாம்பு, சிற்பியார் எல்லாம் சேகரித்து, நாள் தோறும் ஒருபுறம் அமர்ந்து கண்களை மூடி மனதை ஒரு மனதாக்கி, மனதுக்குள்ளேயே திட்டம் தீட்டி கோவிலை கட்டினார். சுற்றுச்சுவர் மதில், கோபுரம், விமானம், மண்டபம், குளம், இறைவனுக்கான வாகனம், மூலவர், உற்சவர் எல்லாம் மனதுக்குள்ளேயே கற்பனையில் செய்து முடித்தார். இறுதியில் கும்பாபிஷேகம் நடத்தவதற்கும் நாள் குறித்தார்.

பூசலார் தேதி குறித்த அதே நாளில் காஞ்சீபுரத்தில் காடவர்கோன் என்னும் மன்னன் காஞ்சீபுரத்தில் சிவபெருமானுக்கு பெரும் பொருட் செலவில் கற்கோவில் கட்டி முடித்து குட முழுக்கிற்கு நாள் குறித்து முடித்தான்.

ஒருநாள் காடவர்கோன் கனவில் தோன்றிய சிவபெருமான் நீ குறித்த நாளில் திருநின்றவூரில் பூசலார் என்பவர் கோவில் எடுத்தக் குடமுழுக்கிற்கும் ஏற்பாடு செய்துள்ளார். நாம் அங்கு செல்ல உள்ளோம். எனவே, நீ வேறு ஒருநாளில் கும்பாபிஷேகத்தை நடத்து என்று கூறினார்.

மன்னன் காடவர்கோன் கண்விழித்து கனவில் இறைவன் கூறியதை மீண்டும் ஒருமுறை நினைத்து, உடனே திருநின்றவூருக்கு பயணமானான். அங்கு பூசலார் கட்டிய கோவில் எங்கு உள்ளது என்பதை அறிய முடியாமல் குழம்பி, அங்கிருந்த மக்களிடம் கேட்டான்.

மக்கள் பூசலாரை காட்ட, மன்னன் பூசலாரிடம் சென்று தம் கனவில் இறைவன் கூறியதை சொன்னார். அதை கேட்டு பூசலார் மெய்சிலிர்த்து இறைவனின் கருணையை எண்ணி வியந்தார். உடனே பூசலார், தாம் இறைவனுக்குத் தம் மனதில் மட்டுமே கோவில் கட்டியதாகக் கூறினார்.

இதை அறிந்த மன்னன் இறைவனின் கருணையை வியந்து, திருநின்றவூரில் இறைவனுக்கு ஒரு கோவிலைக் கட்டி குடமுழுக்கும் செய்தான். அதன் பின்பு காஞ்சியில் தாம் கட்டிய கைலாநசாதருக்குக் குடமுழுக்கு செய்வித்தான் என்பது புராண வரலாறாகக் கூறுவர்.

இத்திருத்தலத்தில் நாரத மாமுனிவரும், திருமாலும் சிவபெருமானை– கைலாசநாதரை வணங்கி உள்ளனர் இத்திருக்கோவிலில் இறைவன் எழுந்து அருள்புரியும் கருவறையைச் சுற்றிலும் சொர்க்கவாசல் என்னும் பிராகாரம் ஒன்று உள்ளது. இவ்வாசலானது, நுழையும் இடமும் வெளிவரும் இடமும் குறுகிய வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாசலின் வழியே சென்று வெளியே வந்தால் மறுபிறப்பு எடுத்ததற்கு சமம் என்கிறார்கள். கருவறையை சுற்றிலும் பல சிறிய கோவில்கள் உள்ளன. பல்லவர் காலத்து கட்டிடக் கலைத்திறனுக்கு இக்கோவில் ஓர் உதாரணமாகும். இந்த ஆலயம் முழுக்க, முழுக்க மண் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ள கோவில் ஆகும். தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் இந்த ஆலயம் நிர்வகிக்கப்படுகிறது.

காலை 8.30 மணி முதல் 12 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை கோவில் திறந்திருக்கும்.



## ஆதி காமாட்சி அம்மன் கோவில்



காஞ்சி காமாட்சி அம்மன் கோவில் அருகிலேயே ஆதி காமாட்சி அம்மன் கோவில் உள்ளது.

காசியில் இருந்து வந்த அம்பிகை காளி அவதாரம் எடுத்து 3 அசுரர்களை வதம் செய்த தலம் இது. வதம் முடிந்த பிறகும் அம்பாளின் உக்கிரம் அடங்கவில்லை.

இதனால் ஆதிசங்கரர் ஸ்ரீசக்கரத்தை நிறுவி அம்பாளின் உக்கிரத்தை தணித்தார். அதன் பிறகே காமாட்சி அம்மனாக மாறினாள்.விசுவகர்ம சமுதாயத்தால் நடத்தப்படும் இந்த ஆலயத்தில் நவராத்திரி விழா, பங்குனி உற்சவம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆடிப் பூரத்தன்று லட்சத்தீபம் ஏற்றுவது கண கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

சோழர் காலத்தில் கட்டப்பட்ட இந்த ஆலயத்தில் சக்தி லிங்க வழிபாடு மிக சிறப்பானதாக கருதப்படுகிறது. இந்த சக்தி லிங்கத்துக்கு 11 வாரம் திங்கட்கிழமை தோறும் விளக்கு ஏற்றி வழிபாடு செய்தால் நினைத்தது நடக்கும் என்பது ஐதீகம்.

3500 ஆண்டுகள் பழமையான இத்தலத்தின் மகிமைகளை மேலும் அறிந்து கொள்ள சந்தோஷ குருக்களை 9941470606 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# அருள்மிகு சுந்தராம்பிகை அம்மை உடனுறை கச்சபேசுவரர் திருக்கோவில்

(சரஸ்வதி அம்மை வணங்கிப் பேறுபெற்ற தலம்)



இத்திருக்கோவில் காஞ்சி மாநகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்த சந்நிதி. நான்கு மாடவீதிகளைக் கொண்டுள்ளது. காஞ்சீபுரம் பேருந்து நிலையத்திற்கு வடமேற்கே சுமார் 10 நிமிட நடைப்பயணத்தில் அடையும் தொலைவில் அமைந்துள்ளது. காமாட்சியம்மன் திருக்கோவிலின் தெற்கு கோபுர வாயிலின் வழியாகச் சென்றால் 5 நிமிடத்தில் இத்திருக்கோவிலை அடையலாம்.

இத்திருக்கோவில் சுமார் 1600 ஆண்டுகள் முற்பட்டது ஆகும். தண்டியலங்காரம் என்னும் 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த இலக்கண நூலில் இத்திருக்கோவிலைக் குறித்து, குறிப்பிடப்பட்டுள்ளது:-

**கோவிலினுள்**
**விஷ்ணு துர்கைச் சந்நிதி**
**பஞ்ச சந்தி விநாயகப் பெருமான் சந்நிதி**
**பைரவர் சந்நிதி**
**சூரியன் சந்நிதி**
**சரஸ்வதி தேவி சந்நிதி**
**ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி**
**வள்ளி தெய்வானை உடனுறை**
**ஆறுமுகப் பெருமான் சந்நிதி**

ஆகியோர் தனித்தனிச் சந்நிதியில் எழுந்தருளி அருள் புரிந்து கொண்டுள்ளனர்.

திருமால் தசாவதாரத்தில் ஆமைவடிவம் கொண்டு இத்தலத்து ஈசனை - கச்சபேசனை - வணங்கினார். அதாவது கச்சபேசர் = கச்சப + ஈசர் எனப்பிரிக்கலாம். இதன்படி கச்சபம் என்றால் ஆமையைக் குறிக்கும். ஆமைக்கு அருள்புரிந்த ஈசனே கச்சபேசர் ஆனார்.

அதாவது திருமால் ஆமைவடிவம் கொண்டு இத்தலத்து ஈசனை வணங்கியதால் இத்தலத்து ஈசனுக்குக் கச்சபேசர் எனப் பெயர் வந்தது. இத் திருத்தலத்தில் எழுந்தருளி அருள் புரிந்து கொண்டு இருக்கும் கச்சபேசனை கும்பிடவேண்டும் என்று சென்றவர்களும், செல்ல வேண்டும் என நினைத்தவர்களும், சென்று கச்சபேசனைக் கண்டவர்களும், யாவரும் இவ்வுலகத்தில் துன்பம் நீங்கி இன்பம் எய்தி, மீளா முக்தியும் அடைவார்கள்.

இவ்வாலயத்தில் அமைந்துள்ள திருக்குளத்தின் பெயர் இட்ட சித்தித் தீர்த்தம் ஆகும். இக்குளத்தில் முழுகி குளிப்பவர்களுக்குச் சிவபெருமான் திருவருள் பாலிப்பார். இத்தீர்த்தக் குளத்தைக் கண்டவர்களும், தன் உடம்பில் இத்தீர்த்தத்தை தெளித்துக் கொண்டவர்களும், மூழ்கிக் குளிப்பவர்களுக்கு அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு பேறு போன்ற உறுதிப் பொருளை அடைவார்கள் என்றும் சிவஞீன முனிவர் அருளியுள்ளார்.

இந்த இட்ட சித்தி தீர்த்தக் குளத்தில் ஞாயிற்றுக் கிழமை முழுகினால் குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தை பிறந்திடும், மனைவி அமையாதவர்களுக்கு நல் மனைவி அமைந்திடும், நோயில் துன்புறும் மக்கள் நோய் தீர்ந்து அவர்களின் ஆயுள் கெட்டிப்படும், கல்வி அறிவு குறைந்திருப்பவர்கள், கல்வி அறிவைப் பெறுவர்.

பொன்பொருள் இல்லாதவர் அனைத்துச் செல்வ மும் பெற்றுச் சிறப்புடன் வாழ்வர். மற்றும் பதவி வேலையில்லாதவர் பணியையும் பெற்று வாழ்வார்கள் என்று மாதவச்சிவஞானமுனிவர் அவர்கள் திருக்குளத்தைக் குறித்து சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**இத்திருக்கோவிலினுள்**
**அருள்மிகு கச்சபேசுவரர் பெருமான் சந்நிதி**
**இட்ட சித்தீசப் பெருமான் சந்நிதி**
**யோக சித்தீசப் பெருமான் சந்நிதி**
**தரும சித்தீசப் பெருமான் சந்நிதிய**
**ஞானன சித்தீசப் பெருமான் சந்நிதி**
**சதுர்முகேசுவரப் பெருமான் சந்நிதி (வேதசித்தீசப் பெருமான்)**
**யுக சித்தீசப் பெருமான் சந்நிதி**
**பாதாள ஈஸ்வரப் பெருமான் சந்நிதி**
**லிங்கபேசர் பெருமான் சந்நிதி**
**குளக்கரை சலகண்டேசுவரப் பெருமான் சந்நிதி**

ஆகிய சன்னதிகள் உள்ளன.

மற்றும் மூலவர்க்கு வடக்கே சுற்றுப் பிராகாரத்தில் 9 லிங்கங்களையும் (108, 1008 லிங்கங்கள்) தரிசித்துப்பேறு பெறலாம்.

திருமால், சரஸ்வதி, விநாயகர், சூரியன், பைரவர், சாத்தனார் ஆகியோர் கச்சபேசரை வழிபட்டு பேறு பெற்றவர்கள் ஆவர்.

# அருள்மிகு சதுர்புஜ ஆஞ்சநேயர் திருக்கோவில் - பெரிய காஞ்சீபுரம்



உலகளந்தப் பெருமாள் கோவிலுக்கு எதிரில், சதுர்புஜ ஆஞ்சநேயர் உள் ளார். அவர் உளகளந்தார் சந்நிதி வீதிக்க நடுவிலும், வீதிக்கு வடக்கிலும் தனிக்கோவிலாக கிழக்கு நோக்கி அமைந்துள்ளர்.

மூலவர் சதுர்புஜ ஆஞ்சநேயர் நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் எழுந்தருளியுள்ளார்.

மூலவர் சதுர்புஜ ஆஞ்ச நேயர் இரண்டு திருக் கரங்களைக் கொண்டு உலகளந்த பெருமாளை நோக்கியவாறு கும்பிடும் நிலையிலும், மற்ற இரண்டு திருக்கரங்களில் ஒன்றில் சங்கும், மற்றொன்றில் சக்கரத்தைக் கொண்டு பக்தர்களுக்கு - வேண்டுவோர்க்கு வேண்டியவாறு அருள்புரிந்து கொண்டுள்ளார்.

# அருள்மிகு சுரகரேசப்பெருமான் திருக்கோயில்



இத்திருக்கோயில் சிவகாஞ்சிப் பகுதியில் ஏகம்பரநாதர் கோயிலுக்குத் தெற்கிலும், தான்தோன்றீசுவரர் கோயிலுக்கு வடக்கிலும், பாண்டவ தூதப் பெருமாள் கோயிலுக்குத் தென் கிழக்கிலும், ஏகாம்பரநாதர் சன்னதி வீதிக்கு மேற்கிலும் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் சோழர் காலக் கட்டட அமைப்பு கொண்டுள்ளது. தூங்கானை மாடம் என்று கூறப்படும் கஜப்பிரஷ்ட வடிவில் அமைந்துள்ளது. பெரிய மதில் சுவர்களைக் கொண்டும், அழகிய நந்தவனத்தைக் கொண்டும், அமைதியான சூழ்நிலையில் குளு குளு மர நிழலில் அமைந்துள்ள திருக்கோயில் ஆகும்.

முன்னொரு காலத்தில் தாரகன் என்ற அசுரன் ஒருவன் இருந்தான். அவன் சிவபக்தன். சிவனை வேண்டிக் கணக்கற்ற வரங்களைப் பெற்றான் அதனினும் மேலாக, சிவபெருமானுக்கு அவதரிக்கும் மகனால் தான், தனக்கு மரணம் நேர வேண்டும் என்றும் ஒருவரத்தைப் பெற்றான்.

இதனால் அவன் தேவர்களை கொடுமைப்படுத்தினான். இதை தாங்காத தேவர்கள் பிரமனிடம் முறையிட்டனர்.

தட்சனின் யாகத்தில் உடலைத் துறந்த தாட்சாயணி பர்வத ராஜனுக்கு மகளாகப் பிறந்து, வளர்ந்து சிவபெருமானை அடைய மவுனத் தவம் இருந்து வந்தாள்.

சிவபெருமான், உமையைப் பிரிந்த காரணத்தினால் மன அமைதி இன்றி இமயமலைச் சாரலில் இருந்தார். அச்சமயம் சனகாதி முனிவர்கள் ஈசனைக் சந்தித்து யோகத்தை உபதேசம் செய்ய வேண்டும் என்று வேண்ட, சிவபெருமான் அவர்களுக்கு உபதேசிக்கும் முகமாக மோனத்தில் அமர்ந்தார்.

இதை அறிந்த பிரமன், தேவர்களின் குறை தீர வேண்டுமானால் உமாபதியும்–உமை அன்னையும் திருமணம் செய்து சேர்ந்தால் தான் மகன் பிறப்பான் என்று அறிந்து சிவனின் தவத்தைக் கலைக்க முயற்சிக்கிறார். மன்மதனை அனுப்பி அவரின் மனதில் காமஉணர்ச்சியை உண்டாக்க முயற்சித்தார். ஆனால் முடியவில்லை. அம்முயற்சி தோல்வி அடைந்தது. பின்பு, மன்மதன் சிவபெருமானின் நெற்றிக்கண் திறப்பினால் எறிந்து சாம்பலாக, உடன் மன்மதனின் மனைவி ரதிதேவி சிவபெருமானிடம் சென்று அழுது, புலம்பினாள். தேவர்களின் துயரம் தீரவே தன் கணவர் இவ்வாறு நடந்து கொண்டதாகக் கூற, ஈசன் அவனைத் தேற்றி உன் பார்வைக்கு மட்டும் உன் கணவன் தென்படுவான் என்று கூறி அனுப்பி வைத்தார்.



நிஷ்டை கலைந்ததும், ஈசனுக்கும், உமை அன்னைக்கும் ஆனந்தமாகத் திருமணம் நடைபெற்றது. தேவர்கள் அனைவரும் இனித் தங்கள் கவலைத் தீர்ந்தது என்று மகிழ்ந்திருந்தனர். அதன் பின்பு முருகப் பெருமான் அவதரிக்கும் நேரத்தை எதிர்நோக்கி இருந்தனர்.

ஆனால் அது நடைபெறுவதாகத் தெரியவில்லை. ஆதலால் சிவபெருமானை நேரில் சந்தித்து முறையிட்டனர்.

உடனே சிவபெருமான் 1000 சூரியர் ஒன்று கூடினால் தோன்றும் ஒளியைப் போல் பிரகாசிக்கும் தம்முடைய சக்தியை வெளிப்படுத்தி, பருகுங்கள் என்றார்.

அக்கினி தேவன் அச்சக்தியைப் பெற்று பருகினான். பருகியதும் தேவர்கள் அனைவரின் உடலும் கடுமையான வெப்பத்தால் தாக்குற்று தடுமாறினர். இதனால் வருத்தம் அடைந்த தேவர்கள் மீண்டும் சிவனிடம் சென்று வேண்ட, அதற்குச் சிவன் தேவர்களை நோக்கி, பூவுலகில் எமக்கு மிகவும் பிடித்த காஞ்சிப்பதியில் முன்னாள் சுரன் என்ற அரக்கன் ஆவியொழிய நாம் ஒரு லிங்கத்தைத் தாபித்து உள்ளோம். சுரகரீசர் என்ற பெயரில் விளங்கும் அந்த லிங்கத்தை வழிபட்டால் உங்களைத் தகிக்கச் செய்யும் இந்த வெப்பு நோய் நீங்கிவிடும். பின்பு மேருமலைக்குச் சென்று நாம் அளித்தச் சக்தியை வெளிப்படுத்துங்கள் உங்களுக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும் என்று அருளினார்.

சிவபெருமான் கூறியபடி தேவர்கள் அனைவரும் காஞ்சிப்பதியை அடைந்து, சுரகரீச தீர்த்தத்தில் நீராடி, தூய்மையான உள்ளத்தோடு சுரகரீசரை வழிபட்டனர். அந்தக் கணமே அவர்களை வருத்தி வந்த வெப்ப நோய் நீங்கியது.

இத்தலத்து ஈசனை குபேரன் வணங்கியதாக ஒரு செய்தியும் உண்டு. இச்செய்தியை ஒத்திருப்பது போல் மூலவர் அறைக்கு வெளி அறையில் குபேரனின் திருஉருவச் சிலையும், அடுத்த வெளியறையில் அவனுடைய இரண்டு பெரும் நிதியங்களான சங்கநிதி, பதும நிதி என்ற இந்த நிதிகளின் திருவுருவங்களும் இத்திருக்கோவிலினுள் உள்ளன.

பவுர்ணமி அன்று இரவு குபேரனுக்கு அபிஷேக, ஆராதனைகள் செய்து வந்தால் செல்வம் நம்மை வந்து அடையும் என்ற கருத்து நிலவுகிறது. அதன்படி பக்தர்களும் அபிஷேக ஆராதரனைகளைச் செய்கின்றனர். ஜவுளி வியாபாரிகள் சங்கத்தினர் இந்த ஆலயத்தை நிர்வகிக்கிறார்கள். கும்பாபிஷேகம் நடந்து 40 ஆண்டுகள் ஆகி விட்டதால் ஆலயம் மெருகு குலைந்துள்ளது.



# அருள்மிகு ஓணகாந்தேசுவரர் கோவில் (பஞ்சுப்பேட்டை)

இத்திருக்கோவில் ஏகப்பன் திருக் கோவிலுக்கு வட மேற்கேயும், அருள்மிகு தவளேசுவரர் திருக்கோவிலுக்கும் சர்வதீர்த்தக் குளத்திற்கும் வடக்கேயும், பஞ்சுப்பேட்டை என்னும் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்நிலையம் அலுவலகத்திற்குத் தெற்கேயும் அமைந்துள்ளது. இதுசுமார் 1350 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருத்தலம்.

தொண்டைநாட்டுத் திருமுறைத் திருத்தலங்கள் 32–ல் இந்திருத்தலம் 3–வது திருத்தலமாகும். முன்னொரு காலத்தில் வாணன் என்னும் அசுரன், அரசனாக ஒரு நாட்டை ஆண்டு வந்தான். அவனிடம் சேனாதிபதிகளாக ஒணன், காந்தன் ஆகிய இருவரும் பணிபுரிந்து கொண்டு இருந்தனர். இவர்கள் இருவரும் (ஓணன், காந்தன்) ஒழுக்கத்துடனும், தரும வழியிலும், பிறருக்கு எந்த விதமான தீங்கும் செய்யாமல், இறைவன், அம்மையப்பனாகிய ஈசனிடம் மிகவும் பக்தி கொண்டு வழிபட்டு, சிறந்து வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் இருவரும் மாயையாகிய பாசத்திலிருந்து நீங்கி, இறைவனின் திருவடிகளில் ஒன்றிட வேண்டுமென்று கருதி காஞ்சிபுரத்தை அடைந்து தீர்த்ததை (ஓணகாந்த தீர்த்தம்) ஏற்படுத்தி இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்து வழிபட்டு வந்தனர். இவர்கள் இருவரும் மனமுருகி செய்த பூசையால், இறைவன் மகிழ்ந்து உங்கள் இருவருக்கும் என்ன வேண்டும் என கேட்டார். இருவரும் முத்தியைக் கொடுத்தல் வேண்டும் எனக்கேட்டனர்.

ஈசன் அவ்வரங்களை அவர்களுக்குக் கொடுத்து அருளினார். இத்திருத்திலத்திற்குச் சைவ சமயக்குரவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகைத்தந்து இத்தலத்து ஈசனை வணங்கி வழிபட்டு 10 பாடல்களால் பாடியுள்ளார். ஏகம்பத்தில் தான் இறைவனுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை மீறியதால் இழந்த கண்களில் ஒன்றைப் பெற்றுப் பாடினார். இத்தலத்தில் பொன்னைப் பெற்றார் என்பது வரலாறு ஆகும். எனவே, நாமும் இத்தலத்து ஈசனை வணங்கி, வழிபட்டு அவர் தரும் செல்வத்தைப் பெற்று வாழலாம்.

இத்தலத்தில் வெள்ளி தோறும் குறி சொல்கிறார்கள். மேலும் விபரம் பெற :– 9364330011 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# அருள்மிகு வீராட்டகாசப் பெருமான் திருக்கோவில்

## (அப்பாராவ் முதலியார் தெரு)

**வீ**ராட்டகாசப் பெருமான் திருக்கோவில் பெரிய காஞ்சீபுரம் பகுதியில், பிறவாத்தானம் கோவிலுக்கு வடக்கே அமைந்துள்ளது.

இத்தலத்தில் பெரிய அளவில் சுற்றுச் சுவர்கள் உள்ளன. 1. மூலவர் கட்டிடம், 2. அர்த்த மண்டபம், 3. மகா மண்டபம், 4. வெளிப்பிரகாரம் என கோவில் அமைப்பு உள்ளது.

கோவிலுக்குச் செல்லும் வாயில் தெற்கு நோக்கியும், மூலவர் மேற்கு நோக்கிய வண்ணம் எழுந்தருளியுள்ளார். மூலவர் எதிரில் நந்தி, பலிபிடமும், பலி பிடத்திற்கு அடுத்து சாக்கிய நாயனாரின் திருமேனி நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. சாக்கிய நாயனார் கல்எறிந்து வழிபட்ட தலமாக கருதப்படுகிறது.

மேடைப் பகுதியில் நான்கு லிங்கங்கள் அமைந்துள்ளன.

ஐந்து திருமுகங்களைக் கொண்டுள்ள எப்பெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து அக்னி, வெளிப்பட்டு அண்டசராசரங்களையும் எரித்துச் சாம்பலாக்கியது. அந்த பிரளய



காலத்திலும் அழியாது விளங்கும் காஞ்சிபுரத்தில் எழுந்தருளி ஆனந்த மிகுதியால் மென்மேலும் வீரநகையைச் செய்தார். அனால் அவ்விடம் வீராட்டகாசம் ஆனது.

கொங்கண முனிவர் தன்னிடம் அதிசயக் குளிகை ஒன்றை வைத்திருந்தார். அந்தக் குளிகையை எந்தப் பொருளின் மீது வைத்தாலும் கண்ணிமைக்கும் நேரத்தில் அப்பொருளைச் சாம்பலாக்கிவிடும்.

காஞ்சியிலே வீராட்ட காசத்திலே கோவில் கொண்டிருக்கும் இறைவன் பெருமையைக் கேள்விப்பட்ட கொங்கண முனிவர் காஞ்சி வந்து வீராட்டகாசத்திலே லிங்கத்தைக் கண்டு அதன் திருமுடிமேல் தன்னிடம் உள்ள குளிகையை வைத்தார். அடுத்தகணமே சிவலிங்கம் குளிகையைத் தன்னுள் மறைத்துக் கொண்டு விட்டது.

இதனைக் கண்ட முனிவர் பெரிதும் வியந்து அப்பெருமானை வணங்கி, அவர் முன்னிலையில் தவம் செய்ய தொடங்கினார். சில நாளில் கொங்கண முனிவர் சிவன் திருவருளை அடைந்து தாம் விரும்பிய பயன்களைப் பெற்றார். அவரைப் போலவே பலர் அத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றார்கள். இத்தலத்து இறைவனைத் திருமால் வழிபட்டு பவள நிறம் பெற்றார்.

### அருள்மிகு கமலாம்பிகைத் தாயார் உடனுறை

# ஸ்ரீ காயாரோகணேசுவரர் திருக்கோவில்

## (குருபகவான் தலம்)



காஞ்சீபுரத்தில் உள்ள நவக்கிரக தலங்களில் குரு தலமாக காயாரோகணேசுவரர் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில் காஞ்சீபுரம் பஸ் நிலையத்திலிருந்து தென்மேற்கில் கரிக்கினில் அமர்ந்தவள் வீதியின் இறுதியில் அமையப் பெற்றுள்ளது.

திருமாலும், பிரம்மனும் ஒருங்கே அழிய நேரும் சமயத்தில் ஈசன் அவ்விருவரையும் ஒடுக்கி, அவர்களுடைய திருமேனியைத் தம்தேகத்தில் ஐக்கியப் படுத்திக் கொண்டார். அச்செயலைக் காயாரோகணம் என்பர்.

சிவபெருமான் தமக்கு மிகவும் பிடித்த, விரும்பித் தங்கும் தலமான காஞ்சியில் திருமாலையும் பிரம்மனையும் ஒருங்கே தம்முள் ஒடுக்கிக் கொண்டு ஆனந்த நடனம் புரியும் இடம்தான் காரோணம் என்று பெயர் பெறுகிறது. இத்தலத்தில் வெண்தாமரை நாயகியான திருமகள், ஈசனை வழிபட்டு அச்சுதனைத் தன் நாயகனாகப் பெற்றாள். பிரகஸ்பதியாகிய குருபகவான் இத்தலத்து ஈசனை வழிபட்டு அவருடைய பேரருளுக்குப் பாத்திரமாகி சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று தேவர்களுக்கு ஆசானாகும் பேறு பெற்றார்.

மேலும் இத்திருத்தலத்தில் – எமன் ஈசனை வழிபட்டு தென்திசைக்கு அதிபதியாகும் பேற்றினைப் பெற்றான். இத்திருத்தலத்தில் உள்ள தீர்த்தக் கரையில் பிதுருக்களுக்குச் செய்யும் கர்மாக்களைச் செய்தால் கிடைத்ததற்கு அரிய முக்தியாகியப் பதத்தைப் பெறுவர் என்றும் கூறுவர். இப்படியாக இத்திருத்தலத்தில் மகாலட்சுமி, பிரகஸ்பதி குருபகவான், எமதர்மராசன் மற்றும் முனிவர்களும் தேவர்களும் வணங்கியத் திருத்தலமாக விளங்குவதால், நாமும் இத்திருத்தலத்தில் எழுந்து அருள்புரியும் ஈசனை, வணங்கி வழிபட்டு பேறு பெறலாம். **மேலும் தகவலுக்கு :- 9444704271, 9629007171.**

### அருள்மிகு

# இராமநாதேசுவரர் திருக்கோவில்

## பெரிய காஞ்சீபுரம்

இத்திருக்கோவில் பெரிய காஞ்சீபுரம்–சிவ காஞ்சி–பகுதியில் சங்கரமடத்திற்கு மேற்கேயும், ஏகாம்பரநாதர் கோவிலின் ராஜகோபுரத்திற்குத் தெற்கேயும், சாலைத் தெருவிற்கு வடக்கேயும், சாலையை ஒட்டினாற்போல் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் சந்நிதி கிழக்குப் பார்த்தச் சந்நிதி ஆகும்.

இராமாயணத்தில் – இலங்கையிலே மன்னன் இராவணனுடன் போரிட்டு அரக்கர் கூட்டத்தை அடியோடு அழித்துவிட்டு, தன் மனைவியை–அன்னை ஜானகியை சிறை மீட்டுத் திரும்பிய தசரதபுத்திரர் ஸ்ரீராமன், சேதுக்கரையை–இராமேசுவரத்தை அடைந்ததும் சண்டையில் இராவணனை அழித்த பாவம் நீங்க வேண்டு ஈசனை அர்ச்சித்து வழிபட்டார்.

ஈசன் இராமனுக்குத் தரிசனம் தந்து, இராவணன் எம்மிடத்தில் பக்திபூண்டு சிவனடியாராக விளங்கினான். ஆகவே சிவனடியாருக்கு இழைத்த துன்பம்–பாவம்–நீங்க நீ காஞ்சி நகரை அடைந்து அங்கே எம்மை வழிபடவேண்டும் என்று அருளினார். இராமனும் அவ்வாறே காஞ்சி நகரை அடைந்து மங்களீசத்துக்கு மேற்கே இராமநாதரை பிரதிட்டை செய்து அவரை பக்தியோடு வழிபட்டு தோஷம்–பாவம் நீங்கப் பெற்றார். காஞ்சியிலுள்ள இராமநாதேச்சரம் சேதுவை விட முக்கியத்துவம் வாய்ந்த தலம் ஆகும்.





### அருள்மிகு இலகுளீசுவரர் என்கிற

# தவளேஸ்வரர் திருக்கோயில்

## சர்வதீர்த்தக் குளக்கரை

இத்திருக்கோயில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு வடமேற்கே சர்வதீர்த்த வடக்குக் குளக்கரைக்கு அருகில், தார் சாலையின் அருகிலேயே இத்திருத்தலம் அமைந்துள்ளது. இலகுளீசுவரர் என்கிற அருள்மிகு தவளேசுவரர் திருக்கோயில் தனிச்சன்னதி உடைய திருக்கோயில் ஆகும். இங்கு எழுந்தருளியுள்ள இலகுளீசுவரர், ஆவுடையாருடன் கூடிய சிறிய லிங்கத் திருமேனி கொண்டு அன்பர்களுக்குக் காட்சித் தந்து அருள்புரிந்து கொண்டுள்ளார். இத்திருக்கோயிலுக்குச் செல்லும் முதல் வெளிப்பிரகார வாயில் தெற்கு நோக்கியும், மூலவர் எழுந்தருளியுள்ள வாயில் கிழக்கு நோக்கியும், மூலவர் இலகுளீசுவரர் என்கிற தவளேசுவரர் கிழக்குப் பார்த்த வண்ணம் எழுந்தருளியுள்ளார்.

திருக்கயிலை மலையில் ஒருசமயம், 1. சுவேதன், 2. சுவேத கேது, 3. சுவேதசீகன், 4. சுவேததாச்சுவன், 5. சுவேதலோகிதன், 6. சுதாரன், 7. துந்துமி முதல் இலகுளீசன் ஈறாக உள்ள உருத்திராம்சமாகத் தோன்றிய யோகாச் சாரியார்கள், யோகாசாரீயா என்னும் பெரும் பதவியைப் பெற, கடும் தவம் செய்தார்கள். இறைவன் சிவபெருமான் அவர்களின் தவத்திற்கு மகிழ்ந்து, அவர்கள் முன்பு தோன்றி, நீங்கள் அனைவரும் காஞ்சிப் பதியை அடைந்து, தனித்தனி லிங்கம் அமைத்து எம்மை வழிபட்டால், உங்கள் கருத்தை நிறைவேற்றி வைப்போம் என்று அருளினார். யோகாச்சாரியார்கள் அனைவரும் இறைவனின் ஆணையைச் சிரமேற்கொண்டு, காஞ்சிப் பதியில் உள்ள சர்வ தீர்த்தக் குளக்கரையை அடைந்து தத்தமக்குத் தோன்றிய எண்ணங்களின் படியும், வெவ்வேறு இடங்களில் லிங்கங்களைத் தாபித்து, பூஜித்து, வழிபட்டு தாம் விரும்பிய பேற்றை அடைந்தனர் என்று காஞ்சிப்புராணத்தில் மாதவச் சிவஞானமுனிவர் கூறியுள்ளார்.

இத்தலம் யோகாச்சாரியார்கள் வழிபட்டு பேறுபெற்றத் திருத்தலம். மேலும் தகவல்களை 91506 06828 என்ற எண்ணில் பெறலாம்.

# அருள்மிகு மாகாளீசுவரர் திருக்கோவில்



இத்திருக்கோவில் பெரிய காஞ்சீபுரம் பகுதியில் அமைந்துள்ள காமாட்சியம்மன் கோவில் மேற்கு கோபுர வாயிலின் எதிரில் செல்லும் ஜவஹர்லால் வீதியின் தெற்குப் பகுதியில், சாலையை ஒட்டி அமைந்துள்ளது.

இக்கோவிலின் நுழைவு வாயில் வடக்குப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது. மூலவர் அருள்மிகு மாகாளீசுவரர், பூமியின் மட்டத்திலிருந்து சுமார் 4 அடி பள்ளத்தில் தனிக் கட்டடத்தில் எழுந்தருளி அருள்புரிந்து கொண்டு உள்ளார். மூலவரின் ஆவுடையார் பகுதி மேற்குப்பார்த்த வண்ணமும், லிங்கத்திருமேனி வடக்குப் பார்த்த வண்ணமும் அமைந்துள்ளது.

கயிலாய மலையில் ஈசன் திருமேனியை அலங்கரித்துக் கொண்டிருந்த பாம்பான மாகாளன், ஒரு சமயம் சிவபெருமான் அணிந்து கொள்ளத் தேடும் போது, காளன், ஈசனின் கண்களுக்குத் தென்படவில்லை.

இதனால் கோபமுள்ள ஐயன் ஞானக் கண்ணால் பார்க்க, காளன் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற தன் மனைவியின் அருகில் இருப்பதைக் கண்டு கோபமுற்று, உடனே காளனைக் கயிலைக்கு வரச் செய்து காளனின் பொறுப்பற்றத் தன்மையையும், காமுக உணர்வையையும் எடுத்துக்காட்டி, காளன் செய்த குற்றத்தின் காரணமாக இனி என் திருமேனியை அலங்கரிக்கும் பாக்கியம் உனக்கு இல்லை. அத்தகைய வாய்ப்பை நீ இழந்து விட்டாய் எனக் கூறி, கேவலம் நிலையற்ற இன்பத்தை நீ விரும்பிச் சென்றதால் இனி பூவுலகில் நீ பாம்பாகப் பிறக்கக் கடவாய் என்று சாபம் அளித்தார்.

பிறகுஈசன் சொற்படியே காளன் காஞ்சியை அடைந்து, அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவிலினுள் அமைந்துள்ள உலகாணி தீர்த்தக் குளத்திற்கு மேற்கே, எம்பெருமானுக்குத் தன்பெயரில் ஒரு லிங்கத்தைப் பிரதிட்டை செய்து அவருக்கு மாகாளீசுவரர் என்னும் திருப்பெயரைச் சூட்டி நாள்தோறும் பயபக்தியுடன் வழிபட்டு வந்து இறுதியில் என்றும் கிடைத்தற்கு அரிய, அழியாத சிவலோக வாழ்க்கையைப் பெற்றான் என்பது காளனின் புராண வரலாறாகத் திருக்காளத்திப்புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திருக்கோவில் சற்று ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டது ஆகும். இது ராகு கேது பகவான்கள் தலம் என்றும் கருதப்படுகிறது. 9 கிரகங்கங்களும் தம் மனைவியருடன் தனி தனி சன்னதிகளில் உள்ளனர்.

பொதுவாக பெற்றெடுத்த தாயாருக்கு ராகுவினால் தோஷம், புத்திரதேஷம், ஆயுளுக்கு தோஷம், முன்னோர்களுக்குத் தோஷம், தொழிலில் நிலையாக இல்லாத்தன்மை இப்படியாக இவரால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மேற்குறிப்பிட்டவைகளால் ஏதோனும் ஒரு வழியில் தொல்லைகளையும், கஷ்டங்களையும் கொடுத்துக் கொண்டு இருப்பார்.

கேதுவை ஞானகாரகன் என்று சோதிட நூல்களில் குறிப்பிட்டப்பட்டுள்ளது. கேது என்றால் கேடுகளை விளைவிப்பவன் என்று பொருள் மேலும் இவரை மோட்சம் அளிக்கும் கிரகம் என்று கூறுவர்.

ராகு கேது தோஷத்தால் பாதிக்கப்பட்டவர் இத்திருத்தலத்தில் உள்ள ராகு கேது (சிவலிங்கத் திருமேனி கொண்டு அருள் வழங்கிக் கொண்டிருக்கும் ஈசன்)விற்குப் பரிகாரம் செய்தால் தோஷ நிவாரணம் பெறலாம்.

நாகதோஷம், காலசர்ப்ப தோஷம் உள்ளவர்கள் இத்தலத்து ஈசனை செவ்வாய், ஞாயிறு, வெள்ளிக்கிழமைகளில் வணங்கி தோஷ நிவாரணம் பெறலாம்.

அருள்மிகு மகாளீஸ்வரர் திருக்கோவிலானது – அருள்மிகு குமரகோட்டம் சுப்பிரமணியசுவாமித் திருக்கோவிலின் உபகோவிலாகும். தமிழ்நாடு இந்த அறநிலையத்துறையைச் சார்ந்த நிர்வாக அதிகாரி வேல் கீழ் உள்ளது.

மேலும் தகவல்களை குருக்கள் வெங்கடேசனை 9944723775 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# அருள்மிகு இறவாத்தானம் திருக்கோவில்

## (ஜவஹர்லால் தெரு)



இறவாத்தானம் கோவில் பெரிய காஞ்சிபுரம் பகுதியில் ஜவஹர்லால் வீதியில், (பெரிய கம்மாளத் தெரு) புதிய ரெயில் நிலையத்திற்குச் செல்லும் பிரதானச்சாலையில், அமைந்துள்ளது. பச்சை வண்ணர் கோவிலை தரிசிக்கச் செல்லும் போது அருகில் அமைந்திருக்கும் இத்திருக்கோவிலுக்குச் சென்று இறவாத்தானே சுவரரை தரிசிக்கலாம்.


இத்திருக்கோவில் 1, மூலவர் அறை (கருவறை), 2. அர்த்தமண்டபம், 3. மகாமண்டபம், (16 தூண்களைக் கொண்ட மண்டபம், 4. வெளிப்பிரகாரம் என நான்குப் பகுதிகளை கொண்டுள்ளது. முன்னொரு கற்பகாலத்தில் தவத்தில் சிறந்த முனிவர்கள் இறப்பிற்கு அஞ்சித் தவம் புரிந்தனர். இவர்களின் கடுமையான தவத்தினால் நான்முகன் அவர்கள் முன்னே சென்று, நீங்கள் இத்தவம் புரிவதற்கு என்ன காரணம்? எனக் கேட்டார். முனிவர்கள் தாங்கள் இறப்பிற்கு அஞ்சுகிறோம். எனவே இறப்பைத் தவிர்க்க வேண்டும் என நான்முகனிடம் கூறினார்கள்.

முனிவர்களின் கருத்தைக் கேட்டறிந்த பிரமன், முனிவர்களை நோக்கி உங்களின் இந்தக் கோரிக்கை நிறை வேண்டுமானால் நீங்கள் பூலகில் உள்ள காஞ்சிபுரத்துக்கு சென்று சிவனை வழிபட்டால் பெறலாம் என்றார்.

பிரமனின் வார்த்தையைக் கேட்ட முனிவர்கள் உடனே காஞ்சியை அடைந்தனர். காஞ்சியில் லிங்கம் ஸ்தாபித்து இறைவனை மனமுருகி வணங்கி அதன் பயனாகச் சாகாவரம் பெற்றனர். சுவேதன் என்பவன் தனக்கு மரணம் நெருங்கி விட்டது என்பதை அறிந்ததும், காஞ்சி மாநகரை அடைந்து சாகாவரம் பெற்ற முனிவர்கள் ஸ்தாபித்து வணங்கி வழிபாடு செய்த இறைவனை அடைந்து பக்தியுடன் வழிபட்டு மரணத்தை சென்றான்.

இத்தலத்தில் மார்க்கண்டேயன் வணங்கி வழிபட்டு சிரஞ்சீவித் தன்மையைப் பெற்றான். மேலும் சாலங்காயினன் என்ற முனிவரின் பேரனும் இத்தலத்தை வணங்கி இறப்பைக் கடந்தான். அத்துடன் அல்லாமல் சிவ கணங்களுக்குத் தலைவனும் ஆனான். இப்படி, இறப்பிற்கு அஞ்சி சாகாவரம் பெற்ற முனிவர்களும், மரணத்தை வென்ற சுவேதனும், சிரஞ்சீவித் தன்மையைப் பெற்ற மார்க்கண்டேயரும், சாலங்காயினன் முனிவரின் பேரனும் வழிபட்டு பேறு பெற்ற தலத்தை நாமும் வணங்கி மரணத்தை வெல்லும் அருளைப் பெறலாம்.

# அருள்மிகு கவுசிகேசுவரர் திருக்கோவில்



இத்திருக்கோவில் பெரிய காஞ்சீபுரம் பகுதியில் காமாட்சியம்மன் கோவிலுக்கு வடகிழக்கேயும், காமாட்சியம்மன் திருமண மண்டபத்திற்குக் கிழக்கேயும், பெரிய காஞ்சீபுரம் இந்திய தபால் துறை அலுவலக கட்டடத்திற்கு வடக்கேயும் (பின்புறம்) அமைந்துள்ளது.

காஞ்சீபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 10 நிமிட நடைப்பயணத்தில் அடையும் வண்ணம் அமைந்துள்ளது. காமாட்சியம்மனைத் தரிசிக்க வரும் அனைவரும், அன்னையைத் தரிசித்தப் பின்பு திருக்கோவிலை விட்டு வெளியே வந்தவுடன் வெளிப்புற மதிற்சுவர் (வடக்குப் பக்கம்) முடியும் இடத்திற்கு எதிரில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

இங்கு எழுந்தருளி அருள் புரிந்து கொண்டு இருக்கும் கவுசிகேசுவரர் கிழக்குப் பார்த்த வண்ணம் எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோவிலின் மூலவர் கட்டடத்தின் மேற்கோபுர விமானத்தின் சுற்றுச்சுவரில் தட்சிணாமூர்த்தி, யோக நரசிம்மர், பிரம்மா ஆகியோர் அமைந்துள்ளனர்.

உத்தமசோழனால் கட்டப்பட்ட இத்திருக்கோவிலின் வெளிப்புறம் தற்போதைய பூமியின் மட்டத்தில் இருந்து சுமார் 4 அடி பள்ளத்தில் சுற்றுப்பிராகாரம் அமைந்துள்ளது. மூலவர் அறை, பூமியின் மட்டத்தில் இருந்து சுமார் 6 அடி உயர மேடைக் கட்டடத்தில் கருவறைக் கொண்டு மூலவர் கவுசிகேசுவரர் கிழக்குப் பார்த்து அமைந்து, பக்தர்களுக்கு அருள்புரிந்து கொண்டு உள்ளார்.

மூலவர் கவுசிகேசுவரர் எழுந்தருள் புரியும் மூலவர் கட்டடத்தின் – கோபுரத்தின் சுற்றுச் சுவரில் தெற்குப் பார்த்த வண்ணத்தில் தட்சிணாமூர்த்தி சுவாமிகளும், மேற்குப் பார்த்த வண்ணம் யோக நரசிம்மரும், வடக்குப் பார்த்த வண்ணம் பிரம்மாவும் அமைந்துள்ளனர். விமான சுற்றுப் பிராகாரத்தில் மும்மூர்த்திகளும் சுதை வடிவில் அமைந்து இருப்பது சிறப்பு வாய்ந்ததாகும். இந்த அமைப்பை இத்திருக்கோவிலில் காணலாம். அன்னை பார்வதி தேவியின் தேகத்திலிருந்து அவளின் அம்சமாக கவுசிகி என்கிற துர்கை அவதரித்ததாகப் புராண வரலாறு வாயிலாக அறியலாம். சும்பன் மற்றும் விசும்பன் ஆகிய அரசுரர்களை அழிப்பதற்காக தோன்றியவள் தான் கவுசிகை என்கிற துர்க்கை ஆவாள்.

உமையன்னை காஞ்சிக்கு எழுந்தருளி கம்பையாற்றின் கரையில் இறைவனை நினைத்து தவம் புரிந்த நேரத்தில், இறைவியின் தவத்தின் தன்மையை அறிய இறைவன், உலகிலுள்ள தீர்த்தங்கள் எல்லாம் ஒன்று திரண்டு காஞ்சீக்கு வரவேண்டும் என மனதில் எண்ணினார். அனைத்துத் தீர்த்தங்களும் வெள்ளப் பெருக்கெடுத்து வந்தன. இதனைக் கண்ட அன்னை அவ்வெள்ளத்தால் அடித்துச் செல்லாதவாறு ஏகம்பனை மார்புடன் தழுவிக் கொண்டாள். இதனால் இறைவன் தழுவக் குறைந்தார்.

காஞ்சீ சங்கரமடத்தினரால் மூலவருக்கு இரண்டு கால பூஜை செய்விக்கப்படுகிறது. இத்திருக்கோவில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

காஞ்சி பெரியவர் மிகவும் விரும்பி தரிசித்த இத்தலத்தில் பிரதோஷ வழிபாடு சிறப்பாக நடக்கிறது. தினமும் வில்வ அபிஷேகம் நடப்பது குறிப்பிடத்தக்கது.

# அருள்மிகு வழக்கறுத்தீசுவரர் திருக்கோவில் மற்றும் பராசரேசுவரர் திருக்கோவில்



அருள்மிகு வழக்கறுத்தீசுவரர் கோவில் மத்திய காஞ்சியில் பச்சையப்பன் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு கிழக்கும், காந்திசாலைக்குத் தெற்கிலும் அமைந்துள்ளது.

சுமார் 6 அடி பள்ளத்தில் இத்திருக்கோவிலின் நுழைவு வாயில் அமைந்துள்ளது. நுழைவு வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதலில் உற்சவ மண்டபத்தில் விநாயகரைத் தரிசிக்கலாம்.

அடுத்து, வழக்கறுத்தீசரையும், பராசரேசரையும் தரிசிக்கலாம். இருவரும் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளனர். இதில் வழக்கறுத்தீசுவரர் 16 பட்டை லிங்கத்திருவுருக் கொண்டு பெரிய ஆவுடையாருடன் கூடிய இலிங்க ரூபமாக எழுந்தருளியுள்ளார்.

ஒரே திருத்தலத்தில் 2 சந்நிதிகளைக் கொண்டுள்ள திருத்தலம் இது ஆகும். (கச்சபேசமும் 2 திருக்கோவில்களைக் கொண்டுள்ள திருத்தலம் ஆகும்)

இத்தலத்தில் 1. விநாயகர், 2. வள்ளி தெய்வானை உடனுறை சுப்பிரமணியர், 3. துர்கை, 4. சண்டிகேசுவரர், 5. பைரவர், 6. சூரியன் ஆகியோர் தனித்தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ளனர்.

ஒரு கற்பகாலத்தில், வாழ்ந்து மறைந்த முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொல்லான "ஸத்" "அஸத்"க்கு பொருள் கொள்வதில் கருத்து வேறுபாடுகள் – சந்தேகம் ஏற்பட்டு மனவருத்தத்தைத் தந்தது.

பொதுவாக "ஸத்" எனப்படுவது அருள் ஞானத்திற்கும், பரம் பொருளுக்கும் பெயர் என்று அறிஞர் பெருமக்கள் கூறுவர். அதே போல் "அஸத்" என்பதற்கு சூனியத்திற்குப் பெயர் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

இவ்வாறு இரண்டு சொல்லிற்குப் பொருள் அறிந்து கொள்வதில் கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டதால் தேவர்களும், முனிவர்களும் அதைத் தீர்த்துக் கொள்ள, அப்பொருளுக்கு உண்மையான பொருளினை அறிந்து தெளிவு பெற, அவர்கள் காஞ்சீபுரத்தை அடைந்து சிவலிங்கம் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தனர்.

இவர்களின் பூசையால் மகிழ்ந்த ஈசன், லிங்கத்தினிலிருந்து வெளிப்பட்டு, அவர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

இறைவனைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் பலவாறாக அவரைத் துதித்து வழிபட்டனர். அதன் பின்பு இறைவன் அவர்களை நோக்கி என்னை நினைந்து வழிபட்டதின் காரணம் என்ன? என்று கேட்டார்.

அதற்கு முனிவர்களும், தேவர்களும் ஸத், அஸத் சொல்லுக்கு விளக்கம் அளித்து எங்களுக்குள் எழுந்துள்ள வழக்கினை–பிரச்சினையினைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டிப் பணிந்தனர்.

முனிவர்களுக்கும், தேவர்களுக்கும், இடையே ஏற்பட்டு பிரச்சினையை – வழக்கினை இறைவனே நேரில் வந்து தீர்த்து வைத்ததால் இத்தலத்து இறைவன் வழக்கறுத்தீசுவரர் எனப் பெயர் பெற்றார்.

வழக்கு விவகாரங்களில் சிக்கி தவிப்பவர்கள் இத்தலத்துக்கு வந்து பரிகார பூஜைகள் செய்து பலன் பெறுகிறார்கள்.

மேலும் இத்தலத்து ஈசனை 16 தீபம் ஏற்றி, 16 முறை வலம் வந்து, 16 வாரம் தொடர்ந்து அன்னதானம் செய்தால் நினைத்தது நிறைவேறும் என்பது ஐதீகம்.

மேலும் தகவல்களை குணாளனிடம் 9677728677 என்ற எண்ணில் பெறலாம்.

# அருள்மிகு பிறவாத்தானம் திருக்கோவில்

பிறவாதானம் கோவில் பெரிய காஞ்சீபுரம் பகுதியில் ஜவஹர்லால் வீதியில் (பெரிய கம்மாளத் தெரு), அமைந்துள்ளது. கோவிலின் உள்ளே சென்றால் வெட்ட வெளியின் மத்தியில் கோவிலைக் காணலாம். இறவாத்தானம் கோவிலின் எதிரில் இக்கோவில் அமைந்துள்ளது.

பூமியின் சமதள மட்டத்திலிருந்து சுமார் 6 அடி உயர மேடைப் பகுதியில் மூலவர் கட்டிடம் அமைந்து உள்ளது. மூலவர் மேற்கு திசை நோக்கிய நிலையில் எழுந்தருளியுள்ளார். இறைவனை பிறவாதீசுவரர் என மக்கள் அழைக்கின்றனர்.

முன்னொரு காலத்தில் வாமதேவன் என்னும் முனிவர் தமது தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே பிறப்பதற்கு பயப்பட்டார். இதனால் வாமதேவர் தனக்குப் பிறவாமை வேண்டும் என்று இறைவனை இருதயத்தில் எண்ணி வழிபடலானார்.

அவரின் வழிபாட்டை ஏற்று இறைவன், முனிவர் இருக்கும் கர்ப்பத்தில் தோன்றி, நீ உலகத்தில் பிறந்து காஞ்சியில் எம்மைப் பூசித்தால் உன்னைப் பிறவி அணுகாது என்று அருளினார்.

அதன்படி வாமதேவர் பூமியில் பிறந்து, அதன் பின்பு காஞ்சீபுரத்தை அடைந்து ஓர் லிங்கம் பிரதிஷ்டை செய்து நித்தம் வழிபட்டு வந்தார். இதனால் பிறவி நீங்கப் பெற்றார்.

வாமகேவ முனிவர் ஈசனை வழிபட்டு, பிறவாத் தன்மையைப் பெற்ற அத்தலம் பிறவாத்தானம் என அழைக்கப்படுகிறது. அத்தலத்திற்குச் சென்று சிவபெருமானைப் பக்தி சிரத்தையுடன் வழிபடுவோர் மீண்டும் தாயின் கருப்பையை அடைய மாட்டார்கள் என்பது ஐதீகம்.



# காஞ்சீபுரத்தில் உள்ள தீர்த்த தலங்களின் சிறப்புகள்

மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகை வழிபாடுகளையும் மேற் கொள்வோர் முதலில் தலத்தை யடைந்து அதனைப் பக்தியோடு போற்றியும் அடுத்து தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டு நிறைவாக மூர்த்தியை திருக்கோவிலில் கண்டு வணங்கியும் அவன் அருளை வேண்டுவதே முறை. அதனால் காஞ்சி மாநகரத் தலத்தின் தீர்த்தச் சிறப்புகளை நாம் காண்போம்.

காஞ்சீபுரத்தில் மொத்தம் 7 தீர்த்தத்தலங்கள் சிறப்பானதாக கருதப்படுகிறது.

**1. இஷ்ட சித்தி தீர்த்தம்:** இத் தீர்த்தம் காஞ்சி நகரின் நடு நாயகமாகவுள்ள கச்சபேசுவரர் திருக்கோவில் வெளி பிரகாரத்தில் உள்ள இத் தீர்த்தத்தை கோவிலின் கோபுர வாயிலில் நுழைந்தவுடன் வலக்கை பக்கமாக பார்க்கலாம். இத்தீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமையில் நீராடினால் பிடித்திருக்கும் நோய்கள் அனைத்தும் நீங்கும்.

**2. சிவகங்கை தீர்த்தம்:** இந்த தீர்த்தம் கச்சியம்பதியின் வார தீர்த்தங்கள் ஏழுனுள் சோமவாரத்திற்கு உரிய தீர்த்தமாகும். இத் தீர்த்ததலம் காஞ்சி திருவேப்பத் திருக்கோவிலின் மூன்றாம் பிரகாரத்தில் இறைவன் சந்நிதிக்கு முன்னே கீழக்கே அமைந்துள்ளது. இத் தீர்த்தத்தில் மூழ்குவோர் பாவங்களை போக்கி முக்தி அளிக்கிறது.

**3. மங்கள தீர்த்தம்:** மங்கள தீர்த்தம் எனப்படும் இத் திருக்குளம் காஞ்சி மாநகரின் வட பகுதிளில் உள்ள ஸ்ரீசங்கர மடத்திற்கு அருகில் உள்ளது. இத் தீர்த்தத்தில் செவ்வாய் கிழமைகளில் பக்தர்கள் நீராடி மங்களேசுவரனை வழிபட்டு வந்தால் எல்லா நலங்களும் பெற்று இன்புறுவார்கள்.

**4. இந்திர தீர்த்தம்:** இந்த தீர்த்தம் கச்சியம்பதியின் கீழ் எல்லையில் உள்ளது. கச்சிச் திருநகரின் கிழக்கு பகுதியில் திருநெறிக் காலைக்காட்டில் இந்த தீர்த்தம் உள்ளது. இத் தீர்த்தத்தில் எல்லா நாள்களிலும் மூழ்கி பயன் அடையலாம் என்றும் புதன் கிழமை முழ்குவோர் பிற நாள்களில் மூழ்குவோரின் பெரும் சிறப்பை பெறுவர்.

**5. காயா ரோகன தீர்த்தம்:** இந்த தீர்த்தம் காஞ்சி தெற்கில் வேகவதி நதியின் வடகரையில் உள்ள காயா ரோகணப் பெருமாள் கோவிலில் உள்ளது. இந்த தீர்த்தத்தில் வியாழக்கிழமை மூழ்குவதே சிறப்பு. இந்த கிழமையில் மூழ்குவோர் பொருட் செல்வத்தையும், கல்வி செல்வத்தையும், எல்லா நலன்களையும் எளிதில் பெறுவர்.

**6. உலகாணி தீர்த்தம்:** இத் தீர்த்தம் காஞ்சி மாநகரின் நடு நாயகனாக விளங்கும் காமாட்சி தேவியின் சந்நிதியில் உள்ளது. இத்தீர்த்தத்தில் வெள்ளிக்கிழமை மூழ்குவதே சிறப்பு. இந்த தீர்த்தத்தில் மூழ்குவோர்கள் யாவராயினும் அவர்களுக்கு முக்தி அளிக்கும். பாவம் செய்தவர்கள் இந்த தீர்த்தத்தில் மூழ்கினால் புண்ணிய வராகிவிடுவார்கள்.

**7. சர்வ தீர்த்தம்:** இந்த தீர்த்தம் காஞ்சி திருவேகம்பத்தின் மேற்கில் காஞ்சி– ஆற்காடு பஸ் நிலையம் அருகே உள்ளது. இத்தலத்தில் சனிக்கிழமை தீர்த்தமாவடுவது சிறப்பு. இத்தீர்த்தத்தில் மூழ்குவோர் இறைவனின் திருவருளால் தீராத கொடிய பாவங்கள் தீரப்பெற்று எல்லா இன்பங்களையும் பெறுவர்.

# அருள்மிகு முத்தீசுவரர் திருக்கோவில்

அருள்மிகு முத்தீசுவரர் கோவில் ஆடிசன் பேட்டை பட்டு ஜவுளிக் கடைகள் நிறைந்து இருக்கும் வளாகத்தில், காந்தி சாலையில், அமைந்துள்ளது.

மூலவர் முத்தீசுவரர் கிழக்குப் பார்த்த வண்ணம் எழுந்தருளியுள்ளார்.

இங்கு விநாயகர், கருடேசுவரர், வள்ளி, தெய்வயானை உடனுறை சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணுதுர்கா அம்மன், திருகுறிப்புத் தொண்ட நாயனார் ஆகியோர் உள்ளனர்.


முத்தீஸ்வரர் திருக்கோயில்.

முன்னொரு காலத்தில் வாழ்ந்த காசிப முனிவருக்கு கத்துரு, சுபருனை என்று இரண்டு மனைவி இருந்தனர். இந்த இரண்டு பெண்களும், மற்றப் பெண்களை விட தாம்தான் மிக்க அழகு உடையவர்கள் எனப் பெருமைப்பட்டனர். திடீரென அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உண்டாகி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அதாவது, தம் கணவரிடம் சென்று அழகில் சிறந்தவர் யார் என்று கேட்பது, அவர் சரியாக கூறிவிட்டால் அவரே அழகில் சிறந்தவர் என்பதை முடிவு செய்தனர். அதன்படி கணவர் காசிபரிடம் சென்று கேட்டனர்.

இவர்களின் ஒப்பந்தத்தை அறியாத காசிபர், கத்துருவே அழகி என்று கூற, கத்துரு மிக்க மகிழ்ந்து சுபருணையை ஒப்பந்தப்படி சிறையில் அடைத்தாள்.

சுபருனையின் மகனான கருடன் தாயைப் பார்க்க வந்து, தாயின் நிலையை அறிந்து வருந்தி, தாயிடமே இதற்குத் தீர்வுகாண ஒரு வழியினைக் கேட்டான். அதற்கு சுபருனை கருடனைப் பார்த்து மைந்தா தேவர்களிடமிருக்கும் அமிர்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கூறினாள்.

தாயின் கட்டளையை ஏற்று, கருடன் தேவலோகம் புறப்பட்டான். தேவலோகம் அடைந்த கருடன் அங்கு அமுதத்திற்குக் காவலாக இருந்த தேவர்களை தன் சிறகுகளால் அடித்து வீழ்த்திவிட்டு அமுதக் கலசத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

தேவேந்திரன் இதை அறிந்து ஐராவதத்தின் மீது ஏறிவந்து கருடனைத் தடுத்தான். கருடன் இந்திரனுடன் சண்டையிட்டான்.

கருடனின் ஆக்ரோசமான சண்டையால் இந்திரன் தாக்குப் பிடிக்க முடியாமல் சண்டையிட்டுக் கொண்டே, திருமாலை துணைக்கு வர மனதில் நினைத்தான். திருமாலும் உடன் வந்து கருடனுடன் சண்டையிட்டார்.

திருமால் சுமார் 21 நாட்கள் கருடனுடன் சண்டை யிட்டார். அவரும் களைத்துப்போனார். நேரடியாகச் கருடனை வெல்ல முடியாது என அறிந்து, சூழ்ச்சியால் வெல்ல நினைத்தார்.

போரை நிறுத்திவிட்டு கருடா, உன் போர் திறமையால் நாம் மகிழ்ந்தோம், உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு கருடன் அச்சுதா, நீ எனக்குக் கொடுப்பது இருக்கட்டும் நீ உனக்கு என்ன வேண்டும் என்று என்னிடம் கேள் என்றான். இதுதான் சரியான நேரம் என்று திருமால் உன்னுடைய வீரத்தையும், திறமையையும் நானே இன்று கண்டேன். எனவே நீ எனக்கு வாகனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அச்சுதனின் சூழ்ச்சியை அறிந்து, தெளிந்த கருடன் அச்சுதா இந்த அமிர்தத்தை என் தாயிடம் கொண்டு கொடுத்து விட்டு வந்தப் பின்பு, உமக்கு வாகனமாக ஆகிறேன் எனக்கூறி, அமுத கலசத்தை எடுத்துக் கொண்டு தாயிடன் சமர்ப்பித்து தாயை விடுதலை அடையச் செய்தான்.

தாய் சுபருணை கருடனைத் தழுவிக் கொண்டு நான் வணங்கிய ஈசன் தான் உன் உடனிருந்து இந்தக் காரியத்தை நிறைவேற்றி இருக்கிறார் எனக் கூறினார். அதற்கு கருடன் அப்படியானால் நீ வணங்கிய ஈசன் எங்கு உள்ளார் எனக் கேட்டார்.

அதற்கு சுபருணை காஞ்சீபுரம் முத்தீச தலத்திலே ஈசனை வணங்கினேன் என்று கூறினார்.

கருடன் தாயிடம் கூறிக் கொண்டு காஞ்சியை அடைந்தான். முத்தீசுவரரைத் தரிசித்து வழிபட்டான்.

இத்தலத்தில் 63 நாயன்மார்களுள் ஒருவரான திருக்குறிப்புத் தொண்டர் ஈசனை வணங்கிப் பேறு பெற்றார்.

# அருள்மிகு சித்தீசுவரர் திருக்கோவில்

அருள்மிகு சித்தீசுவரர் கோவில் பெரிய காஞ்சீபுரம் என்று அழைக்கப்படும் சிவகாஞ்சி பகுதியில் இத்தலத்தில் இறைவன் முத்தீசுப் பெருமான் ஆவுடையாருடன் கூடிய நிலையில் இல்லாமல் பெரிய அளவிலான பாணலிங்கத் திருமேனி கொண்டு (ஆவூடையார் இல்லாலிங்கப் பகுதி மட்டும்) எழுந்தருளியுள்ளார். கோவிலின் கட்டிட அமைப்பு பல்லவ மன்னர்களின் காலத்து பாணியில் அமையப் பெற்றுள்ளது.

உமையவள்–காஞ்சியில் எழுந்தருளியப் பின்பு, தினமும் கம்பை நதியின் கரையிலே விருப்பத்துடன் ஈசனை வழிபட்டு வந்தாள் தினந்தோறும் அவள் மஞ்சள் பூசி நீராடுகையில், மஞ்சள் கலந்த அந்த நீர் ஒரு ஆறாகப் பெருகி ஓடியது.

மஞ்சள் கலந்து ஓடிய நீரின் நிறம் மஞ்சளாக இருந்ததால் அதற்கு மஞ்சள் நதி எனப் பெயர் விளங்கலாயிற்று. அன்னையின் வழிபாட்டில் மகிழ்ந்த ஈசன் அன்னைக்குத் தரிசனம் தர வேண்டும் என நினைத்து அந்த மஞ்சள் நதியின் கரையிலே ஓரிடத்தில் எழுந்தருளி நடனம் புரிந்தார். முனிவர்களும், தேவர் பெருமக்களும் இத்தலத்தில் எழுந்தருளி, நடனம் புரிந்த ஈசனை வணங்கி, மஞ்சள் நீர்க் கூத்தன் எனப் பெயர் சூட்டி வழிபட்டனர்.

பல சித்தர்கள் இத்தலத்திற்கு வந்து ஈசனை வழிபட்டு அஷ்டமா சித்தகளைப் பெற்றுள்ளனர். அதனால் இத்தலம் சித்தீசம் என்றும், வழிபடப்பட்ட ஈசனுக்குச் சித்தீசர் என்றும் பெயர் சூட்டினர்.

இறைவன் வழிபாட்டுக்காக சித்தர்களால் உண்டாக்கப்பட்ட கிணறு சித்த தீர்த்தம் என வழங்கப்படலாயிற்று. ஞாயிற்றுக்கிழமையிலும், சனிக்கிழமையிலும் அத்தீர்த்தத்திலே பக்தியுடன் நீராடி, ஈசனை (சித்தீசர்) வழிபடுவோருக்கு நோய் விலகும்.

# அருள்மிகு மரகதாம்பிக்கை உடனுறை மணிகண்டேசுவரர் திருக்கோவில்



மணிகண்டேசுவரர் கோவில் காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாள் கோவிலுக்குச் செல்லும் வழியில் உள்ளது.

மூலவர் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். முன் ஒரு சமயம் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. இந்தச் சண்டையால் இருவரின் பக்கத்திலும் அநேகம் பேர் மாண்டனர், இதனால் கவலை அடைந்த தேவர்களும், அசுரர்களும் என்னச் செய்வது என்று யோசித்து பிரம்மனை அணுகி இறவாதிருக்க ஒரு வழியைக் கூறுமாறு கேட்டனர்.

பிரம்மன் அவர்கள் அனைவரையும் மகாவிஷ்ணுவிடம் அழைத்துச் சென்றார். மகாவிஷ்ணு இவர்களின் கோரிக்கையைக் கேட்டு அதற்கு ஒரு வழியைக் கூறினார். அதாவது, பாற்கடலைக் கடைந்து அதன் அடியில் இருக்கும் அமிர்தத்தை எடுத்து உண்டால் இறவாது இருக்கலாம் என்று கூறினார்.

உடனே தேவர்களும், அசுரர்களும் கடலைக் கடைவதற்கான வழியைக் கேட்டனர். மகாவிஷ்ணு, மந்திரமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாக வைத்துக் கடலைக் கடையும்படி கூறினார்.

தேவர்களும் அசுரர்களும் அவ்வாறே செய்தனர் கடலைக் கடையும் போது மந்திர மலையானது கடலினுள் அமிழ்ந்தது. மகாவிஷ்ணு ஆமைவடிவம் கொண்டு மந்திரமலையைத் தாங்கிப் பிடித்தார்.

பிறகு இருதரப்பினரும் கடலைக் கடைய வாசுகியான பாம்பின் உடல் வலி தாங்காமல் தம் வாயில் இருந்த விஷத்தை கடலில் கக்கி விட்டான். இதனால் கடலிலிருந்து விஷம் ஒன்று திரண்டு புறப்பட்டு உலக உயிர்கள், தேவர்கள் அசுரர்களைத் தாக்கியது. பிரம்மனையும், விஷ்ணுவையும் அந்தக் கொடிய விஷம் தாக்கியது. இதனால் வருத்தம் அடைந்த அனைவரும் கைலாய மலைக்குச் சென்று சிவபெருமானிடம் முறை யிட்டனர்.

சிவபெருமான் இவர்களின் கோரிக்கையைக் கேட்டு புன்முறுவலுடன் கண்ணைமூடி அக்கொடிய விஷத்தைத் தன் உள்ளங்கையில் சிறு உருண்டைவடிவில் வரச்செய்தார்.

பின்பு பார்வதியைப் பார்த்து தேவி, இந்த விஷ உருண்டை மீது உன் குளிர்ந்த பார்வையைச் செலுத்து – அது விஷத்தின் வீரியத்தைக் குறைக்கும் எனக்கூற, மலைமகளும் அவ்வாறே செய்தார். விஷம் குளிர்ந்தது. ஈசன் அவ்விஷத்தைப் பருகி தன் கண்டத்தில் நிலைக்கச் செய்தார். எனவே ஈசனுக்கு மணிகண்டேசர் என்று பெயர் வந்தது.

மேலும் தேவர்களும் அசுரர்களும் தங்களால் ஈசனுக்கு விஷம் அருந்த வேண்டிய நிலையை உருவாக்கியதற்காக வருந்தி, இந்த பாவம் தீர காஞ்சிக்கு வந்து லிங்கத் திருமேனியைத் நிறுவி அத்திருமேனிக்கு மணிகண்டேசர் எனப் பெயரிட்டு வணங்கி வழிபட்டனர் என்பது புராண வரலாறு ஆகும்.

இறைவன் மேற்கு முகமாக எழுந்தருளியுள்ள திருக்கோவிலை வலம்வந்தால் – வருவதால் மறுபிறப்பு இல்லை என்று ஆன்மீகச் சான்றோர்கள் கூறியுள்ளனர். இவ்வாறு நோக்கியுள்ளச் சந்நிதிகள் பல காஞ்சியில் உள்ளன அவைகளில் சில பின்வருமாறு:-

1. அருள்மிகு இட்டசித்தீசப் பெருமான்.
2. அருள்மிகு மணிகண்டேசுவரப் பெருமான்.
3. அருள்மிகு திருகாலஞானேசுவரப் பெருமான்.
4. அருள்மிகு கச்சிநெறிக்காரைக் காடர் பெருமான்.
5. அருள்மிகு கச்சி மயானேசுவரப் பெருமான்.
6. அருள்மிகு சிதம்பரேசுவரப் பெருமான்.

– பிள்ளையார் பாளையம்.

இது போன்ற பல திருக்கோவில்கள் உள்ளன.

# சித்ரகுப்தர் திருக்கோவில்

## (நெல்லுக்கார வீதி)



தமிழ்நாட்டில் சித்ரகுப்தருக்கு என்று அமைந்துள்ள ஒரே கோவில் காஞ்சீபுரத்தில் தான் உள்ளது. இந்த தலத்தில் செல்வ விநாயகர் சன்னதி, இராமலிங்க அடிகள் சன்னதி, ஐயப்பன் சன்னதி, விஷ்ணு துர்க்கை சன்னதி, நவக்கிரகங்களின் தனிச்சன்னதி ஆகிய சன்னதிகள் கோவிலினுள் அமைந்துள்ளன.

காஞ்சீபுரம் பேருந்து நிலையத்திற்கு வடக்கில், நெல்லுக்காரத் தெருவின் மையத்தில் மெயின் ரோட்டோரத்திலேயே இத்தலம் அமைந்துள்ளது. பேருந்து நிலையத்திலிருந்து 5 நிமிட நடைப்பயணத்தில் நடந்தே வந்தடைந்து விடலாம்.

மூலவர் சித்ரகுப்தர் தெற்கு பார்த்த வண்ணம் எழுந்தருளியுள்ளார். எமதர்மன் ஒரு சமயம் கயிலாயத்தில் சிவபெருமானைச் சந்தித்து, பிரம்மதேவனால் படைக்கப்படும் உயிர்களின் பாவ புண்ணியங்களை கணக்கிட்டுத் தண்டனை வழங்குவதில் சற்று சிரமமாக இருப்பதாகவும், அதற்கென்று தனக்கு ஒரு உதவியாளர் தேவை என்றும் கூறினார்.

உடனே சிவபெருமான், பிரம்மதேவனை வரச்செய்து எமதர்மனின் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கட்டளையிட்டார்.

ஒருநாள் சூரியன் ஆகாய மார்க்கமாகத் தன் பயணத்தை தொடரும்போது, ஒளிக் கதிர்கள் கடல் நீரில் விழுந்து பல வண்ண ஜாலங்களை ஏற்படுத்தின. அப்போது கடல் நீர்ப்பரப்பில் நீலாதேவி என்னும் பெண் தோன்றி, சூரியனின் மீது ஆசைப்பட்டு சூரிய பகவானைத் தழுவினாள்.

இதனால் அவளுக்கு ஓர் ஆண்குழந்தைப் பிறந்தது. குழந்தைப் பிறந்தவுடன் நீலாதேவி அந்த கடல் நீர் பரப்பினுள் மறைந்தாள்.

அந்த குழந்தைப்பிறந்த நேரம்-சித்திரை மாதம் பவுணர்மி தினம் (சித்ரா பவுர்ணமி நன்னாள்) சித்திரை நட்சத்திரத்தில் தோன்றிய அக்குழந்தையே சித்திரகுப்தர் ஆவார்.

இவர் பிறக்கும் போதே அழகாகவும், இடக்கையில் ஓலைச்சுவடிகள், வலக்கையில் எழுத்தாணி கொண்டும் பிறந்தார்.

இவர் இமயமலை சாரலில் கடும் தவம் புரிந்து பல சக்திகளைப் பெற்றார். பிறகு தந்தை சூரியபகவானின் விருப்பப்படி எமனுக்கு உதவியாளராக பணியில் சேர்ந்து பணியாற்றுகிறார் என்று ஆன்மீக அறிஞர்கள் கூறியுள்ளனர்.

தென் இந்தியாவில் உள்ள ஒரே திருக்கோவில் என்று பெருமையைப் பெறுகிறது இத்திருக்கோவில். நவக்கிரகங்களில் கேது பகவானுக்கு உரிய அதிதேவதையாக சித்திரகுப்தர் விளங்குகிறார் என்று ஜோதிட வல்லுனர்கள் கூறுகின்றனர்.

கேதுவை மோட்சம் அளிக்கும் கிரகம் என்பர். யார் யார் மோட்சம் செல்வர் என்று உயிர்களின் கணக்குகளை கையில் தயாராக வைத்துக்கொண்டிருப்பவர் தான் சித்ரகுப்தர் ஆவார்.

இத்தலம் மிகச்சிறந்த ராகு-கேது பரிகார தலமாக விளங்குகிறது. அந்த பரிகாரம் எப்படி செய்ய வேண்டும் தெரியுமா? கொள்ளு, உளுந்து (கொள்ளு-கேது, உளுந்து-ராகு), வண்ணத்துணி (அவரவர் சக்திக்கு ஏற்ப) தட்டில் வைத்து அர்ச்சனை செய்து, துணியை ஆலயத்தில் கொடுத்துவிட வேண்டும். அதன்பிறகு கொள்ளு, உளுந்தை பசுவிற்குத் தந்துவிடவேண்டும். இதனால் ராகு, கேது, தோஷம், அகலும்.

இத்திருக்கோவில் கருணீகர் மரபினர்களால் கணக்குப் பிள்ளைமார்களால் நிர்வகிக்கப்படுகிறது.

காலை 7.00 மணி முதல் 11.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் கோவில் திறந்திருக்கும்.



# அபிராமேஸ்வரர் கோவில்

## (திருமால் வழிபட்ட தலம்)

காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் கோவில் தெருவில் அபிராமேஸ்வரர் கோவில் உள்ளது. இந்திரனுக்கு உதவும் வகையில் பகவான் திருமால், வாமன உருவம் எடுத்து வந்து மாவலி அசுரனிடம் 3 அடி நிலம் கேட்டு, மாவலியை ஒடுக்கினார். திருமால் இத்தலத்துக்கு வந்து அபிராமேசுவரர் லிங்கத்தை வழிபாடு செய்தார். இங்கு திருமால் ஏற்படுத்திய ''வாமன தீர்த்தம்'' உள்ளது. இந்த ஆலய வழிபாடுகள் பற்றி மேலும் தகவல்களை சுரேஷ் அய்யரிடம் 9894541248 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.



# பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் நூதன மண்டபம்

**கா**ஞ்சீப்பெரியவர் என்று பக்தர்களால் ஆத்மார்த்தமான அன்புடன் அழைக்கப்பட்டவர் பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். 100 ஆண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு ஆசி வழங்கிய அந்த மகான், ஈசனடி சென்ற பிறகு காஞ்சீபுரத்தில் உள்ள சங்கர மடத்திலேயே அனுஷ்டானம் செய்யப்பட்டார். அந்த அனுஷ்டானத்துக்குள் இருக்கும் மகா பெரியவர்–வின் சிலை நம்மையெல்லாம் ஈர்த்து இழுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் தான் அந்த அனுஷ்டானத்துக்கு செல்லும் ஒவ்வொரு தடவையும் உண்மையான பக்தர்களுக்கு சிலிர்ப்பு ஏற்படுகிறது.

இதன் மூலம் காஞ்சீபெரியவர் இன்றும் தங்களுக்கு அருளாசிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார் என்று நம்புகிறார்கள். இத்தகைய மாண்புடைய காஞ்சீப்பெரியவருக்கு காஞ்சீபுரம் ஒரிக்கையில் முழுக்க–முழுக்க கருங்கல்லால், பிரம்மாண்டமான மணி மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

காஞ்சீப்புரத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சேர, சோழ, பாண்டிய பல்லவ மன்னர்களால் கட்டப்பட்ட ஏராளமான கற்கோவில்கள் உள்ளன. காலத்தை வென்று நிற்கும் அந்த கோவில்கள் போலவே காஞ்சீப்பெரியவரின் மணி மண்டபம் உருவாக்கப்பட்டுள்ளது. தஞ்சை கட்டிடக்கலை பாணியில் 1997ல் தொடங்கப்பட்ட இந்த மண்டப கட்டுமான பணிகளுக்கு பெங்களூர், வேலூரில் இருந்து வெள்ளை மற்றும் கருங்கற்கள் எடுத்து வரப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

மேரு வடிவிலான கூரை, தஞ்சை கோவில் கோபுரம் போன்று இந்த மண்டப கோபுரம் ஒரே கல்லில் 7 அடி உயரத்தில் செய்யப்பட்டுள்ளது. மகாமண்டபம் 100 தூண்களுடன் 250 அடி நீளம், 100 அடி அகலத்தில் கண்ணைக் கவரும் வகையில் உள்ளது. மண்டபத்தூண்களில் உள்ள யானை, குதிரை, யாளி சிலைகள் வியக்க வைக்கின்றன. கருவறையில் 3 1/2 அடி உயர பெரியவரின் சிலா ரூபம் உள்ளது. அதன் முன்பு பெரியவர் பயன்படுத்திய ஒரு ஜோடி பாதுகை வைக்கப்பட்டுள்ளது.


அந்த காலத்து கட்டிடக் கலை இப்போது உயிர்பெற்று வருவதை இந்த மணி மண்டபத்துக்கு சென்று பார்த்தால், நேரில் உணரலாம். அதோடு காஞ்சீப்பெரியவரின் ஆசியும் நமக்குகிட்டும். எனவே காஞ்சீத்தலங்கள் சுற்றிப் பார்க்க புறப்படும் முன்பு உங்களது தரிசனப் பட்டியலில் மறக்காமல் காஞ்சீப்பெரியவரின் மணி மண்டபத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# சத்த தானத் தலங்கள்

(ஏழு முனிவர்கள்– சப்த ரிஷிகள் வழிபட்ட தலங்கள்)

காஞ்சீபுரத்துக்கு ஏழு முனிவர்கள் வருகை தந்து, சிவலிங்கம் ஸ்தாபித்து நாள்தோறும் வழிபட்டனர். அந்த தலங்கள் ஏழும் மஞ்சள் நீர்க் கால்வாயின் கரையில் அமைந்துள்ளன. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் இந்த ஆலயங்கள் வியாச சாந்தலீஸ்வரர் தலத்தைச்சுற்றியே அமைந்துள்ளன.

சத்ததான கோவில்கள் அனைத்தும் சிறிய வடிவில் கருவறை மட்டுமே கொண்ட கோவில்களாக அமைந்துள்ளன.



அத்திரி முனிவர்

அத்திரி முனிவர், குச்ச முனிவர், வசிட்ட முனிவர், பிருகு முனிவர், சௌதம முனிவர், காசிப முனிவ, அங்கிரா முனிவர் ஆகிய 7 முனிவர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டு அவர்களது பெயராலேயே இறைவனும் வழங்கப்பட்டான்.

முன்னொரு காலத்தில் அத்திரி, குச்சன், வசிட்டன், பிருகு, கௌதமர், காசிபர், மற்றும் அரங்கிரா ஆகிய ஏழு முனிவர்கள் தவத்தின் சிறப்பையும், பெருமையையும், அதனால் எற்படும் பயனையும் அறிந்து ஒன்றுகூடி இமயமலையில் அருகருகே அமர்ந்து தவம் செய்து கொண்டு இருந்தனர். இவர்களுடைய ஒழுக்கத்தையும் தவம் செய்யும் நேர்த்தியையும் பார்த்து மகிழ்ந்த பிரம்தேவன், அவர்கள் முன்தோன்றி 'முனிவர் பெருமக்களே, எதற்காக வேண்டி நீங்கள் தவம் செய்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு முனிவர்கள் முத்தி இன்பத்தை அறிவில் குறைந்தவர்களும் பெறத் தகுந்த வழியை–உபாயத்தைச் சொல்லவேண்டும்'' என்று கூறினார்.

முனிவர்களே! தருமம் என்று சொல்லப்படும் ஒன்றே ஒன்றுதான் சிவபெருமானுடைய உள்ளத்தை மகிழ்வடையச் செய்யும். அம்மகிழ்ச்சியால் அவருடைய–திருவருளால் கிடைப்பதற்கு அரிய முத்திப்பேறு கிடைக்கும். அத்தர்மம் இரண்டு வகைப்படும். ஒன்று சிவதர்மம் என்கிற சிவபுண்ணியம் எனவும் மற்றது உலகதர்மம் என்கிற பசு புண்ணியம் என்றார்.

"மேலும் பிரமன் முனிவர்களிடம் சிவலிங்கத்தைப் பதிட்டை செய்து நாள்தோறும் அபிஷேகம் செய்து, வணங்கி, அர்ச்த்து, வழிபட்டு வருதல் என்பது ஏனைய சிவபுண்ணியங்களுள் சிறப்பானதாகும். அதோடு மட்டுமல்லாமல் சிவனடியார்களுக்குச் செய்யும் பூசையும் மிகச் சிறப்புடையதாகும். இத்தொண்டுகள் அனைத்தும் முத்தி தரும் இறைவனான சிவபெருமான் அமர்ந்திருக்கும் சிவத்தலங்களில் செய்தால் பயன் அதிகமாகும். அப்படிப்பட்ட சிவத்தலங்களில் ஒன்றான காஞ்சியம்பதியில் செய்வது அநேககோடி மடங்கு அதிகமான பயனைத் தரும்'' என்றார்.

தாமரை மலரில் வாசம் செய்யும் பிரம்மதேவர் கூறியவற்றையெல்லாம் கேட்ட முனிவர்கள் அனைவரும் ஒன்று கூடி காஞ்சிக்குப் புறப்படலாயினர். காஞ்சியை நினைத்தால் காசியில் வசித்த புண்ணியம் வரும். காஞ்சியே எல்லாத் தலங்களிலும் சிறந்ததாகும்.

காஞ்சியை அடைந்த முனிவர் எழுவரும் ஏகம்பன் திருக்கோவிலினுள் அமைந்துள்ள சிவகங்கைத்தீத்தத்தில் நீராடித் திருவேகம்பப்பெருமாள் திருவடிகளை வணங்கி வழிபட்டு மகிழ்ந்து பின் மஞ்சள் நீர் நதிக் கரையினை அடைந்து வியாச சாந்தாலீசுவரருக்கு அருகில் தங்கள், தங்கள் பெயரால் லிங்கம் நிறுவி வழிபட்டு வந்தனர்.

ஏழு முனிவர்களால் பதிட்டை செய்யப்பட்ட லிங்கங்களின் அமைவிடம் வருமாறு:–

**1.அத்திரிசம், 2. குச்சேசம்:–** இவை இரண்டும் சின்ன காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள பச்சையப்பன் மகளிர்க்கல்லூரியின் வளாகத்தில் நுழைவு வாயிலைக் கடந்தவுடன் உள்ளே இடப்பக்கம் அமைந்துள்ளது.

ஒரே கருவறையில் கிழக்கு நோக்கியவாறு ஒரு சிவலிங்கம் ஆவுடையாருடனும், மற்றொன்று அதன் பக்கத்தில் பாணத்துடனும் உள்ளன. இவை இரண்டும் அத்திரி, குச்சன் முனிவர்கள் வழிபட்டவையாகும்.

**3.ஆங்கீரேசன்:–** சாந்தாலீசுவரர் கோவிலுக்குச் செல்லும் சாலையில் திருக்கோவில் பூசை செய்யும் குருக்கள் வீட்டினை ஒட்டியுள்ள சின்ன செட்டில் இச்சிவலிங்கம் உள்ளது.

**4.வசிட்டேசம்:–** அருள்மிகு சாந்தாலீசுவரர் திருக்கோவிலுக்கு எதிரில் திருக்குளம் அமைந்துள்ளது இத்திருக்குளத்தில் தெற்குக் கரையில் வசிட்டர் வழிபட்ட லிங்கம் அமைத்துள்ளது.

இச்சிவலிங்கம் வெடித்துப் பின்பு கூடியதால் இப்பெருமான் வெடித்துக் கூடிய வசிட்டேசர் என்று அழைக்கப்படுகிறது.

**5. கௌதமேசம்:–** இச்சிவலிங்கம் காஞ் சீபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் சாலையில் (கீழ் ரோட்டில்) வேகவதியாற்றின் பாலத்தைக் கடந்து சென்றால் செங்கல்வராயன் அவென்யூ வரும். அங்கே ஒரு தச்சுப்பட்டறைக்கு எதிரேயுள்ள வீதியில் ஒரு அரசமரத்தடியில் பாணலிங்க வடிவில் உள்ளது.

**6. காசிபேசம்:–** சின்ன காஞ்சீபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரிக்குச் செல்லும் வழியில் ஆற்றங்கரையம்மன் கோவில் வளாகத்தில் அம்மன் சந்நிதியக்குத் தெற்கில் உள்ளது. ஆவுடையாருடன் கூடிய லிங்கம்.



பிருகு முனிவர்

**7. பார்க்கவேசம்:–** காஞ்சீபுரம் ரங்கசாமி குளத்தையடுத்த தும்பவனம் தெருவின் தெற்கில் மந்தை வெளியை அடுத்து வேகதவதி நதிக்கரையில் அமைந்துள்ளது. ஆவுடையாருடன் கூடிய மூர்த்தி. பிருகு முனிவர் வழிபட்டது.

காஞ்சீபுரத்தில் கோவில்களை சுற்றிப்பார்க்கும் வாய்ப்பு கிடைத்தால் சப்தரிஷிகள் வழிபட்ட இந்த 7 லிங்கங்களையும் மறக்காமல் சென்று வழிபடுங்கள்.

# சிரிப்பாலே அரவணைக்கும் சீரடி சாய்பாபா

சீரடியில் வீற்றிருந்தாலும் சிந்தையில் நினைப்பவர்களின் உள்ளங்களை யெல்லாம் பூரித்துப் போகும் வகையில் அருளாற்றல் செய்பவர் சாய்பாபா.

அதனால்தான் அவரது மகிமை சமீபகாலமாக வெகு வேகமாக பரவி வருகிறது. அதை நிரூபிக்கும் வகையில் நாடெங்கும் சாய் மகானுக்கு கோவில்கள் உருவாகி வருகின்றன.

அந்த வகையில் காஞ்சீபுரம் வந்தவாசி சாலையில் சீரடி சாய்பாபாவுக்கு தனி கோவில் உள்ளது. அவர் சன்னதி மேல், "உன் சுமையை நான் சுமப்பேன். இனி என்ன பயமோ? என்னை நம்பு, வாழ்வை நடத்து. ஐயம் அதை விலக்கு என்ற பாபாவின் அருள்மொழி எழுதப்பட்டுள்ளது.


சீரடி சாய்பாபா

ஆலயத்தின் மற்றொரு பகுதியில் 11 பொன்மொழிகளையும் எழுதி வைத்துள்ளனர். இத்தலத்தில் அண்ணாமலையார், சக்தி அம்மன், சக்தி விநாயகர், ஆஞ்சநேயருக்கு தனி, தனி சன்னதிகள் உள்ளன.

இங்கு சிரித்த முகத்துடன் இருக்கும் பாபா, நம்மை அழைத்து ஆசீர்வதிப்பது போல இருக்கிறார். அவர் காலில் வெள்ளி தண்டைகள் அணிவிக்கப்பட்டுள்ளன.

குழந்தை வரம் கேட்டு பாபாவை அணுகுபவர்கள், பலன் கிடைத்ததும், இப்படி பாபாவுக்கு தண்டை வாங்கி வந்து அணிவிக்கிறார்களாம்.

## காஞ்சியில் நவக்கிரக தலங்கள்

காஞ்சீபுரத்தில் உள்ள நவக்கிரக தலங்கள் வருமாறு:-

1. சூரியன்- பரிதீஸ்வரர் (பஞ்சுப்பேட்டை விதைப் பண்ணை அருகில்).
2. திங்கள்- சந்திரேசுவரர் (வெள்ளைக்குளம்)
3. செவ்வாய்- செவ்வந்தீஸ்வரர் (பஞ்சுப்பேட்டை விதைப் பண்ணை உள்புறம்)
4. புதன்- திருமேற்றீஸ்வரர் (திருக்காலிமேடு).
5. குரு- காயாகாரேனஸ்வரர்
6. சுக்கிரன்- இஷ்ட சித்திஸ்வரர் (கச்சபேஸ்வரர் ஆலயத்துக்குள்).
7. சனி- மணிகண்டீஸ்வரர்
8. ராகு/ 9. கேது- மகாளீஸ்வரர் கோவில்

மேலும் தகவல்களுக்கு:

சந்தானம்: 9443388833, 9003388833.

# அருள்மிகு திருலோக்கியநாதர் சுவாமி திருக்கோவில்

## (சமண - ஜைனர் - கோவில் (திருப்பருத்திக்குன்றம் - பிள்ளையார்பாளையம்)

காஞ்சீபுரம் பஸ் நிலையத்திலிருந்து தென்மேற்குத் திசையில் பிள்ளையார் பாளையம் பகுதியை அடுத்துச் செல்லும் பெரும்பாக்கம் வழியில் வேகவதி ஆற்றின் கரையில் அருள்மிகு திருலோக்கிய நாதர்சுவாமி கோவில் அமைந்துள்ளது.

இத்தலம் அமைதியான, அருமையான, தனிமையான சூழலில் அமையப் பெற்றுள்ளது.

இங்கு கிழக்குப் பார்த்தசந்நிதி உள்ளது. கோவிலின் நுழைவாயில் 3 நிலைக்கொண்ட ராஜகோபுரத்துடன் அமைந்துள்ளது. கோவிலின் உள்ளே செல்ல சுமார் 4 அடிப் பள்ளத்தில் இறங்கிச் சென்றால் சமதளத்தை அடையலாம்.

முதலில், கொடி மரமும் அடுத்து பெரிய பலிபீடமும் அதற்கு அடுத்து சங்கீத மண்டபமும் அதற்கு அடுத்து முக மண்டபமும் அதற்கு அடுத்து பிராகாரம் மற்றும் மூலவர் பீடமும் அமைந்துள்ளது.



மூலவர் சமய சமயத்தின் 24-வது தீர்த்தங்கரரான மகாவீரர் வர்த்தமானார் - ஆதிபகவன் என்கிற திருலோக்கியநாதர் பத்மாசனத்தில் அமர்ந்தவாறு யோகத்திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

மூலவருக்குத் தெற்கில் (வலது புறத்தில்) ஸ்ரீதர்ம தேவி அம்பாள் தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

மூலவருக்கு வடக்கில் (இடது புறத்தில்) ஸ்ரீ புஷ்பநந்த சேனாச்சாரி சாமிகள் தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

கோவிலின் வெளிப்பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் பிரம்ம தேவர்க்கென்று தனிச்சந்நிதி அமைந்துள்ளது. அதில் பிரம்மதேவர் அமர்ந்த திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

வெளிப்பிராகாரத்தில் மூலவர் எழுந்து அருள் புரியும் கட்டிடத்தின் நேர்பின் பகுதியில் இத்திருத்தலத்தின் தலமரம் அமைந்துள்ளது. இத்தலமரம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என இத்திருக்கோவிலினுள் எழுதி வைக்கப்பட்டுள்ளது. இத்தலமரத்திற்கு தர்மகுரா என்று பெயர்.

கோவிலின் வெளிப்பிராகாரத்தில் ஒரு பெரிய வட்டக் கிணறு உள்ளது. இக்கிணறு இத்தலத்தின் தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இக்கிணறு மூவேந்தர்களால் செய்வித்தக் கிணறு என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கிணற்றுக்கு எதிரில் -வடக்கே முனிவாசர் என்கிற பார்சுவநாதரின் (23-வது தீர்த்தங்கரர்) சந்நிதி அமைந்துள்ளது.

கோவினுள் மூலவர் மகாவீரர், தர்மதேவி அம்பாள், புஷ்பநந்த சுவாமி ஆகியோர் தனித்தனிச் சந்நிதிகளில் எழுந்து அருள் புரிகிறார்கள். கட்டிடங்களின் பின்பகுதி கஜப்பிரஷ்ட வடிவில் அமையப் பெற்றுள்ளது.

திருலோக்கிய நாதர் கோவிலுக்குத் தென்மேற்கில் ஏரியை ஒட்டியுள்ள ஒரு இடம் அருணகிரிமேடு என்று அழைக்கப்பட்டு வருகிறது.

கோவிலினுள் அறத்தைப் பற்றியும் - தர்மத்தைப் பற்றியும், ஒழுக்கத்தைப் பற்றியும், மனிதன் இப்படிதான் வாழ வேண்டும் என்று நல் உபதேசங்களைப் போதித்து வந்த ஆச்சாரியார்களான 1. புஷ்பநந்த சேனாச்சாரியார், 2. அனந்தவீரிய வாமானாச்சாரியார், 3. சந்திரசீர்த்திச் சேனாச்சாரியார், 4. மல்லி சேனாச்சாரியார் ஆகியோரின் உடல் இங்கு நல்லடக்கம் செய்விக்கப்பட்டதாக கிரந்த மொழி கல்வெட்டுகளின் வாயிலாக அறியலாம். இந்த ஆச்சாரியார்கள் அடக்கம் செய்யப்பட்ட இந்த மேடையே அருணகிரிமேடு என்று அழைக்கப் படுகிறது.

இடைக்காலப் பல்லவர் காலக் கட்டத்தைச் சார்ந்தவரான சிம்மவர்மன் (கி.பி. 550-575-மன்னனாக இருந்த காலத்தில் வர்த்தமானீஸ்வரம் என்கிற ஜீன காஞ்சியில் - திருப்பருத்திக் குன்றத்தில் - சமண மதத்தின் 24-வது தீர்த்தங்கரர் ஆன பகவான் மகாவீரருக்காக இத்திருக்கோவிலைக் கட்டினார் (கட்டிய காலம் கி.பி. 566).

இம்மன்னனால் கட்டப் பட்டதே இந்த திருலோக்கியநாதர் சுவாமித் திருக்கோவில் ஆகும். பிறகு முதலாவது குலோத்துங்க சோழனால் - கி.பி. 1070 - 1120-ல் (இவர் ராஜேந்திரன் என்றும் விஷ்ணுவர்த்தனன் என்றும் அழைக்கப்பட்டவர்) இத்திருக்கோவிலைத் திருத்தி அமைத்தார்.

அதன் பின்பு விஜயநகர மன்னரின் அமைச்சரான இருக்கப்பரால் கி.பி. 1387-ல் சங்கீத மண்டபம் கட்டப்பட்டது. இச்சங்கீத மண்டபம் மொத்தம் 24 தூண்களைக் கொண்டு மண்டபமாகத் திகழ்கிறது. இம்மண்டபத்தின் மேற்கூரைகளில் அழகிய பல வண்ண ஓவியங்கள் வரையப்பட்டு- அழியும் நிலையில் உள்ளது)

கோவிலின் தலவிருட்சமாகிய தர்மகுரா மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மேடையில், செதுக்கி வைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் இம்மேடையை அமைத்தவர் பல்லவச் சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கனாக இருக்க வேண்டும் என தோன்றுகிறது.

இந்த தர்குரா மரம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது ஆகும். இன்றும் நல்ல நிலையில் உள்ளது. இந்த மரம் அதிக உயரமாக வளராமலும் குட்டையாகக் குறுகாமலும், ஒரே தன்மை உடையது என்றும் இது அரசனது செங்கோலைக் காக்கும் திறனுடையது எனவும் தர்மத்தின் உறைவிடமாகத் திகழ்வது என்றும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அருந்தவ முனிவர் மூவரது உறைவிடங்களுக்கு முன்பாக இவ்விருட்சம் நிற்கிறது எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

# காஞ்சீபுரம்–20



1. காஞ்சீபுரத்தில் எங்கு பார்த்தாலும் கோவில்களாக உள்ளன. கோவில்களைச் சுற்றி நகரம் அமைந்துள்ளது.

2. காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோவில், காமாட்சி அம்மன் கோவில், வரதராசப் பெருமாள் கோவில் மூன்றும் குறிப்பிடத்தக்கன.

3. கச்சி என்பது காஞ்சீபுரத்தின் மரூஉ ஆகும். காஞ்சி என்பது வடமொழியில் கஞ்சி எனத் திரிந்து, தமிழில் 'கச்சி' என வழக்கில் வந்தது.

4. காஞ்சி என்னும் சொல்லுக்கு மகளிர் இடையில் அணியும் மேகலை என்பது பொருள்.

5. காஞ்சி எனும் திணைக்கு நிலையாமை என்பது பொருள். நிலையாமைக் கருத்துக்களைக் கூறும் தத்துவ வாணர்கள் நிறைந்த நகரமாகையால் இப்பெயர் பெற்றது.

**6. காஞ்சீபுரத்தை 'க–பிரமன், அஞ் சித்தல்–பூசித்தல், பூரம்–நகரம்' எனப் பிரித்து நோக்கினால் பிரமனால் பூசிக்கப்பட்ட நகரம் ஆகையால் காஞ்சீபுரம் எனப்பெயர் பெற்றது.**

7. பூவரசு மரங்களைக் காஞ்சி மரங்கள் என்று நம் முன்னோர் கூறினர். காஞ்சீபுரத்தில் பூவரசு மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் இந்த ஊருக்கு காஞ்சீபுரம் என்று பெயர் வந்ததாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

8. ஒற்றை மாமரத்தடியில் சிவபெருமான் அமர்ந்திருப்பதால் அவருக்கு ஏகாம்பரநாதர்' என்று பெயர் வந்தது. பழங்காலத்தில் இறைவனை மக்கள் மரத்தடியில் வழிபட்டு வந்தனர். பின்பு சிலை அமைத்து வழிபட்டனர். இந்த உண்மையை உணர்த்தும் வகையில் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் பெயர் விளங்குகிறது.

9. காஞ்சீபுரம் புறநகர், இடைநகர், அகநகர் என பிரிக்கப்பட்டு நகரம் அமைக்கப்பட்டுள்ளது.

10. பட்டுத்தொழில் இந்நகரில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. உலகத்தில் உள்ள பல நாடுகளுக்குக் காஞ்சியிலிருந்து பட்டுப் புடவைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

11. ஜரிகை தயார் செய்யும் தொழிலும் இங்குச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

12. உலகிலேயே சிற்பக் கலைக்குக் காஞ்சி ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

13. இவை எல்லாவற்றையும் விட ஆன்மீகப் பற்றாளர்களும், அறிவிற் சிறந்த சான்றோர்களும், சமயப் பெரியோர்களும், தமிழ் அறிஞர்களும், சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும், ரிஷிகளும், முனிவர்களும் இருந்தும், மறைந்தும், அருவமாகவும், உருவமாகவும், நடமாடும் நகரமாகவும் காஞ்சி திகழ்கிறது.

14. பொதுவாகத் தொன்மை காலத்தில் காஞ்சியில் 1008 சிவத்தலங்களும், 108 திவ்யதேசங்களும் இருந்தன என்று தொன்மைப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

15. காஞ்சீபுரத்து திருக்கோவில்களும், திருப்பதிகளும் இன்றைய நாளிலிருந்து சுமார் 1300 அல்லது 1400 ஆண்டுகளுக்கு முந்தையதாகும்.

16. தம்முடைய ஒரு பக்தனுக்குக் கிருஷ்ண பகவான் திருவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்தால் கிடைக்கக் கூடிய பலனை காஞ்சீபுரத்தில் தந்தார். அதனால் இதற்கு திருவேணி சங்கம நகரம் என்று பெயர் வழங்கியது.

**17. நடராஜ மூர்த்தி, வியாகக்கிரபாதருக்குப் பூர்வத்தில் இங்கு நிருத்த தரிசனம் காட்டிருளியதால் வியாக்கிரபுரவனம் என்றும், தம் பக்தனுக்காகத் திருமாலானவர் திருப்பாற்கடலில் தாம் வீற்றிருக்கும் கோலத்தை இங்கு காட்டியருளியதால் சிரராப்தி நகரம் என்றும், பெயர் பெற்றன.**

18. இந்த நான்கு நகரங்களுக்கு உட்பட்ட பிரதேசம் முன்பொரு சமயம் பிருமதேவன் செய்த அஸ்வமேத யாகத்திற்குச் சாலையாக அமைந்து விளங்கியதால் பிருமசாலையென்ற பெயரைப் பெற்றது.

19. காஞ்சிபுரத் திருத்தலத்துக்கு காஞ்சிபுரம், பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், மும்மூர்த்தி வாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்பீரபுரம், தண்டகபுரம், காஞ்சினபுரம், கச்சி, சத்தியவிரதரேத்திரம் என்னும் பதினைந்து திருநாமங்கள் உண்டு.

**20. இத்திருத்தலத்தில் முற்காலத்தில் சண்பக மரங்கள் நிறைந்திருந்ததால், சண்பகாரண்யம் என்னும் திருப்பெயரும் உண்டு. காஞ்சிபுரத்தில் நூற்றிஎட்டுச் சிவத்திருத்தலங்களும், பதினான்கு வைணவத் திருத்தலங்களும் அமைந்துள்ளன.**

# ஒரு நாள் போதாது

**கா**ஞ்சீபுரத்தில் உள்ள தொன்மை பழமை வாய்ந்த சைவ– வைணவத் தலங்களை ஒரே நாளில் தரிசித்து விடலாம் என்றால் நடக்காது. சிற்பங்கள் நிறைந்த ஆலயத்துக்குள் சென்று விட்டால் நம் சிந்தை அழகோவியங்களிடம் சிதறி விடும். நேரம் போவதே தெரியாது. மேலும் ஒவ்வொரு ஆலயத்தின் புராண சிறப்பையும் அது தரும் ஐதீகம் பலன்களையும் அறிந்து, வழிபட வேண்டும் என்றால் கூடுதல் நேரமாகும். எனவே காஞ்சீபுரம் தலங்களை தரிசனம் செய்ய புறப்படும் முன்பு, உங்கள் பயணத்தை திட்டமிட்டு அமைத்துக் கொண்டால், மிகவும் ஆத்மார்த்தமான இறையருளைப் பெறலாம்.

ஒரு நாள் முக்கிய சைவத் தலங்களை தரிசனம் செய்யலாம். மற்றொரு நாள் திவ்ய தேசங்களை சேவித்து விட்டு வரலாம். மொத்தத்தில் காஞ்சீபுரம் தலங்களை தரிசித்தால் பாவங்கள் நீங்கி, நிச்சயமாக புண்ணியம் சேரும். அதற்கு இந்த தொகுப்பை ஒரு வழி காட்டியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.